# LIGHT LITERATURE FOR TAMIL HOMES
## KUSIKA'S SHORT STORIES



*No. 5*

# குசிகர் குட்டிக் கதைகள்

முதல் எட்டு

அ. மாதவையர்

The Authors' Press & Publishing-House
MYLAPORE-MADRAS

PRICE TEN ANNAS 1924

COPYRIGHT

# குசிகர் குட்டிக் கதைகள்

## முதல் எட்டு

சிவனார் சிரித்த திரிபுரம்போல் இந்நாள்
நவமாக எம்மை நலியும்—அவமெல்லாம்
நான் சிரிக்க வேஅழிய நாவினின்று நீ மொழிக
தேன் சிரிக்கும் வெண்மலர் மாதே.

இவை

பத்மாவதி சரித்திரம், விஜயமார்த்தாண்டம், முத்துமீனாக்ஷி, உதயலன், திருமலைசேதுபதி, சித்தார்த்தன், புத்தசரிதை, பால ராமாயணம், பாலவிநோதக் கதைகள், பொது தர்மசத்கீதமஞ்சரி, புதுமாதிரிக் கலியாணப் பாட்டு, ஆசாரச் சீர்திருத்தம், பாரிஸ்டர் பஞ்சநதம், தில்லைக் கோவிந்தன் முதலிய பல பிரபலமான நூல் களின் ஆசிரியரும் பஞ்சாமிர்தம் பத்திராதிபருமான

அ. மாதவையர்

இயற்றியன

சென்னை
ஆசிரியர் அச்சுப்பிரசுராலயம்—புஸ்தகசாலை
எட்வர்டு எலியட் ரோடு—மயிலாப்பூர்

பத்தணா] 1924 [காபிரைட்

"மற்றெந்த ஜனசமூகத்தினும் அதிகமாக, ஹிந்து ஜனசமூகமானது, தானே நீக்கிக்கொள்ளக் கூடிய துயரங்களில் கிடந்து உழலுகின்றது"

—திவான் ராஜா ஸர் T. மாதவராயர்

"பெரு மதிப்புக் குரிய பெரியோரையும் ஏற்பாடுகளையும் மரியாதை செய்வது நமது கடமை யாகும். ஆனால், மனித சாதிக்கே விரோதிக ளாகும் மாந்தரை நன்கு மதிப்பதும்; உக்கி மக்கிக் கெட்டுப் போன பழக்க வழக்கங்களை, மறை பொருளான சமாதானங்க ளாலும் வாக்கு சாதுரியத்தினாலும் மழுப்பி, மேற் பூச்சுப் பூசி, நல்லன போல் காட்டி நன்கு மதிப்பதும், பாவங்களி லெல்லாம் பெரும்பாவ மாகும்"—J. N. பட்டாசாரியார்

# முகவுரை

இந்தக் கதைகள் முதலில் என் பெயரின்றி இங்கிலீஷில் ஹிந்து பத்திரிகையில் வெளிவந்த பொழுது பல்லாயிரர் படித்து மகிழ்ந்தனர். அவர்களுள் ஸர். பி. எஸ். சிவஸ்வாமியையர், திவான்பகதூர் நாகமையர் முதலியோர் சிலர், தமது வியப்பையும் உகப்பையும் பத்திராதிபருக்குத் தெரிவித்தனர். பிறகு ஹிந்து பத்திராதிபரான காலஞ்சென்ற ஸ்ரீமான் கஸ்தூரிரங்கையங்கார், இக்கதைகளை இரண்டு பாகங்களாகத் திரட்டி, தமது முகவுரையுடன், புஸ்தக வடிவில் வெளியிட்டார். அப்பதிப்புக்கள் செலவாகி, இங்கிலீஷ் இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளி வருகிறது. நமது வழக்கங்களில் சீர்க்கேடான வற்றை நயமாய் எடுத்துக் காட்டிக் கண்டிக்கும் இக்கதைகளை, நமது பெண்மக்களும் இங்கிலீஷ் தெரியாத பிறரும் படிக்க வேண்டுமென்று கருதி, அவற்றை ஒருவாறு தமிழில் மொழி பெயர்த்து, சுதேசமித்திரன் பத்திரிகை வாயிலாகச் சில வருஷங்களுக்கு முன் பிரசுரஞ் செய்தேன். இதுவரை இக்கதைகள் புஸ்தக ரூபமாகத் தமிழில் வெளிவந்ததில்லை. ஆண்பாலாரினும் அதிகமாகப் பெண்பாலாரும் ஆங்கிலப்பயிற்சி யில்லாதாரும் இவற்றைப் படித்து, இவற்றின் உட்கிடைகளைப் பற்றி உள்ளத்தில் ஊன்றி நினைத்துப் பார்த்து, முடிவான தீர்மானங்கள் செய்வது, நமது ஜனஸமுதாய முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும். இக்கதைகளைத் திரட்டி, மொழி பெயர்ப்பை நன்கு திருத்தி, இப்பொழுது சொற்ப விலையுள்ள புஸ்தகங்களாக வெளியிடுவது, இதைக் கருதியே. இவற்றைப் படிப்பவருள் ஒரு சிலரேனும் இவ்வழக்கங்களைப் பற்றி ஆழ்ந்து ஆலோசனை செய்வாராயின், அதுவே என் சிரமத்துக்குப் போதிய கைம் மாறாகும்.

அ. மாதவையர்

## கதைகளின் அட்டவணை


| | கதையின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 1. | குதிரைக்காரன் குப்பன் ... | 1 |
| 2. | அவனுலான பரிகாரம் ... ... | 10 |
| 3: | திரௌபதி கனவு ... ... | 26 |
| 4. | ஓர் அபாயகரமான திரிசக்கர வண்டி ... ... | 37 |
| 5. | எட்டுச் சுரைக்காய் ... ... | 47 |
| 6. | ".என்னை மன்னித்து மறந்து விடு" ... ... | 57 |
| 7. | கோடங்கி ராமுடு ... ... | 68 |
| 8. | பொய்யல்ல மெய்யே ... ... | 76 |

# குசிகர் குட்டிக் கதைகள்.

## 1. குதிரைக்காரன் குப்பன்




லூர் அக்கிரகாரம் நதியின் வடகரையிலிருக்கிறது. ஆற்றுப் பக்க முள்ள கொல்லைக ளெல்லாம் மர மடர்ந்த சோலைகளே. இரட்டை வரிசையாக ஐம்பது வீடுகளுள்ள அந்த அக்கிரகாரத்தின் மேலைக் கோடியில், பெருமாள் கோயி லிருக்கிறது. தெருவின்கீழ் கோடி திறந்த வெளி. இவ்வாறு வீதியின் ஒரு புறம் திறந்திருந்தாலும், தொன்று தொட்டு கீழ் ஜாதிக்காரன் எவனுமே அவ்வீதிக்குள் அடி யெடுத்து வைத்ததில்லை. நடுத்தெருவில் சில நாய்கள் படுத் திருந்து வெயில் காய்வ துண்டு. வண்ணான் கழுதை சில வேளை உட்புகுந்து மேய்வ துண்டு; ஊர்த் தோட்டிகளாகிய இரண்டு பன்றிகள், தம் எண்ணிறந்த சந்ததியுடன், காலை மாலை வந்துலாவிப் போவதுண்டு. மாடுகளுக்கோ அவ்வீதி தான் வீட்டுக் கொட்டில்களி லிருந்து வெளியே போகும் வழி. ஆனால், பூதேவர் வசிக்கும் அவ்வீதிக்குள், பஞ்சமர் எவருமே, எந்நாளுமே, கால் எடுத்து வைத்ததில்லை. பாலூரிற் பிறந்தோர் சிலர், ஹைகோர்ட்டு வக்கீல் களாகவும், ஹைகோர்ட்டு ஜட்ஜு ஸ்தானத்துக்கு வரக்கூடிய டிஸ்ட்ரிக்டு முனிசிபுகளாகவும், கலாசாலை உபாத்தியாயர்க ளாகவும், போலீஸ் டிப்டி சூப்ரண்டண்டாகவும் இருந்தபோதிலும், புராதன சுதந்தரங்களையும் வழக்கங்களையும் விட்டுவிடாது கைப்பற்றி நடப்பதில் தான், பாலூரார்க்கு அதிகப் பெருமை. அதனினும் அதிகப் பெருமை, ஒப்புயர் வற்ற வித்யா ரத்நமும், மேல் நாட்டுப் படிப்பால் நாட்டார் கெட்டுப் போகாமே தமது அரிய பெரிய பிரசங்கங்களால் தடுத்து வரும் சாஸ்திர சிரோமணியும், வைதீக தர்ம ஸம்ரக்ஷகரு மான மஹா மஹோபாத்யாய வேதாந்த கேசரி வாமன சாஸ்திரிகள் பாலூரிற் பிறந்தவர் என்பதே.

மாலை ஐந்து மணி யாய்விட்டது. சில பெண்கள் வீட்டு வாசல்களில் நீர் தெளித்து, அழகாகக் கோலம் போட்டுக் கொண்டிருந்தார்கள்; வேறு சில சிறு பெண்களும் தாய்மார்களும் சூரியனது பொன் போன்ற மாலைக் கிரணத்தால் பளபளவென்று ஜொலிக்கும் பித்தளைக் குடங்களில், ஆற்றி னின்றும் நீர் எடுத்து வந்து கொண்டிருந்தார்கள். பிறந்த மேனியிலேயே வெகுவாய் விளங்கும் சில குழந்தைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மற்றொன்றும் கவனிக்கலாம்: வீதியில் ஒவ்வொரு வீட்டு முன்றிலும் சுத்தமாயும் அழகாயும் அலங்கரிக்கப் பட்டிருப்பினும், இரட்டை வரிசையான வீடுகளிலிருந்து வெளியே பெருக்கித் தள்ளி ஒதுக்கப்பட்ட குப்பை கூளங்களும், பலவித அசங்கியமான வஸ்துக்களும், தெருவின் நடுவே ஒரு வரிசையாக மேடிட்டுக் கிடந்தன. அது எந்த வீட்டாருக்கும் சொந்த மில்லைப் போலும். ஒவ்வொரு வீட்டின் முன்றிலுக்கும் பக்கத்து வீட்டின் முன்றிலுக்கும் இடையிலும், இவ்வாறே, சிறியதோர் குப்பை வரிசையை எல்லை வரம்பு போல் காணலாம். ஆகவே தமது கிராமத்தை முழுவதும் சுத்தமாய் வைத்துக் கொள்ளும் விதத்தைப் பாலூரார் எவருமே இன்னும் கற்றில ரென்பது தெளி வாயிற்று. வேதாந்த கேசரி வாமன சாஸ்திரிகள், வருஷத்தில் பத்து மாதங்களை தேச சஞ்சாரம் செய்து திரவியம் சம்பாதிப்பதிலும், மற்றிரண்டு மாதங்களையும் தேடிப் பொருளைத் தம்மூரில் நிலம் வாங்கியோ அல்லது வட்டிக்குக் கொடுத்தோ சேமிப்பதிலும், சிரம பரிகாரஞ் செய்து கொள்வதிலும் கழிப்பார். இன்று மாலை, அவர், தம்மூர்ப் பெருமாள் கோயில் முன் மண்டபத்தில், தம் மூராரும் அயலூரார் சிலரும் வேண்டிக் கொண்டதற்கிணங்கி, "ஜீவகாருண்யம்" என்னும் விஷயத்தைப் பற்றிப் பிரசங்கஞ் செய்து கொண்டிருந்தார். சந்தியாவந்தன காலம் நெருங்கி விட்டதால், சாஸ்திரிகள் பிரசங்கத்தை முடிக்கும் தறுவாயில், தம்மூர் அயலூர் மகா ஜனங்களைப் பார்த்து, பின்வருமாறு பேசிக் கொண்டிருந்தார்:—

"ஸ்ரீ கிருஷ்ண பகவான், பகவத் கீதையிலே என்ன சொல்லி யிருக்கிறார்? 'வித்யா விநயஸம்பந்நே ப்ராமணே கவி ஹஸ்திநி சுநிசைவ ஸ்வபாகேச பண்டிதா ஸம தர்சண:' வித்தையும் விநயமும் ஸம்பூர்ணமாய் வாய்ந்த வேத வித்தாகிய பிராமணோத்தம னென்ன, பசுவென்ன, யானை

யென்ன, கேவலம் சுவானமென்ன, அந்த சுவானத்தையே பாகஞ் செய்து புஜிக்கும் அதமோதமனென்ன, இவர்களிடத்தி லெல்லாம் ப்ரும்மத்தை ஸமமாய்க் காண்பவன் தான் பண்டிதன் என்று சொல்லப்படுகிறான். அநாதியானதும், அகண்ட பரிபூரண மானதும், சர்வ வியாபக மானது மான ப்ரும்மம் ஒன்றே; இந்தத் தத்துவத்தை அறியும் ஞானிகள், நாம ரூப பேதங்களால் ஏமாறிப்போய் மயங்குவ தில்லை. ஜீவ கோடிகள் யாவற்றினுமே ஒரே ப்ரும்ம தேஜஸ் உள் நின்று ஆட்டி வைப்பதால், இந்தத் தத்துவத்தை உணர்ந்த ஞானி, அதமோதமனுகிய பஞ்சமன் ஒருவனையும் பிராமண சிரேஷ்டனையும் ஸமமாகவே பார்க்கிறான். மூடர்கள் தான்—"

இதற்குள் கோயிலைநோக்கி ஒரு குதிரை வரும் சத்தம் கேட்டது. மஹா மஹோபாத்யாய வேதாந்த கேசரி வாமன சாஸ்திரிகள் திடீரென்று தம் பிரசங்கத்தைச் சற்று நிறுத்தினர். மண்டபத்தி லிருந்த எல்லோரும் திரும்பிப் பார்க்கவே, கோயில் முன்பு அசுவாரூடராக ஒரு துரை நின்று கொண்டு, தன் குதிரையின் மூர்க்கத்தையும் படபடப்பையும் சாந்தப்படுத்த முயல்வதைக் கண்டார்கள். அந்த துரைதான், அந்த டிவிஷனுக்குப் புதிதாய் வந்திருக்கும் தங்கள் சப்கலெக்டர் என்பது கிராமத்தார் இரண்டொருத்தருக்குத் தெரியும். ஆகவே எல்லோரும் வெளியே வந்து, குதிரையை விட்டிறங்கி மண்டபத்துக்குள் விஜயஞ் செய்து தங்கள் உபசாரத்தைப் பெற்றுக் கொள்ளும்படி, துரையை வேண்டிக் கொண்டார்கள். இவ்வாறு பிரார்த்தித்தவருள், ஊருக்குப் பெரியவராகிய வாமன சாஸ்திரிகள் தான் முக்கியமானவர். ஆனல், துரையோ, குதிரையினது நானுவித சேஷ்டைகளாலும் நடன விநோதங்களாலும், இவர்கள் பேச்சையே கவனிக்க முடியாதவராய், தான் கீழே விழுந்து விடாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே ஜாக்கிரதையா யிருந்தார். இதற்குள் சேணத்தின் ஒருபுறத்து அங்கவடி வார் நழுவிக் கீழே விழவே, துரை, குதிரையின் பிடரிமயிரைப் பிடித்துக்கொண்டு தாம் விழாமல் தப்பி, குதிரையை வைது திட்டி, குதிரைக்காரனை உரத்துக் கூவினர். வியர்வையினல் தன் மேலங்கி யெல்லாம் நனைந்து சொட்ட, குதிரைக்காரன் வேகமாய் ஓடிவந்து சேர்ந்தான். அவன் கீழே விழுந்த வாரை யெடுத்து மறுபடியும் சேணத்தில்

மாட்டினுன். பின்பு, துரை, கிராமத்தார் உபசார மொழி
களுக்குப் பதிலாகப் புன்னகை செய்து சலாம் செய்து
விட்டு,—அவருக்குத் தமிழில் ஒருவார்த்தை கூடத்
தெரியாது,—தான் குதிரை யேறும் சமர்த்தை அவர்
களுக்கு மெய்ப்பிப்பவர் போல, அதிவேகமாய்ச் சவாரி
செய்து கொண்டு போய்விட்டார். குதிரைக்காரனும்
குதிரையின் பின் ஓடிப் போய்விட்டான். யாவரும் எதிர்
பாராதபடி, இவ்வளவும் சில நிமிஷங்களுக்குள், திடீ
ரென்று நடந்தமையால், பின்பு தான் கிராமத்தார் யோசிக்
கலானுர்கள். சப்கலெக்டர் மிலேச்சனே ஆயினும்,
"துரை;" அந்த டிவிஷனில் ராஜப் பிரதிநிதி; மஹா
விஷ்ணுவின் அம்சத்தில் ஒரு சிறிதுள்ளவர்; பாதகமில்லை.
அவருடைய குதிரைக்காரன், கேவலம் பறைப் பயல்
தானே; அவன் ஏன் அக்கிரகாரத்துக்குள் நுழைந்து வந்
தான்? 'அவன் ஒரு வேளை துலுக்கனுக இருக்கலாம்; இல்லா
விட்டால் துரை வீதிக்குள் கூப்பிடுவாரா?' என்று ஒரு
பிராமணர் சொன்னுர். கச்சேரி வாசல்களும், கோர்ட்டு
வியாச்சியங்களும், வக்கீல் வீடுகளும் களப்புக்களு
மாகப் பூர்வ சொத்தில் பாதிக்கு மேல் தோற்றிருந்த
வழக்காடி வேம்பையர், உடனே தமது விசேஷ அனுபவ
ஞானத்தை வெளிப்படுத்த அதுவே தக்க சமயமென்று
தெரிந்து, பதிற் சொன்னதாவது:—

"யார் அவன் துலுக்கனென்று சொன்னது? இந்தப்
பயலை எனக்குத் தெரியாதா என்ன? நம்ம பறைச் சுப்பன்
மகன் தானே இவன்! இந்தப் பயல் நாலைந்து வருஷத்
துக்கு முன்னே ரெங்கூனுக்கு ஓடிப்போனுன். போன
வருஷந் தான் திரும்பி வந்தான்; முந்தின சப்கலெக்டர்
துரை யிடம் குதிரைக் காரனுக இருந்தான். இம்! அவர்
எவ்வளவு நல்ல துரை! என்னைக் கண்ட போதெல்லாம்
பரிகாசந் தான்: 'என்ன, வாம்பயர்,—'வேம்பையர்'
என்று சொல்ல வராது அவருக்கு—இன்னும் ஏதாவது
கேஸுகள் உண்டா'? என்று கேட்பார். அவர் நல்ல
துரை. நம்ம வழக்கங்கள் ஆசாரங்கள் எல்லாம் தெரியும்;
தமிழ் கூட கொஞ்சம் சுமாராய்ப் பேசுவார். அவராயிருந்
தால், இந்தப் பறை நாயை ஒரு பொழுதும் நம்ம தெரு
வுக்குள் கூப்பிட்டிருக்கவே மாட்டார். இந்த துரை புதிய
வர்; பால்யம்; அனுபோகமே யில்லை; குதிரை ஏறக் கூட
இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. ஆனுல், நாம் சும்மா

இருக்கக் கூடாது; இந்தப் பறைப் பயலுக்கு நன்ருய்ப் புத்தி வருத்தி வைக்க வேண்டும்; துரைக்குங் கூட ஒரு ஷொட்டு வரும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்; இதைச் சும்மா விட்டுவிடக்கூடாது."

"பறைப் பயல்கள் இப்படிச் செய்வதா யிருந்தால், நாமெல்லாம் பூணூலைக் கழற்றி யெறிந்து விடலாம். அந்தப் பறைச் சுப்பனைப் பிடிக்க வேண்டும்; அவன் மகன் செய்த இந்த துர்க்கிருத்தியத்துக்கு அவன் தண்ட மிறுக்க வேண்டும்" என்ருர் மற்ருெருபிராமணர். "துரைதானே அவனைக் கூப்பிட்டான்? அந்தப் பயல் முதலில் கொஞ்சம் திகைத் தான். துரை திட்டிக் கொண்டு கூப்பிட்ட பின்பு தான் அவன் தெருவுக்குள் ஓடிவந்தான்," என்ருர் வேருெருவர்.

அதற்கு வாமன சாஸ்திரிகள், "துரைக்குத் தெரியாது, இந்தப் பறை நாய்க்குத் தெரியாதா என்ன? எல்லாம் கலி காலம்; ஒருத்தரைச் சொல்லக் குற்றமில்லை," என்ருர்.

"துரை கூப்பிட்டாலுமே, கூப்பிடாவிட்டாலுமே, இந்தப் பறை நாய்க்குப்பிறந்த பயலுக்கு அக்ராகாரத்துக் குள் நுழைய என்ன சுதந்திரம்? அப்படி வரக் கூடாதென்று அவனுக்கு நன்ருய்த் தெரியுமே. உடனே, நாம், க்ரிமினலாகவும், ஸிவிலாகவும் அவன் மேல் வியாச்சியம் செய்ய வேண்டும். துரையையும் இரண்டாவது பிரதிவாதியாகச் சேர்க்க வேண்டும். நம்மூர் வக்கீல்கள் சுப்பையரும், வெங்குவையரும் பீஸில்லாமலே பேசுவார்கள்," என்ருர் வழக்காடி வேம்பையர்.

"அது சரி தான்; சப் கலெக்டர் மேலே சப் மாஜிஸ்டிரேட் பிராது வாங்கிக் கொள்வாரா?" என்று ஒரு பிராமணர் கேட்டார்.

அதற்கு வழக்காடி வேம்பையர், "சட்டப் படி அவர் வாங்கிக் கொள்ளத் தான் வேணும். சட்டத்திலே பெரியவர் சின்னவர் ஏது? அப்படி வாங்கிக் கொள்ளா விட்டால், அல்லது கேஸைக் கெடுக்கப் பார்த்தால், மேலே பெரிய கலெக்டர், ஹைகோர்ட்டு இல்லையா, பார்த்துக் கொள்வோம். நம்ம சுதந்திரங்களையும் பழைய பாத்தியதைகளையும் காப்பாற்ருமல் இந்தக் கோர்ட்டுகளெல்லாம் என்னத்துக்கு? நாம் இன்றைக்கே பிராது செய்து, நம்ம சுதந்திரத்தை ஸ்தாபிக்க வேண்டும்," என்று சொன்ஞர். இவ்வாறு நெடுநேரம் ஆலோசித்துப் பார்த்து, கடைசி

யில் புதிய சப் கலெக்டர் தெரியாமல் தவறு செய்து விட்டதை உத்தேசித்து, பாலூர் கிராமத்தார், பின் வருமாறு தீர்மானித்தார்கள்:—

(1) தன் மகன் செய்த அக்கிரமத்துக்காகப் பறைச் சுப்பன் பத்துக் கலம் நெல்லு தண்டமிறுக்க வேண்டியது. இல்லாவிட்டால் அவனை ஊரையும் உழவையும் விட்டுத் துரத்திவிட வேண்டியது.

(2) ஊரார் எல்லோருமாகக் கையொப்ப மிட்டு, பெரிய கலெக்டருக்கு ஒரு மனுச் செய்து கொள்ள வேண்டியது; இந்த மனுவில் வேதாந்த கேசரியே, முதலில் தம் பெயரையும் பட்டத்தையும் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுத வேண்டியது.

பின்பு ஊராரிற் பலர், ஆணும் பெண்ணும், நதிக்குச் சென்று ஸ்நானம் செய்தார்கள்; சிலர் யஜ்ஞோபவீதத்தை மாற்றி, காயத்ரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஆவர்த்தனம் ஜபித்தார்கள்; ஊரும் மந்திர நீரால் தீட்டு மாற்றிப் புனிதப் படுத்தப்பட்டது.

மற்றெல்லாச் சாதியாராலும் நிந்தித்துக் கைவிடப் பட்டவர்களான பஞ்சமர்கள், பிறர் உபயோகத்துக்காகத் தாம் பயிர் செய்யும் வயல்களின் நடுவே, சிறிய குடிசைகளாலான சேரிகளில் வசித்து வருகிறார்கள். வயிறு நிரம்ப ஊணின்றித் தம்மைப் போலவே மெலிந்து வாடியிருக்கும் ஆடு மாடுகளும் கோழி பன்றிகளுமே அவர்கள் சகவாசிகள். வீட்டுக் கூரைகளின் மேல் "சுரைகள் படர்ந்திருக்கும்; சுற்றிலும் நாய்கள் குரைத்து நிற்கும்." எங்கே பார்க்கினும் எலும்புகளும் இறகு கொம்புகளும் உரங்களும் குவியல் குவியலாய்க் காணலாம். பிரபஞ்சத்தில் வேறு எதிரிணையில்லாததோர் துர்க்கந்தம், சேரியை அணுகும் பொழுதே பலமாய் வீசும். அக் குடிசைகள், மழை வெயில்களுக்கு ஏற்ற வீடுகளில்லை. அவற்றுள் நுழைந்து பார்த்தால், சில சட்டிப் பானைகளையும் சிரட்டை யகப்பைகளையும், உழவு சாமான்களையுந் தவிர, வேறு சாமான் எதையும் காண முடியாது. மானத்தை மறைக்கவும் குளிரிற் போர்த்துக் கொள்ளவும் கூடப் போதாமல் தாம் உடுத்த கந்தைகளைத் தவிர, இப் பஞ்சமர்களுக்கு வேறு உடை கிடையாது. ஒரு தென்னங் கிடுகோ பனையோலைப் பாயோ கிடையாத பொழுது, இவர்கள், தரையே பாயலாகவும், வானமே மேற்கட்டியாக

வும் கிடந்துறங்கக் கூசுவதில்லை. எப்பொழுது எது எம்மட்டுக் கிடைக்குமோ அதையே அப்பொழுதே உண்பதும் குடிப்பதும் அவர்கள் வழக்கம். சோம்பலினாலும், பெருந்தீனியினாலும், வேலையின்மையினாலும் உண்டாகும் நோய்கள் எதுவும் அவர்களை அணுகுவதில்லை. பசி தாகத்தைத் தணிக்கப் போதாத அளவு மிகச் சிறிதாகவே கூலி பெற்று, ஓய்வொழிவின்றி யுழைத்து வேலை செய்வதே, அவர்களுக்குள் ஆண் பெண் இருபாலார்க்கும் தொட்டில் தொட்டுச் சுடுகாடு மட்டும் உள்ள சுதந்தரம். சில வேளைகளில், பசிநோய் தாங்கமாட்டாது, வேறு வழியின்றி, அவர்களிற் சிலர், தங்கள் எஜமானரது ஆடு மாடுகளைத் திருடியோ, அல்லது விஷமிட்டுக் கொன்றோ, அவற்றின் ஊனை வெந்து தின்று, தோலை விற்ற காசைக் கொண்டு கள் வாங்கிக் குடிப்பதுண்டு. அகப்பட்டுக் கொண்டால் சிறைச் சாலையே கதி. கல்விப் பயிற்சி, நாகரிகம் என்பதைக் கனவிலும் அறியாராய், கெடு நாளைய மூட வழக்கங்களையே கைப்பற்றி, யாவராலும் இகழப்பட்டு, கேவலம் மிருகங்களினும் தாழ்வாக ஜீவித்து வரும் இப்பஞ்சமர்கள்தான், பிராமணர் வேளாளர் முதலிய மேல் ஜாதியார் நன்றாய் உண்டுடுத்திச் சுகிக்குமாறு, நன்செய் புன்செய்களைப் பொன் செய்கள் எனக் கூறும்படிப் பயிர் செய்து விளைவிப்பவர். தலைமுறை தலைமுறையாக இவ்வாறு அல்லற்பட்டுழைத்துவரும் அடிமைகள், தங்கள் மேல் ஈவு இரக்கம் பாராட்டாத கண்மூடி எஜமானர்களிடத்திலும், பக்ஷமும் பக்தி விசுவாசமும் வெகுவாய்ப் பாராட்டி வருதல் ஆச்சரியமே.

பாலூர்ப் பறைச் சுப்பன், ஒருத்தி பின் ஒருத்தியாக மூன்று மனைவிகளை மணந்து, அவர்களிடம் இருபத்திரண்டு குழந்தைகளையும் பெற்றிருந்தான். இவ்விருபத்திரண்டு சிசுக்களில், வாந்திபேதி, மலைச்சுரம், மாரியம்மன் முதலிய தண்டக்காரர் கொண்டு போனதுபோக, ஆறு குழந்தைகளே கடைத்தேறின. இவருக்குள் மூத்தவன்தான் குதிரைக்காரன் குப்பன் என்னும் நம் கதாநாயகன். பறைச் சுப்பன், பாலூர் வடக்குப் பறைச் சேரியில் தன் குடும்பத்துடன் ஒரு குடிசையில் வசித்துக்கொண்டு, வரதையர் என்பவரின் வயல்களைப் பயிர் செய்து வந்தான். வரதையர் சிசுவாயிருந்த பொழுதே சுப்பனுக்குத் தெரியும். அவன் முன்னோர் அவர் முன்னோர்

களின் கீழ்ப் பாம்பரையாய்ப் பயிரிட்டு வந்தவர்களே. வருஷத்தில் இரண்டு அறுப்புக் காலமுண்டு. செட்டறியாத சுப்பனும் அவன் மனைவி மக்களும் வயிறாரப் புசிப்பதும், வருஷத்தில் அக் காலங்களை யொட்டிய இரண்டு மாதங்கள் தான். மிகுந்த பத்து மாதங்களிலும், வேலைக்கு எப்பொழுதும் குறைவே யில்லை. பாம்பரை அடிமைக்குப் படியேது சம்பளமேது? எப்படியோ உடலை விட்டு உயிர் வெளியே போய்விடாமல் காத்துக் கொள்வது, சுப்பன் சமர்த்தைப் பொறுத்தது; ஆகவே, வாந்திபேதி, மலைச் சுரம் முதலிய நோய்களுக்கு வேட்டைதான்.

மேலே குறித்தபடி, சப்கலெக்டர் துரை, பாலூருக்கு விஜயம் செய்த காலத்துக்கு ஐந்தாண்டுகளுக்கு முன்னர், வாந்திபேதி வெகு மும்முரமாய்ச் சேரிகளில் விளையாடிக் கொண்டிருந்த பொழுது, சுப்பன் மகன் குப்பன் ஊரை விட்டோடி, முடிவில் ரெங்கூன் போய்ச் சேர்ந்தான். வாலிபனான குப்பன், அந்நகரத்திலே ஒரு துரையிடம் குதிரைக்காரனாக வாழ்ந்து வந்த பொழுது, கிறீஸ்தவ மதத்தினளான ஒரு பறைப் பெண்மேல் காதலாகி, அவளுடன் அம்மதத்தையும் தழுவிக் கொண்டான். முந்திய வருஷம் தம்பதிகள் இந்நாட்டுக்குத் திரும்பிவந்து, சப் கலெக்டர் துரையின் கீழ், குப்பன் குதிரைக் காரனாகவும், அவன் மனைவி மேரி புல்லுக்காரி யாகவும், வேலையில் அமர்ந்து, செழிப்பாகவே வாழ்ந்து வந்தார்கள். சிவப்புக் கரை போட்ட வெள்ளைச் சீலையும், பூப்போட்ட பச்சை ரவிக்கையும் தரித்து, பலவித மணிகளும் வெள்ளி ஆபரணங்களும் போலி வைர நகைகளும் அணிந்து, நாகப் பழம் போன்ற தன் கரிய மேனியைப் பால்போல் வெள்ளிய தன் பற்கள் எடுத்துக் காட்ட, வெகு ராங்கியாக, சிரித்த முகத்துடன், புஸ்தகமும் கையுமாக, ஞாயிற்றுக் கிழமை தோறும் வேதக் கோயிலுக்குச் செல்லும் மேரியைப் பார்த்த எவர் தான், அவள் பாலூர் பறைச் சுப்பன் மருமகளென்று நம்புவார்? வேதக் கோயிலுக்குள் அவளுடன் நுழைந்து, அவள், தன் தமிழ்ப் பிரார்த்தனைப் புஸ்தகத்தைத் திறந்து தட்டுத் தடையின்றி அழகாய்த் தெளிவாய் வாசிப்பதையும் கேட்டு விட்டால், யாராலுமே நம்ப முடியாதென்பது திண்ணம். ஆயினும், கிறிஸ்தவப் பாதிரிகளின் முயற்சியும், வேலைக்குத் தக்க சம்பள முதவும் துரையின் சேவகமு மாகச் செய்த அற்புதமே அது. கிழச் சுப்பனோ, தன் மகனும் மருகியும் இவ்வாறு மாறி

விட்டதற்குச் சிறிதும் மனம் நோகாது, தன்னூர்ப் பறைய ரெல்லாம் தன்னைக் கண்டு பொறாமை கொள்ள, தன் மகனிடம் பொருளுதவி பெற்று, இப்பொழுது கொஞ்சம் சுகமாகவே வாழ்ந்து வந்தான்.

பாலூரார் மனுவை வரப் பெற்ற பெரிய கலெக்டர் துரை, புராதனமான பிராமண வழக்கங்களிலும் சுதந் திரங்களிலும் நம்பிக்கை இல்லாதவராயும், கிறிஸ்தவப் பாதிரிகள் இந்நாட்டில் யாவராலும் கைவிடப்பட்ட அநா தைகளான கீழ்ச் சாதிகளுக்காகப் பாடு படும் முயற்சி களில் அதிக விசுவாசமும் அபிமானமு முள்ளவராயு மிருந்தார். பிராமணனாலும் பஞ்சமனாலும், மனிதர் யாவர்க்குமே சில சுதந்திரங்கள் பொதுவா யுண்டென் பதும், அவர் அபிப்பிராயம்.

கதையை இனி விரிக்க வேண்டாம். பறைச் சுப்ப னுக்கு விதிக்கப்பட்ட பத்துக் கலம் நெல்லில், ஒரு நெல் மணியாவது அவன் தண்ட மிறுக்கவே யில்லை; மனு விசா ரணைக்காகப் பாலூருக்கு விஜயஞ் செய்த கலெக்டர், சப்கலெக்டர், முதலிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக் கும் அவர்கள் பரிவாரங்களுக்கும் உபசரணை செய்ததில், பாலூராருக்கு ரூபா இருநூறுக்கு மேல் செலவாயிற்று. 43 தலைக்கட்டங்கிய 7 பறைக் குடும்பங்கள், இவ்வியாச்சிய மூலமாக, ஹிந்து மதத்தை நீங்கிக் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்து கொண்டதும் தவிர, பிராமணராதி மேல் சாதியா ரின் நிர்ப்பந்தங்களையும் கொடுமைகளையும் வெறுத்து, பாலூரை விட்டுச், சத்தியவேத புரத்துக்குக் குடியேறிப் போய், அங்கே இப்பொழுது மரியாதையாகவும் செழிப் பாகவும் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். பாலூர் மஹா ஜனங்களோ, பஞ்சமர்களான மிகுந்த குடியானவர்கள் வைத்ததையே இப்பொழுது சட்டமாக ஏற்றுக்கொண்டு, அவர்களிடத்தில் "ஜீவகாருண்யத்தை" உண்மையாகவே மிகவும் காட்டி வருகிறார்கள். குதிரைக்காரன் குப்பனுக் கும் அவன் மனைவி மேரிக்குமே இந்தப் புண்ணியம்!

## 2. அவனாலான பரிகாரம்.

I



முதல் வகுப்பில் தேறி யிருக்கிறான்; இராஜதானிக்காக இரண்டாவது ஸ்தானம்.” ஒரு நாள் காலையில் தம் இளைய பிள்ளை பி. ஏ. பரீக்ஷையில் தேறிவிட்ட நல்ல சமாசாரம் மேற் குறித்த தந்தியால் இராமையருக்குத் தெரிய வந்தது. அவர் பதினைந்து வருஷ காலம் சப்மாஜிஸ்திரேட் உத்தியோகம் செய்து, பென்ஷன் வாங்கிக் கொண் டிருந்தார். ஏற்பட்ட சம்பளம் சொற்பமானாலும், தக்க சம்பாத்யம் செய்திருந்தார். அவர் தகப்பனார் ஓர் ஏழைப் புரோகிதர். இங்கிலீஷ் தெரியாது. ஆனால், ஐசுவரியமும் அந்தஸ்தும் வேண்டுமென்ற ஆசை அதிகமுண்டு. ஆகவே, தம் மூத்த பிள்ளையை உபாத்தியாயத்துக்கு விட்டுவிட்டு, தம் இரண்டாவது செல்வப் பிள்ளையாகிய இராமுவுக்கு, அப்பிராமண்ய மானதாயினும் இந்த நாளிலே ராஜபாஷையாகவும், தனலக்ஷ்மியின் பிரிய பாஷையாகவும் வழங்கும் இங்கிலீஷ் பாஷையைக் கற்பிக்கச் செய்தார். பள்ளிக் கூடங்களில் சம்பளம் இல்லாமலும், பிக்ஷையெடுத்தும், தனவான்கள் வீடுகளில் வாரச் சாப்பாடு சாப்பிட்டும், இங்கிலீஷ் படித்து வந்த புரோகித புத்திரனாகிய இராமையர், தனக்கு மேற் பட்டோரை யெல்லாம் திருப்தி செய்து சந்தோஷப் படுத்தும் வித்தையில், அதிமேதையாய்ப் பாலியத்திலேயே தேர்ந்துவிட்டார். இந்தப் பயிற்சி, பின்னால் உத்தியோக வாழ்க்கையில் அவருக்கு எவ்வளவோ கையுதவி, சொற்பப் படிப்பே யுள்ள அவரை, மாதம் எட்டு ரூபா சம்பள முள்ள ஏவல் வேலையிலிருந்து யாவரும் விரும்பும் உன்னத பதவியாகிய சப்மாஜிஸ்திரேட் ஸ்தானத்துக்கு விரைவில் ஏற்றிவிட்டது. ‘காற்றுள்ள போதே தூற்றிக் கொள்’ என்னும் பழமொழிப்படி, இராமையர் பின்பு ஒழுகத் தொடங்கினார். மாஜிஸ்திரேட் உத்தியோகம் என்ற பொன்மணக்கும் தென்றல் காற்று, அவருக்குப் பதினைந் தாண்டுகளுக்கு வீசிற்று. இடையே இருமுறைமட்டும் ஆபத்துச் சூறாவளி யடித்து, ஸெஷன்ஸ் ஜட்ஜு முன்பாக, நிர்ப்பந்தித்துக்

கைக்கூலிவாங்கின குற்றவாளியாக இராமையர் நிற்கும்படி நேர்ந்தது. அக்காலங்களில், வக்கீல்களாலும் சாக்ஷிக்காரராலும் கைவிடப்பட்டு, ஏராளமான பணத்தை வாரியிறைத்துச் செலவிட்டுத், தலை பிழைத்தது தாலிப்பாக்கியமென்று, அவர் அரிதில் தப்பித்துக் கொண்டார். அதனால், அவர் பென்ஷன் பெற்று உத்தியோகம் நீங்கின பொழுது, தான் முதலில் நினைத்து எதிர்பார்த்த அளவு, ஐசுவரியவானாக இல்லை; ஆயினும், காலஞ்சென்ற அவர் தந்தையாரையும், புரோகிதரா யிருந்த அவர் தமையனாரையும் உத்தேசித்து, இராமையரைக் குபேரனென்றே சொல்லலாம். யோக்கியமாக உத்யோகம் செய்திருந்தால், இப்பொழுது மீந்துள்ள செல்வத்தில் மூன்றில் ஒரு பங்குமே சேர்ந்திருக்க மாட்டாதென்பதும் நிச்சயமே. சொற்பப் பென்ஷனோடு வீட்டுக்கனுப்பப் பட்டபொழுது, அவர், இரண்டு குமாரர்களும் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். சர்க்கார் உத்தியோகத்தில் கூடிய மட்டும் முன்க்கு வந்து உயர்பதவியை அடையும்படி, தம் பிள்ளைகளைச் செவ்வையாய்ப் படிப்பிக்க, அவர் தீர்மானித்தார். ஆனால், 'ஆத்துக்கு மூத்தது அசடு' என்னும் வசனத்திற்கிணங்க, அவர் ஜேஷ்ட புத்திரன் கடைத்தேறவில்லை. நயமாயும் பயமாயும், வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும், எத்தனை வருஷங்களோ, எவ்வளவோ சிரமப்பட்டுச் சொல்லி வைத்தும், அவனால் பிரவேசப் பரீக்ஷையென்னும் சிற்றோடையையும் தாண்டமுடியவில்லை. அவன் விஷயத்தில் அலுத்து வெறுப்புற்று, அவன் டிப்டி கலெக்டராகவும் முதலாவது கிளாஸ் மாஜிஸ்திரேட்டாகவும் உத்தியோகம் செய்ய வேண்டுமென்ற ஆசையை அறவே ஒழித்து, முடிவில், வேறு விதியின்றி, அவனைத் தாலூகா குமாஸ்தா ஆக்கிவைத்தார். ஆனால், அவனுங்கூடக், கல்வியிற் பயன்படா விட்டாலும், மற்றொரு வழியில் நல்ல பலனைக் கொடுத்தான். அவன் விவாகத்தாலும், பிற்பட்ட விசேஷங்களாலும், குடும்ப சொத்துக்குச், சகல செலவுகளும் போக ஆயிர ரூபாய் வரும்படி வந்தது. இளைய பிள்ளை சாமிநாதன் தான் கிழவருடைய செல்வக் குமாரன்; அவனே, அவர் கண்ணுள் மணிபோலும், அவர் மனோராச்சியங்களை யெல்லாம் பூர்த்தி செய்யக் கூடிய மதி மந்திரி போலும் விளங்கினான். ஒவ்வொரு வகுப்பிலும் அவன் முதல்வனா யிருந்து, பிரவேசப் பரீக்ஷையைப் பதினைந்தாவது பிராயத்திலேயே முதல் வகுப்பில் தேறிக் கடந்து, இரண்டு வருஷங்களுக்

குப் பின், எப். ஏ. பரீக்ஷையில் இராஜதானிக்கு ஐந்தாமவனாகத் தேறினான். பெண்களைப் பெற்றுள்ள பிதாமார்கள் அவனை மாப்பிள்ளை யாக்கிக் கொள்ளப் போட்டி போட்டுக்கொண்டு வந்தார்கள். முடிவில், அவன், உயர்ந்த ஏலத் தொகைக்கே விடப்பட்டு, நில சுவானும் பள்ளி வாத்தியாருமான ஒருவருக்கு மருமக னானான். அவர் இரண்டாயிர ரூபாய் ரொக்கம் கொடுத்து, ஆயிர ரூபாய்க்கு மேல் நகைகளாகவும் வெள்ளிப் பாத்திரங்களாகவும் சீர் செய்தார். கலியாணமாகி ஒரு வருஷத்தில் பெண் பக்குவவதி யாகவே, அவர் ருது சாந்தி விஷயமாக, இராமையரை அவசரப் படுத்தத் தொடங்கினார். ஆனால், இராமையர், இதுவரையும் தன் மகன் படிப்பைச் சாக்கிட்டுக் கடத்தி வந்தார். இப்பொழுது, அவன் அதி சிலாக்கிய மாகப் பரீக்ஷையில் தேறவே, ருதுசாந்திக் கலியாணத்தை முன்னிட்டு, வழக்கமாயுள்ள சீர்களை யன்றி மேல் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் தட்டிவிடத் தீர்மானித்தார். தந்தி சமாசாரத்தை அறிந்தவுடன், அவர் மனைவி, சீதாலக்ஷ்மியம்மாள், அவரிலும் அதிகப் பேராசை கொண்டவளாய், கேவலம் ஒரு பள்ளிக்கூட வாத்தியாரின் மகள் தன் மருமகளாக வீட்டுள் அடியெடுவைக்கு முன், இரண்டாயிரம் ரூபாயாவது கறந்துவிட வேண்டு மென்று வற்புறுத்திச் சொன்னாள். அவ்வித மாய்ப் பணம் பறிப்பதற்குப் பற்பல திருஷ்டாந்தங்களும் மேற்கோள்களும் எடுத்துக் காட்டித், தன் புருஷரை அவரது கொள்ளையாடும் சித்த விருத்தியிற் பலப்படுத்தினாள்.

II

"அவன் படிப்போ, கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. இனித் தாமஸிக்கக் காரணமில்லை. இப்பொழுது ருது சாந்திக் கலியாணத்தைச் செய்து விடலாம். இந்தச் சித்திரை ஐந்தாம் தேதி, அதாவது அடுத்த வெள்ளிக் கிழமை யன்று, அவர்கள் இருவர் நக்ஷத்திரங்களுக்கும் பொருந்தின நல்ல தினமாம். அவனும் புதன் கிழமையே சென்னையி லிருந்து திரும்பி வந்துவிடுவான். தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று, சம்மந்தி இராமையரைப் பார்த்து, உபாத்தியாயர் கிருஷ்ணையர் கேட்டார். இராமையர், தம்முன் தாம்பாளத்தி லிருந்த பக்ஷணத்தை யெடுத்துத் தின்று கொண்டே பதிற் சொன்னதாவது:—

"இதெல்லாம் அவசரப் படலாகாது; உங்களுக்குத் தெரியுமே. இப்பொழுது தான் அவனுக்குப் பத்தொன்பது நிறைந் திருக்கிறது. அவன் வக்கீல் பரிகைஷக்குப் படிக்க விரும்புகிருன். அவனுக்கு இப்பொழுது முகூர்த்தத்தைத் வைத்துக் கொள்வதில் இஷ்ட மில்லை யென்று அவன் தாயார் சொல்லுகிருள். அவளிடத்தில் தான் அவன் சாதாரணமா யிருப்பான். என்னிடத்தி லெல்லாம் அவ்வளவு சரியாய் இருக்க மாட்டான். உங்களுக்குத் தெரியுமே, இந்த நாளைப் பிள்ளைகளே இப்படித் தான். அவன் மனத்தில் ஏதேதோ எண்ணங்க ளெல்லாம் இருக்கிறது போல் தோன்றுகிறது."

கிருஷ்ணையர்:—கமலம் சோபன மாகி ஒரு வருஷத்துக்கு மேலாகி விட்டதே. அதனுல் பாதக மென்று நா னென்றும் நினைக்க வில்லை. ஆனுல் அவள் தாயார் அலட்டும் அலட்டுதலுக்குக் கங்கு கரை யில்லை; தெருண்ட பெண்ணை வீட்டில் வைத்திருக்க லாகாதாம்; பாவமாம்; முகூர்த்தம் நடந்தா லொழிய அவள் இருக்க வொட்டாள்.

இராமையர்:—வக்கீல் பரீகைஷக்கு வாசிக்கிற இதனுல் பணச் செலவு அதிகம்.

கிரு:—பி. ஏ. தேறின வுடன் அவனைச் சர்க்கார் உத்தியோகத்தில் சேர்ப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தீர்களே?

இரா.—உங்களுக்குத் தெரியுமே, இப்பவும் என் உத்தேசம் அப்படித்தான். எனக்கு அது தான் இஷ்டம். ஆனுல் சுயேச்சையாய் வாழ வேண்டு மென்று என்ன என்னவோ எண்ணிக் கொண் டிருக்கிருன். அதனுல் வக்கீலாக வாவது பள்ளிக்கூட வாத்தியா ராக வாவது ஆக வேண்டு மென்று, அவனுக்கு இஷ்டம். வக்கீ லாகி விட்டால், சுயேச்சையாக விருக்கலா மென்று நினைப்பது முழு மூடத் தனம். உங்களுக்குத் தெரியுமே, நான் பரீகைஷ யொன்றுமே பாஸ் பண்ண வில்லை. ஆயினும் எத்தனையோ பி. ஏ. பி. எல். கள், நான் சப் மாஜிஸ்ட்ரேட்டா யிருந்த பொழுது, என் தயவுக் காக வந்து தொங்கிக் கொண் டிருப்பார்கள். பள்ளிக்கூட வாத்தியா ராவதிலும், ஸ்டாம்பு வெண்டராக வாவது, பவுண்டு கீப்பராக வாவது கால க்ஷேபம் செய்யலாம். உங்களுக்குத் தெரியுமே, உங்களை இகழ்ந்து பேசுவதாக நினைத்துக் கொள்ளக் கூடாது.

கிரு.—அவனுக்குத் தாங்கள் புத்தி சொல்லி, தக்கபடி சிபார்சு செய்து, சர்க்கார் உத்தியோகத்தில் முதலிலேயே நல்ல சம்பளத்தில் ஏற்படுத்தி வைக்க வேண்டும். அவன் இவ்வளவு உயர்தரமாகப் பரீக்ஷையில் தேறி யிருக்கிற தற்கும், தங்களுக் குள்ள செல்வாக்குக்கும், இது ஒரு பெரிய காரிய மல்லவே.

இரா.—அவன் மனமுரண் டுள்ளவன். உங்களுக்குத் தெரியுமே, எங்கள் செல்வப் பிள்ளையாய் வளர்ந்து, எங்கள் தாக்ஷிண்யத்தினலேயே இப்படி யாய்விட்டது. அவன் தாயார், அவன் எது சொன்னலும் தட்டுவதில்லை. ஆகவே, இப்பொழுது மனமுரண்டு பலத்து விட்டது. ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையுமா? சர்க்கார் உத்தியோக மும் கூட, பணம் செலவிட்டால் தான் எல்லாம் கிடைக் கிறதா யிருக்கிறது. இந்த நாட்களிலே பணமுதவுகிறது போல வேறெவரும் உதவ முடியாது.

கிரு.—தாங்கள் இப்படிப் பேசுவதின் கருத்து எனக்குத் தெரியவில்லை. இன்னும் என் பெண்ணை என் வீட்டில் வைத்திருப்பது சரியாக வில்லை. சாமிநாதனே சிறு பிள்ளை; சூது வாது தெரியாதவன். அவன் பட்டணக் கரையி லுள்ள துர் சகவாசங்களுக்கு மத்தியில் தனியே யிருப்பதும் இனிச் சரியில்லை. அதனல் சீக்கிரத்தில் ஒரு முகூர்த்த தினத்தைக் குறிப்பிட வேண்டு மென்பது தான் என் அபேக்ஷை.

இரா.—அவனை உங்களுக்கு நன்ருய்த் தெரியாது. அது தான் இப்படிச் சொல்லுகிறீர்கள். அவன் மற்றப் பிள்ளைகளைப் போலல்ல. உங்களுக்குத் தெரியுமே: அவன் போக்கே வேறு; கொஞ்சப் பிராயமே யானலும் அவன் எத்தனையோ பெரிய பெரிய புஸ்தகங்களை யெல்லாம் வாசித்திருக்கிறன். போன மாசந் தான், அவன் இங்கே வந்திருந்த பொழுது, அவன் புஸ்தகங்களி லொன்றை யெடுத்துப் பார்த்தேன்: எனக் கொன்றும் சரியாய்ப் புரிய வில்லை. பெண்களை நாம் நடத்தி வரும் விதமெல்லாம் பிசகென்று ஏதேதோ தாறு மாருய் யெழுதி யிருந்தது. அவன் ஒரு போக்கு, என்ன என்ன புஸ்தகங்க ளெல்லா மோ வாசிக்கிறன். அவன் பரீக்ஷைக்கு அவசியமான வை தவிர, அவன் மேலிட்டு வாங்கி யிருக்கும் புஸ்தகங் கள் மாத்திரம் ஆயிர ரூபாய்க்கு மேலிருக்கும்.

கிரு.—(சிரித்துக் கொண்டு) அதனு லென்ன, தங்க ளுக்கு அது ஒரு பெரிதா? அப்படி வாசிப்ப தெல்லாம் தங்கள் பிள்ளைக்கு நல்லது தானே? தங்களுக்குப் பெண் களு மில்லையே. எனக் கிருப்பது போல் ஆறு பெண்க ளிருந்தால், தாங்கள் என்ன செய்வீர்களோ?

இரா.—தனக்கு ஒரு பெண் வேண்டு மென்று எவ் வளவோ என் ஸம்ஸாரம் ஆத்திரப் பட்டாள். ஆனுல் தெய்வ சம்மத மில்லை. உங்கள் மூன்ருவது பெண் கலியாணத்துக்கு 2300 ரூபாய் கொடுத்தீர் களாமே? பை யன் இன்னும் எப். ஏ. கூடத் தேற வில்லை யாமே?

கிரு.—நான் அவ்வளவு கொடுத்தே னென்று யார் தங்களுக்குச் சொன்னது? வெறும் பொய் யது. எண் ணூறு ரூபாய் தான் கொடுத்தேன். பி. ஏ. பரீக்ஷை முடியும் வரை படிப்புச் செலவு கொடுப்ப தாகவும் சொல்லி யிருக்கிறேன். பையன் தகப்பனுரும் என்னைப் போல ஏழை தான். மாதம் ரூபாய் 50 தான் அவர் சம்பளம்.

இரா.—உங்களைப் போல ஏழையா! நன்ருய்ச் சொன் னீர்கள். அப்படி யிருந்தால் போதாதா? ஏன், உங்களுக்கு மாதம் ரூபாய் 150 சம்பளம் கிடைக்கிறது. சர்வ கலா சாலைப் பரீக்ஷா திகாரியாகப் பின்னும் அவ்வளவு கிடைக் குமாம்; இது தவிர, குடும்ப சொத்திருக்கிறது. நீங்கள் ஏழையா!

கிரு.—தங்களுக்கும் ஆறு பெண்களும் மூன்று பிள்ளை களு மிருந்தால், என் யதார்த்த வருமானம் தங்களுக்குத் தெரிந்திருந்தால், தாங்கள் என்னைப் பணக்காரனுக மதிக்க மாட்டீர்கள்.

இரா.—எப்படி யானுலும், உங்களுக்குத் தெரியுமே, உங்கள் மற்ற மாப்பிள்ளைகளை விட என் பிள்ளை யாண்டான் எவ்வளவு உயர்ந்தவன் என்பதை உத்தேசித்து, சாந்திக் கலியாணத்துக்கு, நீங்கள் தகுந்த சீதனங் கொடுப்பது தான் சரி; இந்த நாளை வழக்கங்களைப் பார்த்தால், நீங்கள் ரூபா இண்டாயிரங் கொடுத்தால் சற்றும் அதிகமா யிரா தென்பது, என் ஸம்ஸாரத்தின் அபிப்பிராயம். உங்களுக் குத் தெரியுமே, சட்டப் பரீக்ஷைக்கு வாசிப்பதற்கோ, அல்லது சர்க்கார் உத்தியோகத்தில் அமரவோ, அது அவனுக்கு உதவியாகும்.

கிரு.—(திகிலுடன்) இரண்டாயிர ரூபாயா! நான் அதற்கு எங்கே போகட்டும்? இன்னும் கலியாணத்திற்கு மூன்று பெண்க ளிருக்கிறார்கள்; என் வீட்டுக் கொல்லையில் பொன் காய்ச்சி மாமு மில்லை. என் பூர்வ சொத்தெல்லாம் முன்னமே அடைமானம் வைத்தாய் விட்டது; என் வருமானம், எங்கள் பெரிய குடும்பத்து நாடோடிச் செலவுக்கே போத வில்லையே.

இரா.—அடா, இரண்டாயிர மென்றால் இரண்டாயிரமா? என் சம்சாரம் சொன்னதைத் தான் நான் சொன்னேன். உங்களுக்குத் தெரியுமே, இந்த விஷயங்களிலெல்லாம், முதலில் பெண்டுகளைத் தான் திருப்தி செய்யவேண்டும். உங்களுக்குத் தெரியாதா என்ன? இந்த நாட்களில் இதெல்லாம் நடக்கிற விதத்தை யோசித்து, நீங்களாகவே 1500 ரூபாயாவது தருவீர்க ளென்று எண்ணி யிருக்கிறேன். இந்தச் சென்னை ராஜதானிக்கே இரண்டாவதாகப் பரீக்ஷையில் தேறி யிருக்கிறான்.

கிரு—அவர்கள் புருஷர்களுக்குப் பிரியமா யிருக்குமென்று நினைத்து, என் பெண்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத் திருக்கிறேன். சாமிநாதனுக்கு ஸம்ஸ்கிருதத்தில் அதிக ஆசை யென்று கேட்டவுடன், மாதம் 7 ரூபாய் கொடுத்து, கமலத்துக்கு ஒரு ஸம்ஸ்கிருத வாத்தியார் வைத்து, நானே தினம் அவளுக்கு இங்கிலீஷும் சொல்லிக் கொடுத்துக் கொண்டு வருகிறேன். இப்பொழுது அவளுக்கு இங்கிலீஷும் ஸமஸ்கிருதமும் நன்றாய்த் தெரியும்.

இரா—இந்த நாளைப் பையன்களுக்கு அதெல்லாம் வேண்டி யிருக்கிறது. என் சம்சாரமும் உங்கள் சம்சாரமும் ஒன்றுமே வாசிக்க வில்லை; இருந்தாலும், நாம் சொன்னபடி கேட்டுக் குடித்தனம் பண்ணுகிறார்கள். இந்த நாள் வழக்கங்களே ஒரு தினுஸு.

கிரு.—"எல்லாம் ஒரு தினுஸாய்த் தான் இருக்கிறது! நமக் கெல்லாம் வேட்டகத்தில் என்ன கொடுத்தார்கள்? என் கலியாணத்தின் போது, என் தகப்பனார், நாட்டுப் பெண்ணுக்கு ரூபா 800-க்கு நகை பண்ணிப் போட்டதற்குப் பதிலாக, எனக்கு என் மாமனாரத்தில் 10-பவுனுக்கு ஒரு தங்கக் காப்பு மட்டும் போட்டார்கள்; அவ்வளவுதான்."

இராமையர் உடனே பதிற் சொன்ன தாவது: "வழக்கங்கள் மாறுவது போல, நாமுந் தான் மாற வேண்டியிருக்கிறது. இந்த நாட்களில் பெண்களும் படிக்கிறது போலவே, மாப்பிள்ளைகளுக்கும் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படிப் பட்ட பிள்ளை உங்களுக்கு வாய்த்திருப்பதற்கு, இன்னொரு சம்பந்தியா யிருந்தால், இதற்குள் உங்கள் பணத்தைக் கரைத்திருப்பன். ஆகக் கூடி எனக்கென்ன ஆகவேண்டியது? நீங்கள் தருவ தெல்லாம் கடைசியில் உங்கள் பெண்ணைத் தானே சேரும்."

கிரு:—"எனக்கு ஒரு பெண் மாத்திரமே இருந்தால், தாங்கள் சொல்வது தகும். இன்னும் கலியாணத்துக்கு எனக்கு மூன்று பெண்கள் இருக்கிறார்கள். அவர் அவர் களைப் புக்ககத்திற்குக் கொண்டு சேர்க்கு முன், தொட்டுத் தொட்டு எத்தனையோ செல விருக்கிறது."

இராமையர் சற்றுநேரம் மௌனமா யிருந்தபின், கிருஷ்ணையர், திடீரென்று, "தங்கள் பையன் இப்பொழுது பணம் வேண்டு மென்று விரும்புகிறனு?" என்று கேட்டார்.

இரா:—"அவன் இதை யெல்லாம் என்ன கண்டான்? அவனே ஒரு போக்கு; தாசில்தார் வெங்கு அய்யர், மாப்பிள்ளைக்குக் கையில் ரூபாய் 2000-ம் கொடுத்து, ஒரு பைஸிகிலும் தங்கக் கடியாரம் சங்கிலியும் வாங்கிக் கொடுத்தார்" என்று பதில் சொன்னார்.

இவ்விதமாக, காபி, பக்ஷணங்கள் எல்லாம் சாப்பிட்டு வெகு நேரம் வரை, அவர்க ளிருவரும் பேசிக் கொண் டிருந்தார்கள். கடைசியில், பஞ்சாங்கத்தைப் பார்த்தபின் வெள்ளிக் கிழமை முகூர்த்தத்தை நடத்தி விடுகிற தென்றும், கிருஷ்ணையர், வழக்கமாயுள்ள சீர், வெள்ளிப் பாத்திரங்கள் தவிர, ரூபாய் 800-ரொக்கம் கொடுத்து விடுகிற தென்றும் தீர்மானிக் கப்பட்டது.

## III

அன்று சந்திரிகை வெகு தாவள்யமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. படுக்கை யறைக்குப் பின்புற முள்ள முற்றத்தில், ஒரு சமக்காளத்தை விரித்து, நிலாவில் உட்கார்ந்து கொண்டு, சாமிநாதன் தன் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தான். சாந்தி முகூர்த்தம் கழிந்த பின், வழக்கம் போல் மறு வீட்டுக்கு அவன் தன் வேட்ட

கத்துக்கு வந்திருந்தான். அவன் மனைவி கமலம், ஏராள மான கூந்தலும், களை பொருந்திய முகமும், நல்ல சிவப்பான மெல்லிய சரீரமுமுள்ள ஓர் அழகிய சிறுமி. இரண்டு மூன்று நாள் கழிந்து அவளுக்குச் சிறிது வெட்க மாறிய வுடன், அவள் சரசமாயும், புத்திசாலித் தன மாயும் பேசும் பேச்சு, சாமிநாதனுக்கு மிகவும் சந்தோஷ மா யிருந்தது.

"எனக்கு உன் தகப்பனுரை மிகவும் பிடித்திருக் கிறது; பழகப் பழக, எனக்கு அவரிடம் அதிக மரியாதை ஏற்படுகிறது. இவ்வளவு படித்துத் தேளிந்த கொள்கை களுடைய அவர், இந்தக் கலியாணத்தைப் பற்றி அவசரப் படுத்தியது தான் எனக்கு அர்த்தமாகவே யில்லை" என்று சாமிநாதன் சொன்னுன்.

"அது எங்கம்மா கட்டாயத்தினல் நடந்தது. எங் கப்பா இன்னும் இரண்டு வருஷமாவது தள்ளி வைத்துக் கொள்ள வேண்டு மென்று சொன்னுர். ஆனல் அம்மா இணங்க வில்லை; உடனே கலியாணத்தை நடத்துவதாக அவர் ஒப்புக் கொள்ளும் வரை, இராப் பகலாக அலட்டிக் கொண்டிருந்தாள்," என்றுள், கமலம்.

"நான் முதலில் சம்மதிக்கவே யில்லை. நான் தான் சொன்னேனே, நானும், இன்னும் சில பெயருமாக, ஆண்களுக்கு இருபத்தொரு வயதும் பெண்ணுக்குப் பதினைந்து வயதும் நிறையும் வரை, பெண்டாட்டியைத் தொடுவ தில்லை என்று சபதம் செய்திருக்கிறேம். ஆனல் என் தகப்பனர், கடிதத்தின் மேல் கடிதம் போட்டார்; நிர்ப்பந்தப் படுத்தி இரண்டு தந்தியும் அடித்தார். அதனல் தான், முகூர்த்தம் நடக்கிறபடி நடக்கட்டும்; நாம் சபதத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று நினைத்து, நான் கடைசியில் ஒப்புக் கொண்டேன். அதில் உனக்கு ஆக்ஷேபணை இல்லையே?" என்று சாமிநாதன் கேட்டான்.

தன் கணவனது கடைசி வினவைக் கேட்ட வுடன், கமலம், புன்சிரிப்புச் சிரித்து, நாணத்தால் தலை கவிழ்ந்து, தன் முகத்தை இரண்டு கைகளாலும் மறைத்துக் கொண்டாள். சற்றுக் கழித்து, அவள், தன் கைகளை எடுத்துவிட்டு, மெதுவாய்த் தன் கணவனைப் பார்த்து, "உங்கள் சங்கத்தில் நீங்கள் இன்னும் என்ன என்ன சபதங்கள் செய் திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஓ! நம்மாலான மட்டும் மனம், வாக்கு, காயம், மூன்றிலும் பரிசுத்தமாய் நடந்து கொள்ள வேண்டுமென்பது ஒன்று; தேவடியாள் சதிருக்குப் போவதில்லை; பெண்டாட்டியுடன் இரு விதச் சீரும் தக்ஷிணையும் கேட்பதுமில்லை, வாங்கிக் கொள்வதுமில்லை; தண்ணீர் தவிர வேறு பானுதிகள் மருந்தாகக் கூடச் சாப்பிடுவதில்லை; சாதி வித்தியாசங்கள்,—"

"அதற்குள்ளேயே நீங்கள் வாக்கு மீறி நடந்திருக்கிறீர்களே?" என்று கமலம் தடுத்துக் கேட்டாள்.

"ஏன், எதனுல் அப்படிச் சொல்கிறுய்?

கமலம்:—"நீங்கள் வரதக்ஷிணை வாங்கித் தானேயிருக்கிறீர்கள்?"

சாமிநாதன், பரபரப்புடன், "எனக்கு, அது கலியாணத்துக் கப்புறந் தான் தெரியும். அப்பொழுது நான் சபதம் செய்து கொள்ளவில்லை; சிறு பையனுகத் தான் இருந்தேன். தம் பெண்களுக்குத் தாம் கொடுக்க வேண்டியிருக்குமென்று போக்குச் சொல்வதற்குக் கூட இல்லாமல், இவ்வளவு பணக்காரராயுமிருந்து கொண்டு, என் தகப்பனுர் என் கலியாணத்திற்கு ஏன் பணம் வாங்கினுரென்று எனக்குத் தெரியவேயில்லை. சந்தையில் விலைக்கு விற்பது போன்ற இவ்வித நடத்தையும், பேச்சுக்களும், வதூவரர்களை வாழ் நாளெல்லாம் ஒன்று சேர்த்து, ஆசீர்வதிக்கும் விவாகத்தின் புனிதத்தைக் கெடுத்து; சம்மந்திமார்கள், சாதாரணமாய் ஓர் அந்நியனிடத்தில் பாராட்டும் சிநேகமும் மரியாதையுங்கூட ஒருவருக்கொருவர் பாராட்ட முடியாமல் பண்ணி விடுகின்றன. நாளுக்கு நாள் மேன் மேலும் மனஸ்தாபங்கள் அதிகமாவதற்கே காரணமாகிறது. ஷேக்ஸ்பியர் கூற்றை வெட்டிப் பாடி, இந்த வரதக்ஷிணை வழக்கத்தைப் பற்றி, "அது கொடுப்பவர்களையும் வாங்குபவர்களையும் பீடித்து வருத்துகிறது" என்று சொல்லலாம். இந்த வழக்கம் சாஸ்திர விரோதமென்று கூடச் சொல்லுகிறுர்கள். ஒரு பெண்ணின் தகப்பனுர் தனவானுயிருந்து, அந்தப் பெண்ணுக்கு ஸ்ரீதனமாக ஆவராகவே ஏதாவது கொடுத்தால், அது ஒரு தினுசாயிருக்கும். இப்பொழுது சம்பத்துள்ளவர்கள், சீரென்று வாரிக் கொடுக்கும் பணத்தை, அப்படியேதாவது ஏற்பாடு செய்தால், அது பிற்காலத்தில், அந்தப் பெண் வைதவ்யம் அடைந்து, புனர் விவாகம் செய்து

கொள்ள விரும்பினலும், அல்லது, அநாதையாகி, விட்டாலும், அல்லது, வேறெவ்வித அசந்தர்ப்பங்களுக்குள்ளாக நேரிட்டாலும், அந்தப் பெண்ணுக்கு உதவத்தக்கதாயிருக்கும். ஆனல், இப்போதைய வழக்கப்படி, பிள்ளை வீட்டுக்காரர் பணம் பறிப்பது, கொள்ளைக்குச் சமானமே. அந்தப் பெண்ணுக்கு அதனல் ஒரு நன்மையும் ஏற்படுவதுமில்லை. எனக்கு இதைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் வெட்கமாயிருக்கிறது. சரியாய்ச் சொல்லுமிடத்து, என் தகப்பனர் உன் தகப்பனரிடம் இத்தனை ரூபாய் வாங்கிக் கொண்டு என்னை விற்றிருக்கிருர் என்றே சொல்ல வேண்டும். ஆனல் எனக்குக் கலியாண காலத்தில் அதைப் பற்றித் தெரியாது. நான் சபதமும் ஆறுமாதத்துக்கு முன் தான் செய்து கொண்டேன்,'' என்று சொல்லி முடித்தான்.

“ஆமாம், போன வெள்ளிக் கிழமைக் கலியாணத்தைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?'' என்று கமலம் கேட்டாள்.

“வெள்ளிக் கிழமைக் கலியாணத்தைப் பற்றி என்ன? நான் அன்றிராத்திரி உன்னிடம் சொன்னேனே; என் சபதத்தின் படி நடக்க வேண்டுமென்றுதானிருக்கிறேன். உனக்கு சம்மதந் தானே.''

கமலம், மறுபடியும் வெட்கப்பட்டுத் தலை கவிழ்ந்து கொண்டு, சற்றுப் பொறுத்துச் சொன்னதாவது:—நான் அதைச் சொல்லவில்லை. எங்கப்பா எங்கள் வயலிலொன்றையும், அம்மா அட்டிகையையும் விற்று, மாமனரிடம் ரூபா 800 கொடுத்ததைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்.''

சாமிநாதன்:—நீ சொல்வது புரியவில்லையே; இப்பொழுதும் என் தகப்பனர் உன் தகப்பனரிடம் பணம் வாங்கினரென்ரு சொல்கிருய்?''

கமலம்:—“அதுதான் சொல்கிறேன். உங்களுக்கு இவ்வளவு சிலாக்கியமாய்ப் பரீக்ஷை தேறியிருக்கிற படியால், வழக்கமாயுள்ள சீர், வெள்ளிப் பாத்திரங்கள் தவிர, எங்கப்பா ரூபாய் 800 அதிகம் கொடுக்க வேண்டியதாயிற்று. அது கொடுத்தாலொழிய, முகூர்த்தம் நடத்துவதில்லையென்று மாமனர் சொல்லி விட்டார்''. இதைக் கேட்டவுடன் சாமிநாதனுக்கு வெட்கமும் வெறுப்பும் கோபமும் பொறுக்க முடியவில்லை. அவன் ஆத்திரத்

துடன் சொன்னதாவது:—"இதென்ன அநியாயம்! இதென்ன வெட்கக் கேடு! என்னை இருமுறை விலைக்கு விற்ருய்விட்டது. நான் சொல்வதைக் கேள், கமலா! நானும் ஒரு ஆண் பிள்ளை யானுல், இந்தப் பணத்தை, ஆம் எல்லாப் பணத்தையுமே, உன் தகப்பனுருக்குத் திருப்பிக் கொடுக்கும் படி செய்வேன். இல்லாவிட்டால், நானுவது எப்படியாவது வேலை செய்து உழைத்து, அவருக்கு இந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்கும் வரை, என்னை யொரு அடிமை யென்றே பாவித்து நடந்து கொள்வேன். நான் இப்பொழுது செய்யக்கூடிய தெல்லாம் இதைத் தவிர வேறில்லை. இந்தப் பரிகாரத்தைக் கூட நான் செய்யா விட்டால், நான் ஒரு ஆண்பிள்ளை யல்ல. என் படிப்பும் வீணே."

IV

இராமையர், பிரித்த கடிதமும் கையுமாகத் தம் மனைவியை கூப்பிட்டுக் கொண்டே வீட்டுள் வந்தார்.

"பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறி விட்டானே யொழிய உன் பிள்ளையைப் போல அசடு பார்த்ததே யில்லை."

"ஏன் என்ன எழுதி யிருக்கிருன்" என்ருள் அவள்.

"அவன் மாமனுரிட மிருந்து நான் இது வரைக்கும் ரூபாய்2800 வாங்கி யிருக்கிறே னென்று அவனுக்கு இப் பொழுது தான் தெரிந்ததாம். எட்டுப் பக்கத்தில் எனக்கு ஒரு பிரசங்கம் செய்து, அந்தப் பணத்தை உடனே அவன் மாமனுருக்குத் திருப்பிக் கொடுத்து விடும்படி கட்டளை யிட்டிருக்கிருன். அதிகப் பிரசங்கிப் பயல்!"

சீதா லக்ஷ்மி அம்மாள், எரிச்சலுடன், "நான் அப்பொழுதே அவனை அவர்கள் வீட்டிற்கு அனுப்ப வேண்டா மென்று சொன்னேன்: அவன் மாமியாரும் அவள் தாயாரும் பேர் போனவர்கள். அவர்களுக்குத் தெரியாத மந்திரமும் மருத்தீடும் கிடையாது. என்ன மாயமோ பண்ணி, என் குழந்தை மனத்தைக் கெடுத்து, அவர்கள் தான் அவனை இப்படி எழுதும்படிச் சொல்லிக் கொடுத் திருக்கிருர்கள்." என்ருள்.

இராமையர்:—"அவனுக்குப் புத்தி யில்லையா? அவன் அங்கே போய் நாலு நாள் தானே ஆகிறது. நான் ஒருவன் தானு பிள்ளைக்குப் பணம் வாங்கி யிருக்கிறேன்?

அதுவுந் தான், நான் யார் நன்மைக்காகச் செய்தேன்? எல்லாம் அவனுக்காகத் தானே? அவன் பேச்சும் நினைவு களும் விசித்திரமாய்த்தா னிருக்கிறது. வரவர முற்றிப் போய், இனிமேல் பைத்தியக்காரர்களுடன் சேர்த்து விட வேண்டியது தான் போலிருக்கிறது.''

சீதாலக்ஷ்மி—அவனை உடனே திரும்பி வந்துவிடச் சொல்லிக் கடிதம் எழுதுங்கள்; அவன் மறுவீடு கொண்டாடினது போதும். அவர்கள் பெண் அவர்களாத் திலேயே இருக்கட்டும். இப்படிப்பட்ட அருமையான மாப்பிள்ளை நமக்குக் கிடைக்குமா என்கிற ஞானம் அவர்களுக்குத் துளியாவது இருக்கிறதா பாருங்கள்!

இரா—பணத்தை உடனே அனுப்பச் சொல்லி யெழுதி யிருக்கிறான். அதை வாங்கி அவன் மாமனாரிடம் கொடுத்து விட்டுத்தான் திரும்பி வருவனாம். பிள்ளை வெகு புத்திசாலி! தன் லாபமே இன்னும் தெரியவில்லை.

சீதா:—டிஸ்டிரிக்ட் கலெக்டர் ஆபீஸில் அவனுக்கு வேலை கொடுக்கும்படி நீங்கள் ஏற்பாடு செய்திருப்பதைப் பற்றி அவனுக்கு எழுதினீர்களா?

இரா:—இல்லை, இன்றைக்கு எழுதலா மென்றிருந் தேன். அதற்குள் உன் பிள்ளை யெழுதின பிரசங்கம் வந்து சேர்ந்தது. எடுத்ததும் ரூ 30 சம்பளம் கொடுப்ப தாகக் கலெக்டர் சொல்லி யிருக்கிறார். இந்த நாள்களில், இதே பி. ஏ. பரீக்ஷை தேறி விட்ட எத்தனையோ பேர், இருபது ரூபாய் சம்பளம் கூடக் கிடையாமல் திண்டாடும் கிறார்கள். சாமிநாதன்மட்டும், கச்சேரி பரீக்ஷைகளிலெல் லாம் சீக்கிரம் தேறினால், அவனை உடனேமேலுத்தியோகத் துக்கு உயர்த்துவதாகக் கலெக்டர் சொல்லி யிருக்கிறார். நல்ல வேளையாய், நம் கலெக்டர் பிராமணத் துவேஷி யில்லை. சிறப்பாய் பரீக்ஷைகள் தேறினவர்க ளிடம் அவருக்கு அதிக மதிப்புண்டு. அவர் கடைசியாக என்னைக் கூப்பிட்டு என்ன சொன்னார் தெரியுமா? 'உம் மகன் 'யோக்கியமாய்' மட்டும் வேலை பார்க்கட்டும், ராமையரே, —யோக்கியமாய் என்ற வார்த்தையை அவர் அழுத்திச் சொன்னார்—அவனுக்குச் சீக்கிரம் டிப்டி கலெக்டர் வேலை கிடைக்கும்,' என்று சொன்னார்.

சீதா:—அவன் இங்கே வரவிட்டு எல்லாம் தீர்மா னித்துக் கொள்ளலாம். உடனே புறப்பட்டு வரச்சொல்லி அவனுக்கு எழுதுங்கள். கலெக்டர் சொன்னதையும்

கண்டு எழுதுங்கள். இல்லாவிட்டால் நீங்களே போய் அவனைக் கூட்டிக்கொண்டு வந்துவிடுகிறீர்களா?"

இரா:—எனக்கு அந்தவாத்தியான் வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை. உன் பிள்ளையின் கொள்கைகளெல்லாம் விசித்திரமாயிருக்கிறது. சில சங்கதிகளில் அவன் மாமனார் குணம் அவனுக்கும் அமைந்திருக்கிறது. நீயும் அவனுக்கு அதிக இடம் கொடுத்து, அவன் போக்குப் படியே சாதிக்கும்படியெல்லாம் விட்டு விட்டாய். ஆனால் இந்த முரண்டெல்லாம் என்னிடத்தில் பலிக்காது. ஒன்று, அவன் உடனே இங்கே திரும்பி வரட்டும்; அல்லது அவனிஷ்டப் படியே எக்கேடோ கெடட்டும். எத்தனை நாள் அவன் மாமனார் அவனுக்குச் சோறு போடுவார் பார்ப்போம். நன்றி கெட்ட முட்டாள்!

சீதா லக்ஷ்மி:— அவனுக்குக் கோபமாய் எழுதாதேயுங்கள். அவன் சுத்த அப்பாவி; சொல்லிக் கொடுத்ததைத் தான் சொல்கிறான். அவன் சீக்கிரம் நம்வீட்டுக்கு மாத்திரம் வந்து விடட்டும். அப்புறம் நான் அவனுக்கு எல்லாம் சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் அவனை ஏதோ மருந்திட்டு மயக்கி விட்டார்கள்; இங்கிலீஷ் தெரிந்து புஸ்தகங்களெல்லாம் வாசிக்கிற அந்தக் குட்டியின் மோகத்தில் அவன் இப்பொழுது ஆழ்ந்திருக்கிறான்.

இரா:—இந்த விஷயங்களிலெல்லாம் அதிக இளக்காரங் காட்டக் கூடாது. அப்படித் தான் நீ அவனை இது வரையும் கெடுத்து விட்டாய்; அது தான் அவன் இப்பொழுது என்னைக் கூட அதிகாரம் பண்ணுகிறான். என் இஷ்டப்படி நடத்த எனக்கும் தெரியும்; அவனைப் போல நான் பி. ஏ. பட்டம் பெறாவிட்டாலும், ஒரு பரீக்ஷையிலுமே நான் தேறாவிட்டாலும், நானும் ஏதோ சாமார்த்தியமாய்த் தான் பிழைத்து, அவனை விட இரண்டொரு விஷயங்கள் அதிகம் தெரிந்தவனாய்த்தானிருக்கிறேனென்று, அவன் அறியும்படிச் செய்வேன். உடனே புறப்பட்டு வீட்டுக்கு வந்தால் வரட்டும்; இல்லா விட்டால் நான் இன்னொரு தரம் அழைக்கும் வரை, அவன் அங்கேயே இருக்கட்டும். இப்படி என் பிள்ளையையே எனக்கு எதிராளியாக்கி வைத்த அந்தப் பாழான வாத்திக்கும் புத்தி வரும்படி எழுதுகிறேன். என் கடிதத்தைக் கண்டதும், உன்பிள்ளை உடனே புறப்பட்டு வருவான்; பார்த்துக் கொண்டேயிரு."

V

ஒருவாரம் சென்றபின் இராமையருக்குப் பதிற் கடிதம் கிடைத்தது; அது, பின்வருமாறு:—

"ஸ்ரீமது அப்பா அவர்களுக்கு சாமிநாதன் அநேக நமஸ்காரம். தங்கள் கடிதத்தைப் பார்த்து எனக்கு மிகவும் வருத்தமா யிருந்தது. பல முகாந்தரங்களை எடுத்துக்காட்டி, நான் தங்களை ஆவலுடன் பிரார்த்தித்தும் கூட, நான் சொல்லும் நியாயம் தங்கள் மனதில் சிறிதுமே படவில்லையென்று நினைக்க, எனக்கு விசனமா யிருக்கிறது. நான் தங்கள் கடிதத்தைக் கவனமாய் வாசித்து, நான் உடனே திரும்பி வரா விட்டால் தங்கள் கோபத்திற்கு உள்ளாகக் கூடு மென்பதைப் பற்றியும் பலமுறை யோசித்துப் பார்த்தேன். நான் தங்களிடம் நேரிற் பேசி வேண்டிக் கொண்டால், தாங்கள் இப்பொழுது செய்திருக்கும் தீர்மானத்தை மாற்றுவீர்களென்று சிறிதேனும் நம்புவற்கு இட மிருந்தால், நான் தங்கள் சொற்படி உடனே திரும்பி வருவேன். ஆனால், தாங்கள் அவ்வித நம்பிக்கைக்கு இடங் கொடுக்கவே யில்லை; நான் இப்பொழுது அங்கே வருவது அதிக மனஸ்தாபத்தை உண்டாக்கக் கூடுமே யன்றி, ஒருவித நன்மையையும் விளைக்காது. தாங்கள் எனக்கு அருளிய கல்விச் செல்வத்திற்காக நான் தங்களிடம் எவ்வளவு மனப் பூர்வமான நன்றி பாராட்டுகிறேன் என்பது கடவுளுக்குத் தெரியும். ஆனால், தங்களைத் திருப்தி செய்யும் விஷயத்தில் கூட, என் மனச்சாக்ஷிக்கு நேர் விரோதமாய் நடந்தே னானால், அது, அந்தக் கல்வியையே முழுதும் பொய்ப்பித்த தாகும். அவள் தகப்பனார் குடித்தனத்தைப் பாழாக்கிய பின்னே, நான் முதல் முதல் என் மனைவியுடன் இல்லறம் நடாத்தி வாழ வேண்டும்! ஒரு வேளை, தாங்கள் ஏழையாயும், என் படிப்புச் செலவுக்காகக் கடன் பட்டவராயுமிருந்து, என் மாமனார் தங்களிலும் தனவானாயும் தங்களுக்குப் பொருளுதவ இஷ்ட முள்ளவராயும் இருந்திருந்தால், இதை ஒருவாறு காரணங்கூறிக் குற்றமற்றதாகக் கொள்ளலாம். ஆனால் இப்பொழுது உள்ளபடி, சந்தையில் விற்கப்போகும் மாட்டுக்கு அதிகத் தீனிபோடுவது போலவே, எனக்குக் கல்வி பயிற்றித் தாங்கள் என்னை என் மாமனாருக்கு ரூ 2800—க்கு விற்று விட்டதாகவே நினைப்பதைத் தவிர, எனக்கு இதைப் பற்றி வேறு விதமாக எண்ணமுடிய

வில்லை. அந்தப் பணத்தை எப்படி யாவது அவருக்குத் திருப்பிக் கொடுத்தா லொழிய, நான் என்னைச் சுதந்தர வாளியாகப் பாவிக்க முடிய வில்லை. தாங்கள் என் அடிமைத் தனத்தை நீக்க மறுத்து விட்ட படியால், நானே என்னை மீட்டுக் கொள்ள வேண்டியதா யிருக்கிறது. புல்லூர் மிஷன் காலேஜில் மாதம் ரூ 100 சம்பளத்துக்கு உபாத்தியாயர் வேலை பார்ப்பதாக, நான் இன்று ஒப்புக் கொண்டாய் விட்டது. சிறந்த உத்தியோகமான கல்வி கற்பிக்கும் தொழிலை அவமதித்து இகழ்ந்து, கலெக்டர் கச்சேரியில் ரூ. 30 சம்பளத்தில் என்னை அமரும்படித் தாங்கள் விரும்புகிறீர்க ளென்று எனக்குத் தெரியும். ஆனல், நான் அதை ஒப்புக்கொண்டால், இன்னும் 10, 15 வருஷங்களில் கூட, என் கடனைத் தீர்த்துக்கொள்ள முடியாது; தவிரவும், பேனைப் பிடித்துத் தொண்டு புரிவதிலும், படிப்புச் சொல்லிக் கொடுக்கும் வேலை எனக்குப் பிடித் திருக்கிறது. நான் செட்டாய்த் தான் செலவு செய்யப் போகிறேன்; என் மாமனுருக்கு, மாதா மாதம், ரூபா 75 ஆவது அனுப்ப முடியு மென்று நினைக்கிறேன். தங்கள் சொற்படி நான் உடனே அங்கே வர முடியாததைப் பற்றித் தாங்கள் என்னை மன்னிக்கும் படி மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நான் அடுத்த லீவில் வீட்டுக்கு வந்து, தங்களையும் என் அருமைத் தாயாரையும் நேரிற் கண்டு, அப்பொழு தாவது மன்னிப்புப் பெற்றுக் கொள்வேன். தாங்கள் என் நடத்தையைக் குற்றமாகப் பாராட்டாமல், என்னைப் பொறுத் தருள்வீர்க ளென்று நம்புகிறேன். நான் நாளைய தினம் புல்லூருக்குப் புறப்பட்டுப் போகிறேன்; அங்கிருந்து தங்களுக்கு மறுபடியும் எழுதுகிறேன்.

இப்படிக்குத்

தங்கள் பணிவுள்ள,

சாமிநாதன்.

# 3. திரௌபதி கனவு

நான் ஒரு பிராமணக் கைம்பெண். எனக்கு முதல் முதல் ஞாபகத்துக்கு வருவதில், நான் குழந்தையா யிருக்கும் பொழுது ஒரு நாள், நான் பல்லக்கேறி ஊர்கோலம் வந்ததும், மறுநாள் என்னுடன் பல்லக் கேறின பையனை பாடையில் தூக்கிச் சென்றதும் ஞாபக மிருப்பதனால், நான் பிறக்கும் பொழுதே கைம்பெண்ணாகப் பிறக்க வில்லையென்று நம்புகிறேன். எனக்கு, 'திரௌபதி' என்று என் பெயரிட்டார்களோ, நான் அறியேன். கொடிய விஷப் பாம்பை 'நல்ல பாம்பு' என்றும், கரிய நிற முள்ள ஆட்டை 'வெள்ளாடு' என்றும் அழைப்பது போலவே, மகா வீரர்களும் தன் மனம் போல் நடப்பவர்களு மான ஐந்து ஆசை மணாளர்களின் பத்துக் கண்களுக்கும் ஒரே மணிபோல விளங்கிய அதி பாக்கியசாலியான இராஜ புத்திரியின் பேரை, எனக்கிட் டிருக்கலாம். என் பன்னிரண்டாவது பிராயம் வரை நானும் சந்தோஷமாகவே வளர்ந்து வந்தேன். அப்பொழுது ஒருநாள் திடீரென்று என் ஆசை நகைகளை யெல்லாம் களைந்து, என் தலையையும் மொட்டை யடித்து, என்னை ஓர் அறைக்குள் அடைத்து விட்டார்கள். என் கஷ்டத்தைக் கண்டு சகிக்கமாட்டாமலே, என் தாயும் அதன் பின் சீக்கிரம் இறந்து விட்டாள். என் தகப்பனார் புனர் விவாகம் செய்து கொள்ளவே, நான் அவருடைய புதிய மாமியார் ஆட்சிக் குள்ளானேன். அவளும் என்னைப் போல் ஒரு விதவையே; ஆனால், மிக்க அனுபோகசாலி. அவள், தன் யௌவன தசையில் என்னென்ன அகிருத்தியங்க ளெல்லாம் செய்தாளோ, அது சுவாமிக்குத் தான் தெரியும். நான் கொழுத்துப் போய்க் கெட்டு விடாதபடி, அவள் எனக்கு ஏற்படுத்திய பட்டினிகளும், விரதங்களும், நோன்புகளும், ஓய்வு ஒழிவின்றி விடியச் சாமமுதல் நடுநிசிவரை இட்ட வேலைகளும், அம்மம்ம! சொல்லி முடியா.

என் தகப்பனார் என்னைக் கவனிப்பதே யில்லை. ஆகவே, அவ்வீட்டில் நான் எவ்வளவோ கஷ்டப் பட்டேன்; அநேக நாள்களில், வயிற்றுப் பசியால் தூக்கம் பிடிக்காமல், இரவெல்லாம் அவஸ்தைப் பட்டேன். வருஷத்தில் இரண்டுதரம், பள்ளிக்கூட விடுமுறை நாட்களில், என் தமையன், ஊருக்கு வருவ துண்டு. அக்காலங்களில் என் பாடு கொஞ்சம் சௌக்கியமா யிருக்கும். அவனுக்

குப் பயந்து, எனக்குப் பட்டினி குறையும். அவன் கபட மற்ற சந்தோஷ குணமுள்ள பையன்; என் மேல் மிக்க வாஞ்சை யுள்ளவன். என் கஷ்டங்களைச் சகித்துக் கொள் ளும்படி புத்தி கூறுவதைத் தவிர, அவனால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. ஆனால் மற்ற நாடுகளிலும் மற்றச் சாதியார்களுக் குள்ளும் ஸ்திரீகள் நடத்தப்படும் நாகரி கத்தையும், கைம்பெண்களுமே கஷ்டமின்றி வாழும் பாங் கையும் பற்றி, அவன் புஸ்தகங்களில் படித்ததை, எனக்கு எடுத்துச் சொன்னதினால், என் பொறுமை குன்றவே செய்தது. அவன் கதைகளைக் கேட்டு என் மனத்தில் நூதனமான ஆசைகள் பிறந்தன; நிறை மீறிய எண்ணங் களும், ஆஸ்பத மற்ற நம்பிக்கைகளும், என் மனத்தைக் குழப்பி, என் மனக் கசப்பை அதிகரித்தன. ஸ்திரீகள் மட்டும் ஏன் இவ்வாறு கஷ்டப்பட வேண்டும்? வயோதி கரான என் தந்தை, ஐம்பது வயதுக்குமேல், என்னிலும் சிறிய ஒரு பெண்ணைப் புனர் விவாகம் செய்து கொள்ள வில்லையா? நானும் ஒரு வாலிபனை மணந்து, என் மற்றப் பெண்களைப் போல் சந்தோஷமாய் வாழக் கூடாது? என் னுதை எண்ண மெல்லாம் எண்ணி யெண்ணி என் ஏழை நெஞ்சம் எத்தனை நாள் வீணே புண்படுவது? இயற்கையி லேற்பட்ட ஆசாபாசங்களை எத்தனை நாள் அடக்கி அமிழ்த்துவது? புருஷருக் கெல்லாம் ஒரு கடவுளும், ஒரு தர்மமுமா, ஸ்திரீகளுமட்டும் வேறொரு கடவுளும் வே றொரு தர்மமுமா? என் போன்ற ஒரு வாலிப விதவை, இவ்வாறு வாழ்நாளை யெல்லாம் வறிதே, ஆசையின்றி, சந் தோஷமின்றி, ஓய்வொழிவில்லாத் துயரத்தில் மனக் கசப் போடு நடைப் பிணம் போற் கழிப்பதினும், கணவன் இறந்த வன்றே உடன்கட்டை ஏறிவிடுவது திறமன்றோ? என் சித்தி, என் தகப்பனாரின் இளையாள், எனக்கு இரண்டு வயதுக்குச் சின்னவள், அவருடன் சந்தோஷமாய் வாழ வில்லை என்பது எனக்குத் தெரியும்; ஆனால் என் கதி அவள் கதியினும் மிகக் கேடாயிருந்தது. ஒரு நாள் கை தவறி ஒரு பாத்திரத்தை நான் கீழே போட்ட பொழுது, அவள் தாய், அதாவது என் தகப்பனாரின் மாமியார், என் னைக் கரண்டிக் காம்பினால் மண்டையையுடைத்ததுமன்றி, என்னைக் கண்டபடி திட்டி ஏசினாள். என்னால் பொறுக்க முடிய வில்லை. நான் ஏதோ சூளாகப் பதில் சொல்லி விட்டு, ஓர் அறைக்குட் போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டேன். அங்கு வெகு நேரம் தேம்பித் தேம்பி மனம் நொந்து அழுதேன். எப்பொழுதினும் முரட்டுத்

தனமான எண்ணங்கள் என் மனத்தைக் குழப்பின. அப்படியே தூங்கிவிட்டேன். அந்த நித்திரையில் நான் கண்ட விநோதகரமும் அதிசயகரமு மான கனவைத் தான், எனக்கு ஞாபக முள்ள மட்டும் கீழே எழுதுகிறேன். அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் அரை வயிற்றுச் சோற்றுடன் காலந் தள்ளும் ஒரு பாவிக் கைம் பெண்ணாக இருந்தது போய், நான் ஓர் அழகிய யௌவன ஸ்திரீ ஆகி விட்டேன். சுருள் சுருளாய்க் கன்னங் கரேல் என்று எனக்குத் தலை மயிர் நிறைய இருந்தது. அலங்கார மாகப் பட்டுடுத்து, ஆபரணங்கள் அணிந்து, நான் ஒரு நகரத்தின் வீதி வழியாக உல்லாசமாய் நடந்துக் கொண்டிருந்தேன். பல மோட்டார் கார்களும், குதிரை வண்டிகளும் வீதி வழியே சென்றன. அவற்றில் எல்லாம் சிங்கார மான நகைகளும் ஆடைகளும் அணிந்த ஸ்திரீகளே யிருந்தார்கள். தெருவில் நான் மிகச் சில புருஷர்களையே சந்தித்தேன். வீதியின் இருபுறமும் உள்ள மாளிகைகளிலும் வீடுகளிலும் உள்ளே புருஷர்கள் இருப்பதை, நான் சாளரங்கள் வழியாயும், திறந்திருந்த வாசல்கள் வழியாயும் கண்டேன். அந்தப் புருஷர்கள், பயந்தவர்களாயும், சோர்வுற்றவர்களாயும், பல கவலைகளுக் குள்ளானவர்களாயும் காணப்பட்டார்கள். அன்றியும், அவர்கள், வீட்டு வராந்தாக்களிலும் முன் கூடங்களிலும் நாற்காலி சோபா முதலிய ஆசனங்களில் வீற்று உல்லாசமாய்ப் பொழுது போக்கிக்கொண்டிருந்த ஸ்திரீகளுக்கு அருகே நின்று, அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். சில சன்னல்களின் வழியாக, புருஷ ரூபமுள்ள வேறு சிலரையும் நான் பார்த்தேன்; அவர்களைப் பார்க்கவே எனக்குப் பயமா யிருந்தது. தலையிலும் சரீரத்தின் மேலெங்கும் மயிர் வளர்ந்து, எண்ணெய்ப் பதமே யறியாமல், அவர்கள் கரடிகள் போல விகாரமாய்த் தோன்றினர்; அவர்கள் நகங்களும் நீளமாக வளர்ந்து அழுக்கடைந்து இருந்தன; சாக்குப் போன்ற முரடான பிசுக்குப் பிடித்த ஒரு வஸ்திரத்தையே அவர்கள் தரித்துக்கொண்டிருந்தார்கள்; அவர்களது ஆழ்ந்த கண்களையும் வெளிறின கன்னங்களையும் பார்த்தால், அவர்கள் எப்பொழுதுமே அரைப் பட்டினியாக இருப்பவர்கள் போலத் தோன்றிற்று; அவர்கள் ஸ்நானம் செய்வதே இல்லைப் போலும்; அவ்வளவு அசங்கியமாயும், துர்க்கந்த முடையவர்களாயு மிருந்தார்கள். இவ்வளவு விந்தையான பிராணிகளை நான் சிறிது உற்று நோக்கினேன்; ஆனால் நான் அப்படி நோக்குவதை

அறிந்த க்ஷணமே, அவர்கள் சன்னல்களை மூடிக்கொண்டார்கள்; சிலர் மட்டும் என்னை ஆச்சரியத்துடன் எதிர்நோக்கினார்கள். வீதியில் செல்லச் செல்ல, காட்சி பங்களாவி லிருந்து வெளியே தப்பி யோடிவந்த, பசியால் வறண்டு மெலிந்த கரடிகளே யிவர், புருஷரல்ல என்று சொல்லும்படியான இந்தப் பிராணிகளிற் பலரை, நான் சந்தித்தேன்; அவர்களில் வாலிபரும் இருந்தனர், வயோதிகரும் இருந்தனர்; ஆங்காங்குச் சிலர் மட்டும் நன்றாய்த் தின்று கொழுத்து வாழும் சுக ஜீவிகளாகத் தோன்றினர். இவர்களில் இரண்டொருத்தர் என்னை ஆசையுடன் வெறித்து நோக்கிக், கண்ஜாடை செய்தார்கள். மற்றொன்றும் நான் கவனித்தேன்: இந்தப் பிராணிகள் ஒவ்வொருவருக்கும் கழுத்தில் ஒருமணி கட்டியிருந்தது; அவர்கள் நடக்கும் பொழுதும் அசையும் பொழுதும் அது குலுங்கிச் சப்தித்தது.

அந் நகரத்து நடபடிக்கைகளையும் நகர வாசிகளின் நடை யுடை பாவனைகளையும், பார்க்கப் பார்க்க எனக்கு சரியம் அதிகரித்தது. அதைப் பற்றி விசாரிக்க விரும்பினேன். சம்பங்கிக் கொடி படர்ந்து நிழல் செய்த ஒரு வீட்டு வராந்தாவில், சாய்வான நாற்காலியின் மேல், ஒரு ஸ்திரீ சாய்ந்து கொண்டிருப்பதையும், அவள் அருகே ஒரு புருஷன் நின்று விசிறியால் வீசிக்கொண்டிருப்பதையும் கண்டு, அவளிடம் விசாரிக்கத் தீர்மானித்தேன். அவளுக்கு முப்பத்தைந்து வயசும் அவனுக்கு இருபது வயசும் இருக்கலாம். சாதாரணமாக அவனைப்போன்ற ஒரு யௌவன புருஷன் முன்னிலையில், நான் பேசத் துணிந்திருக்க மாட்டேன். ஆனால் அவன் வெகு நாணய முள்ளவனாகவும் பயந்தவனாகவும் தோன்றினான். அந்த ஸ்திரீ சுமுகமாயும் நல்லவள் போலும் தோன்றினாள். ஆகவே, நான் துணிந்து அவள் அருகே சென்றேன். நான் நெருங்கிச் செல்ல, அவள் என்னைக் கண்டவுடன், "சேவகா! சேவகா" என்று, அவள் இருமுறை கூப்பிட்டாள். சேவகன் பக்கத்தில் இல்லாமையால், தனக்கு விசிறிக்கொண்டிருந்தவனை ஒரு நாற்காலி கொண்டு வரும்படி கட்டளையிட்டாள். அவனும் உடனே கொண்டு வந்தான். பின்பு அவன் நாணித் தலை குனிந்து, என்னையொரு தரம் வெறித்துப் பார்த்து விட்டு, வீட்டுக்குள் போய்விட்டான். எனக்கு இதெல்லாம் விந்தையா யிருந்தது. பின்பு அந்த ஸ்திரீ, "உட்காருங்கள்; தாங்கள் இந்த ஊருக்குப் புதிது போல் இருக்கிறது?" என்று, என்னைப் பார்த்துச் சொன்னாள்.

நான், அந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "ஆமாம். நான் புதிது தான். எனக்கு எல்லாம் விந்தையாயிருக்கிறது" என்றேன்.

ஸ்திரீ :—தாங்கள் ஆண் உலகத்திலிருந்து வருகிறீர்களோ?

நான் :—தாங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லையே. இது வேறு உலகமோ?

இதைக் கேட்டவுடன் அந்த ஸ்திரீ விழுந்து விழுந்து சிரித்தாள். பின்பு என்னைப் பார்த்து, "இல்லை! இல்லை! இது வேறு லோகம் ஒன்று மில்லை. இது பெண் நாடு; இங்கே யுள்ள சட்டங்களும் நடபடிக்கைகளும் உங்களுராகிய ஆண் நாட்டிற் போலிரா; வேறு மாதிரியாக இருக்கும்." என்று சொன்னாள்.

நான் :—அப்படித் தானிருக்கும். இப்பொழுது இங்கிருந்து போனாரே, அந்த யௌவன புருஷர் யார்?

ஸ்திரீ :—அவன் தான் என் கணவன்; அதாவது, என் இரண்டாவது கணவன்.

நான் :—ஆனால், விதவைகள் இங்கே புனர் விவாகம் செய்து கொள்ளலாமோ? அதுவும், தங்களிலும் வயதில் சின்னப் புருஷரை மணந்து கொள்ளலாமோ?

ஸ்திரீ :—அதி லென்ன சந்தேகம்? எத்தனை தரம் வேண்டு மானாலும் விவாகம் செய்து கொள்ளலாம். யாராவது ஒரு கிழப் பிணத்தைத் தேடிக் கலியாணம் செய்து கொள்வார்களோ? என் அக்காள், முதலில் ஒரு யௌவன புருஷனை ஆண் கொண்டாள். இந்த நாட்டிலே 'பெண்கள் வாழ்க்கைப் படுவது' என்று சொல்வதில்லை. 'ஆண் கொள்ளல்' என்று சொல்வது தான் வழக்கம். அவனால் பெண் குழந்தை பிறக்க வில்லை; அதற்காக மற்றொருவனை ஆண் கொண்டாள்; அவன் அடுத்த வருஷம் இறந்து விட்டான். பின்பு சென்ற மாதம் தான் இரண்டு யௌவன புருஷர்களை ஜோடியாய் ஆண் கொண்டிருக்கிறாள். அவள் பெரிய பணக்காரி: ஆனால் இன்னும் பெண் குழந்தையில்லை. முதல் புருஷனால் இரண்டு பசல்கள் தான் பிறந்திருக்கு.

நான்:—தங்கள் அக்காளுக்கு எத்தனை வயசிருக்கும்.

ஸ்திரீ :—அவளுக்கா? நாற்பது ஆகிறது. அதனால் தான் ஒரு பெண் குழந்தை யாவது சீக்கிரம் பிறக்க

வேண்டுமென்று ஆத்திரப்படுகிறாள். அவள் புதிதாய்க் கொண்டிருக்கும் கணவர் இருவரும் கொழுத்த யௌவன புருஷர்; நல்ல பிள்ளைப் பேறுள்ள வம்சத்தைச் சேர்ந்த பேர். சுவாமி கிருபையினால், அவள் சொத்தையெல்லாம் கட்டியாள, ஒரு பெண் குழந்தையாவது சீக்கிரம் பிறக்க வேண்டும்.

நான் :—அதென்ன, பெண்களுக்கு மாத்திரம் தான் சொத்துண்டா என்ன?

ஸ்திரீ :—ஆமாம்: பெண்கள் மட்டுந்தான் சொத்துக்குரியவர். என் அக்காள் சொத்தை வைத்துக்கொண்டு அவள் வீட்டை யாள, அவள் மகளுக்கன்றி வேறு யாருக்குண்டு சுதந்தரம்? அவள் பிள்ளைகள், அவரவரை ஆண் கொண்ட மனைவிமார் வீட்டுக்குப் போய், அவரவர் அதிர்ஷ்டவசம் போல அங்கே வாழ்வார்கள். என் அக்காள் தன் பிள்ளைகள் விஷயத்தில் கொஞ்சம் சிரமம் எடுத்து, அவர்களை நன்றாய்ப் படிப்பித்திருக்கிறாள்: அதனால் அவர்களுக்கு நல்ல எஜமானிகள் எளிதாய்க் கிடைப்பார்கள். இதோ என் இரண்டாம் கணவனைப் பாருங்கள், நல்ல வம்சத்தைச் சேர்ந்தவன்: அவனைப் போல இந்தப் பெண் நாட்டிலே அவ்வளவு யோக்கியமான ஆத்துக்காரன் இல்லையென்றே சொல்லலாம். வீட்டு வேலைகளையும் தன்னைக் கொண்ட தன் மனையாட்டியின் சௌகரியங்களையும் அவனைப் போல் நன்றாய்ப் பார்த்துக் கொள்பவர் துர்லபம். தங்களைக் கண்டவுடன் ஏன் உள்ளே ஓடிப்போய் விட்டான் தெரியுமா? எனக்கு அசூயை கிடையாது; என் தோழிகளுடன் அவன் இருப்பதைப் பற்றி நான் பொறுமைப்பட மாட்டேன்; சந்தேகப் படவு மாட்டேன். நான் இந்த நாட்டிலே ஆசாரச் சீர்திருத்தச் சபையைச் சேர்ந்தவள். உள்ளே குழந்தை அழுதான். அவன் நல்ல ஆத்துக்காரன் ஆனதினால், உடனே குழந்தையைக் கவனிக்கும்படி உள்ளே ஓடிப்போனான்"

இந்தச் சமயத்தில், அவள் புருஷன், கையில் ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டு திரும்பி வந்து, அவள் மடிமேல், மெதுவாய் பத்திரமாய் அந்தக் குழந்தையை விட்டு விட்டு, அவள் வீற்றிருந்த நாற்காலிக்குப் பின்னாக நிற்கலானான். எனக்கு நான் கண்டதெல்லாம் கனவோ நனவோ, அல்லது திடீரென்று புத்தி மயங்கிப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று, ஒன்றும் புலப்படவில்லை. மற்றொரு சங்கதியையும் அறிய விரும்பி, நான் அந்த ஸ்திரீ

யைப் பார்த்து—"சன்னல்கள் வழியாயும், தெருவிலும், கரடிகள் அல்லது காட்டு மனிதர் போன்ற, மகா துர்பாக்கியர்கள் போன்ற சில புருஷர்களைப் பார்த்தேனே; அவர்கள் யார்? அவர்கள் என் மற்றப் புருஷர்களைப் போலில்லை" என்று கேட்டேன்.

ஸ்திரீ:—ஓ! அவர்களா? அவர்கள் தான் மனைவிகளை இழந்த ஆண் விதவைகள். எங்கள் பூர்வ வழக்கப்படி, ஒரு பெண் ஒரு பையனைச் சிறு வயதிலே ஆண் கொள்கிறாள்; சில விவாகங்கள் அவர்கள் குழந்தைகளா யிருக்கும் பொழுதே நடந்தேறி விடுகின்றன. துர் அதிர்ஷ்டத்தால் பெண் இறந்துவிட்டால், பையன் ஆண் விதவையாகி விடுகிறான்; அவன் ஆயுள் முழுதும் அப்படியே இருக்க வேண்டியது தான்; மறு விவாகம் செய்து கொள்ளக் கூடாது.

நான்:—ஆனால் அவர்கள் மயிரையும் நகங்களையும் வளர்த்துக் கொள்வதேன்? குளியாமல் துர்க்கந்தம் வீசக் காட்டு மனிதர் போல் இருப்பதேன்? கழுத்தி லேன் மணி கட்டிக் கொண் டிருக்கிறார்கள்?

ஸ்திரீ:—அதா? எப்படி யிருந்தாலும் காமம் பொல்லாது; ஸ்திரீகளாகிய நாமோ மகா காமுகர்கள்; நமது சுகத்தையே தேடுகிறவர்கள். அப்படிச் செய்கிறது எல்லாம், நம்மால் ஆண் விதவைகள் கற்பழிந்து கெட்டுப் போகாமல் தான். அவர்கள் அவ்வாறு அசங்கியமாயும் கோரமாயு மிருந்தால், ஸ்திரீகளாகிய நாம் அவர்களைக் கண்டு ஆசைப்பட மாட்டோம் என்பது கருத்து. ஒரு நோய்க்கு மருந்து கொடுப்பதினும் நோய் வராமலே தடுத்து விடுவது நல மல்லவா? இந்த துர்ப்பாக்கியர்களான ஆண் விதவைகள், மங்கல காரியங்கள் ஒன்றுக்கும் ஆகாதவர்களாக, யாவராலும் கரிக்கப் படுகிறார்கள். ஏதாவது சுப காரியமாக ஸ்திரீகள் புறப்படும் பொழுது, அவர் எதிர்ப்படுவதை யறிந்து விலகிக் கொள்ளும்படி, அவர்களுக்கு மணி கட்டி வைத்திருக்கிறது.

நான்:—ஆனால் இப்படி மனைவிகளை யிழந்த புருஷர் புனர் விவாகம் செய்து கொள்வதே யில்லையா? அவர்கள் வாழ் நாள் முழுதும் சிற்றின்ப சுகம் இன்னதென்று தெரியாமலே இருக்கிறார்களா?

ஸ்திரீ:—எங்கள் புராதன சாஸ்திர விதிப்படி ஆண் விதவைகள் மறுபடியும் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது. அன்றியும் ஒரு ஆண் விதவை ஒரு மயிரை

யேனும் க்ஷவரம் செய்து கொண்டால், அல்லது ஆண்டில் இரண்டு தடவைக்கு அதிகம் ஸ்நானம் செய்தால், அல்லது தன் நகங்களை வளராமல் கத்தரித்தால், அல்லது என்றேனும் ஒரு தரத்துக்கு மேல் போசனம் செய்தால், அவனும் அவன் பிதிர்க்களும் சாசுவதமான கொடிய நரகத்தை யடைவார்கள் என்று விதிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், தங்களுக்குத் தெரியாதா,—ராமா! இந்த அம்மாளுக்குக் களைப்பா யிருக்கும். கொஞ்சம் டீ போட்டுக் கொண்டு வா பார்ப்போம். "எனக்குக் களைப்பாயில்லை. டீ வேண்டாம்" என்று நான் சொல்லியும் கேளாமல் அவள் உத்தரவுப்படி உடனே அவள் புருஷன் டீ போட வீட்டுக்குள் போய்விட்டான். பின்பு அந்த ஸ்திரீ கொஞ்சம் அந்தரங்கமாக என்னிடம் பின் வருமாறு பேசலானாள் :—

"எல்லா ஆண் விதவைகளும் வாழ் நாளெல்லாம் கற்புத் தவறாமல் இருக்கமுடியா தென்பது தங்களுக்குத் தெரியாதா? அதுவுமன்றி, ஆண் விதவைகளிற் சிலர், அதி சுந்தரமான யௌவன புருஷர்களா யிருப்பதினால், ஸ்திரீகளாகிய நாமே, மோகத்தினால் அவர்களைக் கற்பழித்துக் கெடுத்து விடுகிறோம்; அந்த அவமானமும் பாவமும் அவர்களைச் சேர்ந்தது. அதிக பகிரங்கமாகி ஊர்க்கேலி யாகாமல், இலை மறைவு காய் மறைவாக மட்டும் இருந்தால், இந்த மாதிரி விஷயங்களில், கண்டும் காணாமலும், அப்படி அப்படித் தான் இருக்கும். எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. ஆசாரச் சீர் திருத்தக் கட்சியாராகிய நாங்கள், ஆண் விதவைகள் புனர் விவாகம் செய்து கொள்ளலா மென்று புதிதாக ஒரு சட்டம் உண்டாக்கி யிருக்கிறோம். ஆனால், ஊர் வாய்க்குப் பயந்து, ஓர் ஆண் விதவையுமே இது வரையும் புனர் விவாகம் செய்து கொள்ளவில்லை. ருது சாந்தி யாகு முன்னர், குழந்தைப் பருவத்திலேயே மனைவிகளை இழந்து விதவைகளாகி விட்ட ஆண்களாவது மறுபடியும் விவாகம் செய்து கொள்ள வேண்டு மென்பது, எங்கள் கோரிக்கை. அவர்கள் பிள்ளைப் பேறின்றி யிருப்பது, தேசத்துக்கே பெரும் நஷ்டமாகிறது. என்ன செய்யலாம்? வைதீகர்கள் வெகு பிடிவாதமாக, குருட்டுத் தனமாக நடக்கிறார்கள். எல்லாம் கல்வி யறிவு பரவப் பரவ நாளடைவில் தான் சீராக வேண்டும்.

நான் :—உங்கள் நாட்டுப் புருஷர்கள் இதற்கெல்லாம் சம்மதிக்கிறார்களா? ஸ்திரீகளுக்குள்ள சுதந்தரங்கள் தங்க

ளுக்கும் வேண்டு மென்று அவர்கள் கலகம் செய்து மீறி நடப்ப தில்லையா?

ஸ்திரீ :—தாங்கள் இந்த ஊருக்குப் புதி தென்பது நன்கு விளங்குகின்றது. புருஷர்கள் மீறி நடக்கிறதா! அவர்கள் பரிதாபமான நிலைமையைச் சீர்ப்படுத்தி, அவர்கள் படும் அவஸ்தைகளையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் நீக்க வேண்டு மென்று முயலும் ஆசாரச் சீர் திருத்தக் காட்சியாருக்கு முக்கிய விரோதிகள் அவர்களே! தடை யெல்லாம் அவர்களால் தான் உண்டாவது. ஒவ்வொரு ஆண் விதவையும் தன் மனைவி பிரேதத்துடன் உடன் கட்டையேற வேண்டு மென்று, எங்கள் ஸ்திரீ முன்னோர்கள் ஒரு விதி ஏற்படுத்தி யிருந்தார்கள். அப்படிச் செய்யக் கூடாதென்று நாங்கள் ஒரு சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறோம். அப்படி யிருந்தும், இன்னும், பல புருஷர்கள், தங்களை ஆண் கொண்ட எஜமானிகள் இறந்தவுடன், தாங்களாகவே தண்ணீரில் விழுந்து மூழ்கியும், அல்லது தீப்பாய்ந்தும், தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். அபூர்வமாக, அது, மனைவி மேலுள்ள வாஞ்சையினாலும் விசுவாசத்தினாலும் ஏற்படுகிறது; ஆனால், வெகுவாக, ஆண் விதவையாயிருந்து கஷ்ட ஜீவனம் செய்வதினும், அவ்வாறு இறப்பதே நலம் என்னும் எண்ணம் தான், முக்கிய காரணம். தலை முறை தலை முறையாய், எத்தனையோ நூற்றாண்டு களாகக், கல்விப் பயிற்சி யின்றி, வீட்டுக்குள் அடைத்துக் கிடந்தமையினால், அறியாமையிலும் அஞ்ஞானங்களிலும் ஆழ்ந்து கிடந்தமையினால், புருஷருக்கு ஆண் தன்மையே குன்றி விட்டது; தங்கள் நன்மைக்குத் தாங்களே தடைகளாகி விட்டார்கள். இப்பொழுது திரும்பவும் அவர்களைப் படிப்பிக்க முயலுகிறோம். ஆனால் வெகு சிரமப் படுகிறது. புருஷரை இவ்வாறு சீர்ப்படுத்த வேண்டும் என்று ஸ்திரீகளுக்குள்ளும் அபிப்பிராய ஒற்றுமை யில்லை இதோ இருந்தானே, என் ஆத்துக்காரன். ராமன்; இவன் நன்றாய்ப்படித்தவன் தான், ஆனாலும் என்ன? தன் பாலாராகிய புருஷர்களைப பற்றி அவனுடைய அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் தாங்கள் கேட்டால், தங்களுக்கே ஆச்சரியமா யிருக்கும்."

இதற்குள் அவள் புருஷன், டீயும் பிஸ்கோத்து பக்ஷணங்களும் கொணர்ந்து, ஒரு தாழ்ந்த மேஜை மேல் எங்கள் முன் வைத்தான். அந்த ஸ்திரீயும் நானும் சாப்பிட்டோம்; அவன் குழந்தையை வைத்துக்கொண்டு

அருகே நின்றான். நாங்கள் டீ பானம் பண்ணின பின், அந்த ஸ்திரீ, அவனைப் பார்த்து, "ராமா! இந்த அம்மாள் நம்மூருக்குப் புதிதாக வந்திருக்கிறார்கள். ஆண் விதவைகள் புனர் விவாகம் செய்து கொள்வதைப் பற்றி உன் அபிப் பிராயத்தை அறிய விரும்புகிறார்கள். கூச்சப் படாதே. சும்மா தாராளமாய் உன் அபிப்பிரா யத்தைச் சொல், கேட்போம்" என்று சொன்னாள்.

அந்த யௌவன புருஷன், சிறிது வெட்கத்தினால் முகங் கோட்டி, நான் அடைந்த பின் முதல் முதல் அப் பொழுது தான் வாயைத் திறந்து, பின் வருமாறு பேச லானான்.

"அது சுத்த அநியாயம்! கற்புள்ள புருஷன் ஒரு வன், எவ்வாறு தன் மனைவியை யன்றி மற்றொரு பெண் ணின் மேல் காதலாகக் கூடும்? அவன் மனைவி யிறந்து போனால், அது பூர்வ கர்ம பலன்; அவன் விதி; அவ்வளவு தான். மற்றொரு ஜன்மத்திலாவது அவளைத் திரும்பியும் தான் மனைவியாக அடைந்து, சுமங்கலனாக வாழும்படி, தெய்வத்தைப் பிரார்த்தித்து நோன்பு நோற்றுக் கொண்டி ருப்பதுதான், அவன் கடமை. விதியை யாரால் வெல்ல முடியும்?"

அந்த அதிசயமான யௌவன புருஷனுடன் பேச எனக்கு வெட்கமா யிருந்தது. ஆயினும், வெட்கத்தை யடக்கி மனத்தைத் தைரியப் படுத்திக் கொண்டு, "புருஷ ரை இழந்த ஸ்திரீகள் மறுபடியும் உங்களுக்குள் விவாகம் செய்து கொள்ள வில்லையா? அவர்களும் விதி யென்று ஏன் சும்மா இருக்க வில்லை?" என்று கேட்டேன். "அவர்கள் ஸ்திரீகள்; நாங்கள் புருஷர் தானே! அவர்கள் எத்தனை முறை வேண்டுமாயினும் கல்யாணஞ் செய்துக் கொள்ளலாம். ஆனால் புருஷர்கள்,—எந்த வெட் கங் கெட்ட ஆண் விதவை, தான் தெய்வத்தையும் எதிர்த் துப் புனர் விவாகம் செய்து கொள்ளும் மகா பாதகத் தைச் செய்யத் துணிவான்? உலகத்திலுள்ள தர்ம சாஸ் திரங்களெல்லா வற்றிலும் எங்களுடையதே அதி சிரேஷ்ட மானது: மகா ஞானிகளும் பண்டிதைகளுமான ஸ்திரீ ரத் நங்களால் எழுதப் பட்டது. இப்பொழுதும் சாஸ்திரஞ்ஞர் களாகிய ஸ்திரீகள் தெரிந்து சொல்கிறபடி, புனர் விவாக மென்பது, ஸ்திரீகளுக்கு மட்டும் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய, புருஷர்களுக்கு ஒரு நாளும் கூடாது." என்று, மிக்க ஆத்திரத்துடன் அவன் பதில் சொன்னான்.

அந்த ஸ்திரீ :—"கேட்டீர்களா ராமன் சொல்லுவதை? ஆசாரச் சீர் திருத்த சபைக்கும், புருஷரை மேம்படுத்தும் சபைக்கும், இன்னும் அவை போன்ற விசாலமான கொள்கைகளேயும் நோக்கங்களேயு முடைய நாலேந்து சபைகளுக்கும் நான் காரியதரிசியா யிருக்கிறேன். என் ஆத்துக்காரனுடைய அபிப்பிராயமோ இப்படி யிருக்கிறது! நான் தான் சொன்னேனே: புருஷர்களுக்கு முக்கிய விரோதிகள் புருஷர்கள் தான். ராமா! நூதனமாக வந்தவர்கள் முன்பு, நீ இவ்விதமாக என்னை அவமானப் படுத்தினல், உன் அபிப்பிராயங்களை நீ சீக்கிரம் திருத்திக் கொள்ளா விட்டால், நான் உன்னை விலக்கி வைத்துவிட்டு, வேறு புத்தி சாலியான ஆத்துக்காரன் ஒருவனை ஆண் கொண்டு விடுவேன் பார்த்துக் கொள்."

இதைச் சொல்லி, அந்த ஸ்திரீ, பக்ஷமாய்த் தன் புருஷனை நோக்கிப் புன்னகை செய்தாள். அவன் நாணத்தால் தலை குனிந்து புன்னகை செய்து கொண்டு, குழந்தையை அவள் மடிமேல் வைத்தான். அந்த ஸ்திரீ, "ஓகோ! இந்தக் குழந்தைக்காக உன்னைத் தள்ளிவிட மாட்டேனென்று நினைக்கிருயோ நீ! அதெல்லாம் பலிக்காது. என்ன, ஆண் குழந்தை தானே அது? பெண்ணு பாழே போகிறது? உன்னை வெளியே துரத்தும் பொழுது; அதையும் உன்னுடன் துரத்தி விடுவேன்" என்று, சிரித்துப் பரிகாசமாகச் சொல்லி, அந்தக் குழந்தையை முத்தமிட்டுக் கொண்டாள். அவள் புருஷனுக்கு அவள் பேச்சாலுண்டான வெட்கத்துக்கும் சந்தோஷத்துக்கும் அளவு சங்கை யில்லை.

அன்று மாலை, புருஷரை மேம் படுத்தும் சபை கூடுமென்பது ஞாபகத்துக்கு வரவே, அந்த ஸ்திரீ உடனே புறப்பட்டாள். அவள் வேண்டிக் கொண்டதினல், நானும் அவளுடன் போனேன். அவள் ஆத்துக்காரன் குழந்தையையும் வீட்டையும் பார்த்துக் கொண்டு, வீட்டுள் இருந்தான். அவள் மோட்டார் காரில் நானும் அவளுமாக, அந்த ஊர் சபா மண்டபத்துக்குப் போனேம். அங்கு நடந்த சபையின் விபரத்தையும், என் குறைக் கனவையும் பின்னல் வெளி யிடுகிறேன்.

:(o):

# 4. ஓர் அபாயகரமான திரிசக்கர வண்டி



திரிசக்கர வண்டியே துவிசக்கர வண்டியினும் எளிதில் ஏறிச் சவாரி செய்யத் தக்கது. கீழே அடிக்கடி விழாது, குழந்தைகளும் ஏறத் தெரியாதவர்களும் கூட உபயோகிக்கத் தக்கது. மூன்று சக்கரங்களிருப்பதனால் ஏதும் அபாய மின்றி, சௌகரியமாய் நமக்குப் பயன் படுவது. ஆனால், நடேசையரது குடும்பம், இரண்டு சக்கரங்களோடு நில்லாமல், மூன்று சக்கரவண்டியானவுடன், இன்ன விதமாய் அதை நடத்துவது என்று தெரியாமல் அவர் தவிக்கலானார். நாம் இங்கே கூறும் திரிசக்கரங்கள், நடேசையரும், மூத்தாளும் இளையாளுமாகிய அவர் இரு மனைவிமார் கமலாவும் ஸாரதாவுமே. அவர் கதை பின்வருவது.

அவர் பி. ஏ. பரீக்ஷையின் இரண்டாம் வகுப்பில் வாசித்துக்கொண் டிருக்கும் பொழுது, அவருக்குக் கலியாணம் நடந்தது. இரண்டு வருஷங்களுக்குப் பின் அவர் மனைவி கமலம் பெரியவளாகி வீட்டுக்கு வந்தாள். அவர் தாயார் அந்தக் கலியாணத்துக்கு இணங்கவே யில்லை. அவள், தன் தம்பி மகளைத் தன் ஒரே மகனுக்குக் கலியாணம் செய்வித்துத், தன் மருமகளையே நாட்டுப் பெண்ணாக்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண் டிருந்தாள். ஆனால், அவள் புருஷர் அதற் கிசைய வில்லை. அவர் பிடிவாதமும் பண வாசையும் கொண்டவர். தம் மகன் நடேசனைத் தாம் இதுவரைக்கும் படிக்க வைத்த செலவெல்லாம், அவன் வேட்டகத்தாரே தமக்குத் திரும்பக் கொடுக்கக் கடமைப் பட்டவர்க ளென்று அவர், நினைத் திருந்தார். சம்சாரி யான தம் மைத்துனனால் அதிகமாய் வரதக்ஷிணை கொடுக்க முடியாது, அப்படி அவனிடமிருந்து பணம் வாங்கவும் தன் மனைவி ஒட்டா ளென்பது அவருக்கு நன்றாய்த் தெரியும். ஆகவே, தம்மனைவியின் அபிப்பிராயத்தைக் கவனிக் காமலே, அவர், கமலத்தின் தகப்பனார் கொடுத்த பணத்தை வாங்கிக்கொண்டு, நிச்சயதாம்பூலம் செய்து விட்டார். கூழுக்கு மாங்காய் தோற்குமா? அவர் மனைவிக்கு அவருக் குள்ள முரண்டு அவ்வளவும்

உண்டு. அவள், தனக்கு உடம்பு சரி யில்லை யென்று சொல்லி, கிராமத்திலேயே இருந்து விட்டாள். கலியாணத்துக்குப் போக வில்லை. தன் ஒரே பிள்ளைக்குக் கலியாண மாவதைத் தான் பார்ப்பதற் கில்லாமல், அந்த மூதேவியால் தான் ஆயிற் றென்றும், மாமியார் ஒருத்தி யிருந்தும், விவாக காலத்தில் அவள் ஆசிர்வாதத்தைப் பெறாது வாழ்க்கைப்பட்ட பெண் ஒருநாளும் நன்றாய் வாழ மாட்டா ளென்றும், அவள், அப்புறம் தன் நாட்டுப் பெண் கமலத்தைத் திட்டுவதுண்டு. கலியாணமான அடுத்த வருஷம், கமலத்தின் மாமனார் இறந்து போய் விட்டார். நடேசையர் இன்னும் பட்டணத்தில் தான் வாசித்துக் கொண்டிருந்தார். கமலா சாந்தியாகிப் புக்ககம் வந்த வுடன், கிராமத்து வீட்டில், தன் மாமியாருடன் போயிருந்தாள். கலியாணமாகு முன்னமே, வீட்டிற் கலகத்துக்குக் காரணமாயிருந்து, வீட்டுக்குள் காலெடுத்து வைக்கும் முன்னமே தன் மாமியார் கைம்மை யடையும்படி நேர்ந்த துரதிர்ஷ்டவச முள்ள அந்த ஊரான் வீட்டுப் பெண்ணைப் பார்க்கும் பொழு தெல்லாம், நடேசையர் தாயாருக்கு எரிச்சலாயிருந்தது. அவள், தன் நாட்டுப் பெண்ணை வேண்டுமென்றே சிறுமைப் படுத்தி, எப்பொழுதும் வைது கொண்டிருந்தாள். நடேசையர் பட்டணத்தி லிருந்த படியால், அவருக்கு இதெல்லாம் தெரியாது. தெரிந்தாலும் அவர் அதிகம் தடுத்திருக்க முடியாது. அவர் எப்பொழுதும் தன் தாயா ரிடத்தில் அதிகப் பிரிய முள்ளவர். தன் தாயாருக்கும் தகப்பனருக்கும் அடிக்கடி மனஸ்தாபங்கள் நேர்ந்து, அவர்கள் சந்தோஷமாய் வாழ வில்லை யென்பதும் அவருக்குத் தெரியும். ஆகவே, தன் தகப்பனர் இப்பொழுது இறந்து போய் விட்ட படியால், தன் அமங்கலித் தாயாரின் இஷ்டப்படி யெல்லாம் தானவது நடந்து, அன்பும் ஆதரவுமாய் அவளை நடத்த நினைத்திருந்தார். அவருக்கு பி. எல். பரீக்ஷை தேறினவுடன், தன் தாயாரையும் மனைவியையும் இரண்டு தங்கைகளையும், அவர் பட்டணத்துக்குக் கூட்டிக் கொண்டு போனர். தன் மனைவியுடன் அவர் அதிகம் பழகின தில்லை. அவளால் தான் கலியாணத்தின் போது தாயார் வராத குறை நேர்ந்தது என்றும், தன் தாயாருக்குத் திருப்தியாய் நடந்து கொள்ள அவளுக்குத் தெரியவில்லை யென்றும், அவருக்குச் சிறிது வருத்த முண்டு. இப்பொழுதோ, அவர் வீட்டி லிருக்கும் பொழுதெல்லாம், அவர் தாயார், அவரிடம் வந்து கமலாவைப் பற்றி ஏதாவது தூஷித்துக்

கொண்டே யிருந்தாள். கமலா திருடித் தின்பதாயும், பொய் சொல்லுவதாயும், தன்னை அவமதிப்பதாயும், இன்னும் பலவிதமாயும், அவள் எப்பொழுதும் குறை கூறிக்கொண்டே யிருந்தாள். "சமயம் வாய்த்தால் அந்தக் கொலைபாதகி என்னை விஷமிட்டுக் கொன்று விடுவள். சந்தேக மில்லை" என்று, பிரலாபிக்கலானாள். நடேசையருக்கு இன்ன செய்வ தென்று தெரிய வில்லை. அவர் தன் மனைவியைச் சரிவர நடந்து கொள்ளும்படி, அடிக்கடி கண்டித்தார். சில சமயங்களில் தண்டிக்கவும் செய்தார். திகைத்துக் கண்ணீர் மல்கி நிற்கும் இச்சிறு பெண்ணை, தன் தாயார் கூறும் "தாடகைக் கொப்பான ராக்ஷஸி" என்று, சந்தேகித்தார். ஒன்றை நூறாகக் கூறும் அவர் தாயார் குணமும், முதலிலேயே அவளுக்கு நாட்டுப் பெண்ணைப் பிடிக்காமற் போனதின் காரணமும், அவருக்குத் தெரிந்திருந்ததால், முழுதுமே தன்மனைவி மேற் சொல்லக் குற்றமில்லை என்று, அவருக்குச் சில சமயங்களில் தோன்றிற்று. ஆனால், சீக்கிரமாக அவரும் தன் மனைவி மேல் முற்றிலும் வெறுப்படைந்தார். சருவதா ஒரு பெண்ணைப் பற்றித் தூஷணைகளையே கேட்டுக் கொண் டிருந்தால், அவள் மேல் யாருக்குத் தான் வெறுப்பு வராது? தனக்கு இந்தப் பெண்டாட்டியும் வேண்டாம், இந்தச் சச்சரவும் வேண்டா மென்றும், அவளை அவள் பிறந்தகத்துக்கு அனுப்பி விடுவதாகவும், அவர் சொன்னார்; ஆனால், அவர் தாயார் அதற்கும் இணங்கவில்லை. ஒரு தரம் அவருக்கு ஏழெட்டு நாள் சுரமடித்தது. அவர் கடைசித் தங்கைக்கு வைசூரி போட்டி, ஒரு கண் போய் விட்டது. ஒரு பாங்கு தவறிப்போய், அவருக்குச் சிறிது பொருள் நஷ்டம் நேர்ந்தது. இம்மூன்று சங்கடங்களுக்கும், இன்னும் வீட்டில் நேரும் எவ்வித அசந் தர்ப்பங்களுக்கும், கமலாவின் துரதிர்ஷ்டமே காரண மென்று, அவள் மாமியார் சாதித்தாள். கமலாவுக்கு வயது பதினைந்து நிறையு முன், அவள் மலடி யென்றும், தான் சாகு முன் தனக்கு ஒரு பேரன் பிறந்து தான் பார்க்கப் போவ தில்லை யென்றும் குறை கூறலானாள். நாளுக்கு நாள் இதைப்பற்றிய ஏச்சுக்களும் அதிகரித்தன. கமலாவுக்கு மலட்டுச் சனை வைத்திருக்கிற தென்று சொல்லி, அவள் மாமியார், அவளுக்குத் தினம் பாதி வயிறுக்குத் தான் சோறு போடுவாள். கமலா, கேவலம் அசடு என்றும், அவளுக்குக் குழந்தை பிறந்தாற் கூட, அது முடமாய் அல்லது நொண்டியாய்த் தான் பிறக்கு மென்றும், அவளுக்கே

சீக்கிரம் பைத்தியம் பிடித்துவிடக் கூடுமென்றும், அவள் மாமியார் கூறினள். அந்தப் பெண்ணும், இந்தத் திட்டும் வசையும் பொறுக்க முடியாமல், சித்தப் பிரமை பிடித்த வள் போல்தான் இருந்தாள். நடேசையருக்கு மறுபடியும் சுரம் வந்தது. அவர் தாயார், அவர் ஜாதகத்தை அநேக ஜோஸியர்களிடம் காட்டி, கமலா ஜாதக தோஷம் தான் அவருக்கு நோவு வந்திருப்பதன் காரணமென்றும், அந்தத் தோஷத்தை உடனே நிவர்த்தித்துக் கொள்ளாவிட்டால் அவர் பிழைக்க மாட்டாரென்றும், ஒருவேளை அவருக்கு உடம்பு இந்தத் தடவை சொஸ்தமானாலும் கூட, அடுத்த வருஷம் அவருக்கு ஒரு கத்து இருப்பதாயும், அதற்குள் அவர் வேறொரு பெண்ணை விவாகம்செய்து கொள்ள வேண்டுமென்றும், வற்புறுத்திக் கூறினள். கமலாவுக்கு இந்தப் பழிச்சொல் சகிக்க முடியவில்லை. அவள் தற்கொலை செய்து கொள்வதாகக்கூட அடிக்கடி யோசித்து, ஏங்கி யேங்கி அழுது கொண்டிருந்தாள். நடேசையருக்கு ஜோஸியத்திலேயே நம்பிக்கை கிடையாது. ஆனல், இடைவிடாது அவர் தாயார் செய்யும் உபதேசங்களும், வயது காலத்தில் அவள் வயிறெரிந்து வருந்தாது, அவள் அஞ்ஞானத்தைத் திருப்தி செய்யும் பொருட்டேனும் அவர் இணங்க வேண்டுமென்ற அவள் மன்றாட்டமும், அவர் மனத்தைக் கலைத்துவிட்டன. சுபாவத்திலேயே அவருக்கு மனவுறுதி கிடையாது. இந்த ஜென்மத்தில் அவரை யன்றி வேறு கதியின்றிக் கணவனைக் கொண்டாடும் அவர் மனைவி வருந்துவளே யென்பதைப்பற்றி, அவர் அதிகம் நினைக்கவில்லை. அவர், தன் தாயார் பேச்சுக்கிணங்கி, உடம்பு சொஸ்தமானவுடன், வேறொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டார். அவருக்கு அப்பொழுது வயது இருபத்தாறு தான். தக்க வரும்படி வந்துகொண்டிருந்தது. ரூபா 800-வரதக்ஷிணையுடன், ஸாரதா என்னும் ஒரு பெண்ணை, அவர் தாயார் அவருக்கு எளிதில் திட்டஞ்செய்தாள். இதையறிந்தவுடன், கமலா பட்ட துக்கத்துக்கு அளவு சங்கையில்லை; அவள், தன் கணவனையும் மாமியாரையும், இது வேண்டாமென்றும், தான் அவர்கள் என்ன சொன்னலும் அதன்படி கேட்பதாகவும் காலில் விழுந்து கெஞ்சினள்; தன் ஏழைப் பிறந்தகத்திலிருந்து இந்த ரூபா 800—ம் வேண்டுமானலும் எப்படியாவது கொண்டுவந்து கொடுப்பதாகக் கூடச் சொல்லி, வேண்டிக் கொண்டாள்; ஆனல், ஒன்றும் பலிக்கவில்லை. கலியாணமான அடுத்த வருஷம், ஸாரதா

தன் புருஷன் வீட்டுக்கு வந்தாள்; அவள் ஜாதகம் அதிர்ஷ்ட முள்ளதே! அவள் வந்த ஒரு வாரத்திற்குள், நடேசையரின் தாயார் காலராக்கண்டு இறந்துபோய் விட்டாள். ஆகவே, இந்தத் திரிசக்கர வண்டிக்கு முன் சக்கரமாக நின்றுகொண்டு, கல்லும், முள்ளும் சிதறிக் கிடக்கும் கரடு முரடான வாழ்க்கைப் பாதையின் மேல், அதற்கொரு அபாயம் நேரிடாமலும் அது தடுக்கி விழாமலும் பாது காத்து நடத்த வேண்டிய பொறுப்பு, நடேசையரைச் சேர்ந்ததாயிற்று.

வாழ்க்கையிலே எவ்வளவோ விபரீதங்க ளிருக்கின்றன. அன்றியும், நம் தேச ஆசாரங்கள் பல, ஒன்றுக் கொன்று தகவலில்லாமலே நடைபெறுகின்றன. ஹிந்துக்களாகிய நாம், வேத வேதாந்த சித்தாந்தங் களிலும், தத்துவ நிருபணங் களிலும், வேறெத் தேசத்தாரும் நமக்கு நிகரில்லை என்று சொல்லும்படி, சிரேஷ்டமுற்று விளங்குகிறோம். ஆயினும், வேறெத்தேசத்திலும், நாம் செய்வதுபோல முப்பத்து மூன்று கோடி தேவதைகளைக் கொண்டாடி, அவர்களை ஆவாகித்து அர்ச்சனை ஆராதனை புரியும் வழக்கம் கிடையாது. நம் தேசத்து மாதர்கள் கற்பரசி களென்றும், நமக்குள் விவாகம் ஓர் ஆசிரம தர்மமாகிப் புனிதமாய் நடைபெறுகிற தென்றும், நாம் கர்வ மடைகிறோம். இரண்டு தரம் மூன்று தரம் விவாகம் செய்துகொள்பவர்களைப் பரிகசித்து, எத்தனையோ கேலிக் கதைகளும் பழமொழிகளும் நமக்குள் வழங்குகின்றன. ஆயினும், புருஷர்கள் துன் மார்க்கமாய் ஒழுகுவதையும், இரண்டு மூன்று மனைவிகளை மணந்துகொள்வதையும், நம் தேசத்திற் போல வேறெந்த நாகரிகமடைந்த தேசத்திலும் ஒப்பிக் கண்டிக்காம லிருக்கவில்லை. தவிரவும், பழைய நாளைய ஆசார அனுஷ்டானங்களை அனுசரித்து வருபவரை விட, இந்நாளில் மேனாட்டுக் கல்வி பெற்று லௌகீகர்களா யிருப்பவர்களே, அதிகமாய் இவ்விதத் தவறிழைக்கிறார்க ளென்பதும் உண்மையே.

தன் அருமைத் தாயார் இறந்துபோய் விட்டதைப் பற்றி நடேசையர் அதிகக் கிலேச மடைந்தார். அவர் கஷ்ட காலம் அதோடு நிற்க வில்லை. கமலா தன்மேல் அளவற்ற காதல் வைத்து தன்னைக் கொண்டாடுவதும், அவள் சற்குணங்களும் பொறுமையும், அவருக்கு இப்பொழுது தான் தெரிந்தன. அவள் தன் தாயாரின் கீழே பட்ட கொடுமைகளையும், தானும் அவற்றிற்கு இணங்கி யிருந்ததையும் பற்றி, அவர் மிகவும் வருத்த முற்று, அவளை அன்பாய்

நடத்தி வந்தார். நாளுக்கு நாள் அவர்கள் காதல் பெருகி, கமலாவுக்கும் நல்ல காலம் பிறந்தாற் போல் இருந்தது. ஆனால், இது ஸாரதாவுக்குச் சற்றேனும் பொறுக்க முடியவில்லை. அவள் பதினைந்து வயதுச் சிறுபெண்; வெகு அழகுள்ளவள். இங்கிலீஷும் தமிழும் நன்றாய்த் தெரிந்தவள். வெகு கர்வமும் பரிகாச குணமு முள்ளவள். தான் இளையாளாக வாழ்க்கைப்பட்டவ ளாதலால், தன் கணவன் தன்னையே வைத்துக் கொண்டாட வேண்டும்; கமலா வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு சாப்பிட்டுக் கொண்டு வேண்டுமானால் இருக்கலாமே யொழிய, தன் கணவனுடன் வாழக்கூடா தென்பது, அவள் அபிப்பிராயம். ஆகவே, அவள், கமலாவைப்பற்றி அதிகப் பொறாமை கொண்டாள். இங்கிலீஷ் தெரிந்திருந்ததனால், அவள் தன் கணவனிடம் ஷேக்ஸ்பியர் எழுதியதி லிருந்து: "தங்கள் மனைவிகளுக்கும் தங்களைப்போலவே உணர்ச்சி யிருக்கிற தென்று புருஷர்கள் தெரிந்து கொள்ளட்டும். புருஷர்களைப் போலவே நாமும் பார்க்கிறோம். வாசனை யறிகிறோம். இனிப்பு இது, புளிப்பு இது என ருசியறிந்து கொள்கிறோம். நம்மைவிட்டு அவர்கள் பிறரை விரும்பிச் செல்வதில், அவர்கள் செய்வ தென்ன? அது விளையாட்டா? இருக்கலாம். அது ஆசை பற்றி உண்டாகிறதா? அப்படியும் இருக்கலாம். மனத்தளர்ச்சியினா லிப்படித் தவறி விடுகிறார்களோ? அதுவும் கூடத்தான். ஆனால், நமக்கும் புருஷர்களுக் கிருப்பதுபோலவே, ஆசை, விளையாட்டு விருப்பம், மனத்தளர்ச்சி, எல்லாம் இல்லையா? பின்னை, அவர்கள் நம்மைச் சரியாய் வைத்துக் கொள்ளட்டும்" என்று கூறி, வழக்காடுவாள்.

நடேசையர், பாவம், தன் இரு மனைவிமார் பேரிலும் அன்புவைத் திருந்தார்; ஓர் அந்தப்புரம் நிறைய மனைவிமார் இருந்தாலும், அவர்க ளனைவ ரிடத்திலும் ஓர வஞ்சக மின்றிப் பக்ஷமாய் நடந்துகொள்ளப்பட்டவர் அவர். ஆகவே, தன் மனைவிமா ரிருவருடனுஞ் சுகித்து வாழ்வது, அவருக்குப் பிரியமே. ஆனால், அவர்க ளிருவருக்கும் அது சரிப்படவில்லை. முக்கியமாய், ஸாரதா, கமலாவை அவர் வீட்டில் வைத்துக் கொள்வதா யிருந்தால், தன்னைக் கலியாணஞ் செய்து கொண் டிருக்கப் படாதென்றும், அவர் கமலாவை முற்றிலும் விலக்கி வைத்துவிட வேண்டுமென்றும், தான் அவளுடன் அதே வீட்டில் இருக்க முடியா தென்றும் சொல்லி முறண்டினாள்.

"உங்களுக்கு பி. ஏ. பி. எல். என்று பரீக்ஷைப் பட்டங்கள் இரண்டு இருக்கிறதே, பத்தினிமாரும் இருவர் வேண்டுமென்று என்னைக் கலியாணஞ் செய்துகொண்டீர்களா?" என்று, அவள் அவரைப் பரிகசித்தாள். அவரா லானமட்டும், அவர், அவளிடம் வழக்காடியும், கோபித்துக்கொண்டும், கெஞ்சியும், அவளைச் சமாதானப்படுத்த முயன்றார். ஆனால் அவளோ, அவர் பேச்சுக்குச் சிறிதும் செவிகொடாமல், எப்படியும் கமலாவுட னிருந்து தானும் வாழமாட்டாளென்றும், அவருக்குச் செய்யும் பணிவிடைகளையெல்லாம் செய்துவிட்டுத், தான் இன்னொரு புருஷனையும் வைத்துக் கொண்டிருந்தால், அது அவருக்குச் சம்மதமாயிருக்குமா வென்றும்; அப்பொழுது, அவரும், ஒதெல்லோவைப்போலக் கோபமும் தாபமும் பொங்க:—"என்னைச் சோதிக்கத் திருவுளங்கொண்ட தெய்வம், எனக்குத் துக்கங்களையே உண்டுபண்ணி யிருப்பினும்; நானுவித கஷ்டங்களையும் அவமானங்களையும் நான் ஒன்றின்மேலொன்றாக அனுபவிக்கச் செய்யினும்; கொடிய வறுமை நோயால் என்னைப் பீடித்து வருத்தினும்; நானும், என் சகல எண்ணங்களும், ஆசைகளும் வீணாக மடிய, என்னை அடிமைச் சிறையி லிட்டிருப்பினும்; ஏதோ ஒரு சிறிதளவு பொறுமையாவது, என்மனத்தில் எங்காயினும் தங்கி (உதவி) யிருக்கும். மேலும், யாவரும், எப்பொழுதும், கைசுட்டிக் காட்டி யிகழத் தக்க அவமானத்துக்கு என்னை இலக்காக்கியி ருப்பினும், அந்தோ! அதையும் பொறுத்துக் கொள்ளக்கூடும். ஆனால், என் இருதயத்தையே நான் சேமித்து வைத்திருக்கும் களஞ்சியம், என் ஆருயிரின மெய்ந்நிலை, என், வாழ்க்கைப் பெருக்குக்கு இன்றியமையாத சுனை, அங்கிருந்தே என்னைத் துரத்த லாயிற்றே! பொறுமையே! இனி, உன் தோற்றத்தை மாற்றிவிடு; ஆம், நரகத்தைப் போல் பயங்கரமாகிவிடு. நான் காதலிக்கும் பொருளில் பிறர் உபயோகிக்கும்படி ஒரு சிறு பாகமேனும் விட்டிருப்பதினும், பாழறையில் நீராவியை யுண்டுவாழும் ஒரு தேரையாகவேனும் இருப்பதே மேல்" என்று, வருந்தி யிருக்க மாட்டாரா என்றும் சொல்லி வாதாடினாள். நடேசையர் இதற்கு என்ன பதிற் சொல்வார்? தலையைக் குனிந்து கொண்டு, கமலா வாவது தன் சொற்படி நடப்பாளோ வென்று, அவளைப் பார்த்துத் திரும்பினார். கமலாவுக்கு இவ்வளவு பொறுமை கிடையாது. தன்னை மட்டும் சிறுமைப் படுத்தா மிருந்தால், தானும் ஸாவித்ரீதாவும் ஒத்துக் கணவனுடன்

வாழலா மென்றே அவள் எண்ணி யிருந்தாள். ஆனால், ஸாரதாவுக்கோ, கமலாவைத் தொலைத்து விடவேண்டுமென்பதே கருத்து. ஆகவே, நடேசையர் வீட்டில், மயிர்பிடி மண்டை பிடிச் சண்டையே. அவர் வீடு வந்த உடனே, அவர்களிருவர் கோபமும் அவர்மேல் தாவி விடும். நாளுக்கு நாள் இந்தச் சச்சரவு அதிகமாகிவர, நடேசையரால் பொறுக்கவே முடிய வில்லை. தன் மனைவிமார் எக்கேடேனும் கெடட்டும் என்று, அவர்க ளிருவரையும் விட்டுவிட்டுத், தான் மட்டும் காசிக்குப் போய் விடலா மென்றுகூடச் சில சமயங்களில் யோசித்தார். அவர் சிநேகிதர்கள், அவர் படும் துயரத்துக் கிரங்காமல், அவரைப் பரிகசித்தார்கள். அவர் குடும்ப வாழ்வு வரவர ஊர்க் கேலியாய் விட்டது. கமலாவாவது ஸாரதாவாவது மட்டும் தன்னுடனிருந்தாலும், அல்லது, அவர்கள் மட்டும் தங்களுக்குள் கலகம் செய்து கொள்ளாம லிருந்தாலும், தானும் தன் மனைவிமாரும் எவ்வளவோ சந்தோஷமாய் வாழலா மென்று அவருக்குத் தோன்றிற்று. ஆனால், இப்போதைய மாதிரி எப்பொழுதும் தன் மனைவிமாருக்குள் மத்தியஸ்தம் செய்துகொண்டு, மத்தளம் போல இருபுறமும் இடிபெற்றுக் கொண்டிருப்பதினும், வேறு வழி யில்லா விட்டால், எப்படியாவது தற்கொலை செய்து கொண்டு விடுகிறதே நலமென்று, அவர் நினைக் கலானார். மனைவிமார் இருவரையும் தனக்குப் பயந்து கீழ்ப் படிந்து நடக்கும்படி அடக்கியாளும் திறமை தனக் கில்லையே யென்று, மனம் நொந்து கொண்டார். அவ்வளவு திறமையும் மனோதைரியமு முள்ளவராயிருந்தால், தாயார் பேச்சைக் கேட்டு, அநியாயமாய், மூத்தாளிருக்க இளையாள் ஒருத்தியைக் கலியாணம் பண்ணிக் கொண்டிருப்பாரா? தன் மனைவிமாரை அதட்டிக் கண்டிக்கவாவது, தன் னிஷ்டப்படி அவர்களை நடக்கச் செய்யவாவது தனக்குத் திறமையுமில்லை, தானாக வேண்டு மென்றே இழுத்துப்போட்டுக் கொண்ட இவ்விதிக்கு, அவர்களை நொந்து கொள்வது சரியுமில்லை என்று, அவர் உணர்ந்தார். கடைசியில் ஒரு நண்பர் கூறிய புத்திமதிப்படி, ஒரு மனைவியைத் தன்னிடத்திலும், மற்றொருத்தியை அவள் பிறந்தகத்திலுமாக, மாறி மாறி வைத்துக் கொள்கிறதென்று தீர்மானித்தார். ஆனால், அவர்களிருவரும் பிறந்தகத்துக்குப் போகவும் சம்மதிக்க வில்லை. அவர், தான் சீக்கிரம் அழைத்துக் கொண்டு வந்து விடுவதாயும், அவள் மேல் தனக்குள்ள காதல் ஒருநாளும் மாறாதென்றும் எத்த

ளையோ சபதம் செய்துகொடுத்துக், கெஞ்சிக் கேட்டுக் கொண்ட பின், கமலா மூன்று மாதம்வரை பிறந்தகத்துக்குப் போயிருப்பதாக ஒப்புக்கொண்டாள். அவள் போயுங்கூட, ஸாரதா சந்தோஷமாய் வாழவில்லை. திரும்பி வரவொட்டாமல் அவளைத் தன் கணவன் என்றென்றைக்கும் தள்ளி வைத்துவிட வேண்டுமென்று சூழ்ச்சி செய்து கொண்டிருந்தாள். கமலா அவரிடம் பிரியமில்லாதவளென்றும், தனக்கு எப்பொழுதோ யாரோ சொன்னதாகவும், ஜாடையும் சைக்கினையுமாகப் பேசினாள். ஒரு நாள் அவள்—"என் தமையனிடமிருந்து நேற்றுக் கடிதம் வந்தது. அவன் உங்கள் வேட்டகத்துக் கிராமத்துக்கு ஒரு சிநேகிதனைப் பார்க்கப் போயிருந்தானாம். அங்கே ஒருவரும், உங்கள் கண்ணாட்டி உங்களை மறுபடியும் என்று காணப்போகிறோமென்று தபசு பண்ணிக்கொண்டிருக்கிறாளென்று, சொல்லவில்லையாம். அந்த ஊர்ப் பள்ளிக்கூட உபாத்தியாயர் ஒருவர், லக்ஷணமாய், பாலியமாயிருக்கிறாராம். அவரிடம் இங்கிலீஷ் கற்றுக்கொள்வதில், அவள் போது சந்தோஷமாய்த் தான் போகிறதாம்" என்றுசொன்னாள். உடனே நடேசையருக்கு அசூயை பொங்கிவிட்டது. "எங்கே, அந்தக் கடிதம் எங்கே?" என்று அவர் குதித்தார். அவள் தாயார் கற்பித்து வைத்திருந்தபடியே, ஸாரதா, "உங்களுக்கு அவமானமில்லையா அது, நான் அந்தக் கடிதத்தை வைத்துக் கொண்டிருப்பேனா? நான் அதை உடனே கிழித்தெறிந்து விட்டேன்," என்றாள். நடேசையர், தன் வேட்டகத்துக்குப் போய் உண்மையறிந்து கொள்வதாக உடனே புறப்பட்டார். ஸாரதா இவ்வாறு முடியுமென்று எதிர்பார்க்கவில்லை; ஆனால் அவள் என்ன தடுத்தும் அவர் கேட்கவில்லை. அங்கே போனவுடன், தன் சக்களத்தியின் கல்வியைப் பற்றிப் பொறாமைகொண்டு, தானும் அவ்வாறே கணவன் மெச்சக் கல்வித் தேர்ச்சியடைய வேண்டுமென்ற ஆசையினால், கமலா இங்கிலீஷ் வாசிக்கத் தொடங்கியிருப்பதாயும், அவள் தகப்பனார் வேண்டுகோளின் மேல், அவ்வூர் உபாத்தியாயர், எளிதில் படிக்கத்தக்க ஓர் இங்கிலீஷ் முதற்பாடப் புத்தகம் வாங்கிக் கொடுத்திருப்பதாயும், உண்மை துலங்கிற்று. காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் அன்றோ? கமலா இங்கிலீஷ் வாசிப்பதும், அவ்வூரில் ஓர் பள்ளிக்கூட உபாத்தியாயர் இருப்பதும் நிஜம் தானென்று ஏற்படவே, அவரது மற்ற சந்தேகங்களெல்லாம் வேரூன்றிப் பல மடைந்

தன. கமலாவைத் தண்டிக்கும்படி தன் மனத்துக்குள் பல முரட்டு யோசனைகள் செய்து கொண்டு, அவளையும் அழைத்துக் கொண்டு, அவர் பட்டணத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

தான் இல்லாத சமயத்தில் தன் சக்களத்தி தன்மேல் இவ்வித அபாண்டமான பழி சுமத்தி விட்டதை நினைக்கக் கமலாவுக்குக் கோபம் பொங்கிற்று. சுவபாவமாய்ச் சாந்த குணத்தினளே யாயினும், இவ்விதச் சந்தேகத்துக் குட்படவிட்டு, அவள், நியாயத்தைப் பற்றிக் கவனிக்கவே யில்லை. எப்படி யாவது, அநியாயமாய்த் தன்னைப் பழித்த பாதகியை அதே விதமாகத் தானும் பழித்து, அவளையும் கணவன் கோபத்துக்கும் சந்தேகத்துக்கும் உள்ளாக்கி விடவேண்டுமென்று முயன்றாள். வெகு சீக்கிரம், நடேசையர், தன் மனைவிமார் இருவருமே கற்பழிந்தவர்களென எண்ணிச் சந்தேக முறலானார். அவர் பட்ட துயரம் விவரித்துக் கூற முடியாது. இந்தச் சந்தேகமும் கோபமும் வருத்தமு மாகச் சேர்ந்து, அவர் சீக்கிரம் பித்துப் பிடித்தவர் போலாகிவிட்டார். அவர் தன் மனைவிமார் இருவரையும் உண்மை யாகவே காதலித் திருந்தார். அவர் சுவபாவமோ எளிதிற் சந்தேக முறக் கூடியது. அவரால் அவமானம் பொறுக்க முடியாது. அடிக்கடி, கச்சேரி வேலையை விட்டு விட்டுத், தன் சந்தேகத்தை எங்கே நேரே ருசுவாகக் கண்டுவிட நேருமோ வென்று பயந்துகொண்டே வீட்டுக்கு ஓடி வருவார். இந்தச் சந்தேகமும் மன வருத்தமும் தாங்க முடியாமல், அவர் உடம்பு நாளுக்கு நாள் மெலிந்து வந்தது. கடைசியில், ஒரு நாளிரவு, அவருக்கு இதை நினைத்து நினைத்துப் பைத்தியம் பிடித்து விடும் போல் இருந்த சமயத்தில், ஓர் உருண்டை அபினைச் சாப்பிட்டு, அவர் தற்கொலை செய்து கொண்டு விட்டார். விதவைகள் நிறைந்த இந்தப் புண்ணிய பூமியிலே, போதாக் குறையா யிருந்த இடத்தை நிரப்பவோ, இன்னும் இரண்டு பெண்கள் விம்மி நொந்து வைதவ்யம் அடைந்தனர்! தொட்டில் தொட்டுச் சுடுகாடு மட்டும் அஞ்ஞானத்திலேயே ஆழ்ந்து, போலியான ஜாதி மதாசாரங்களென்னும் தளைகளால் கட்டுண்டு, தவிக்கும் நாம், இவ்விதக் கட்டுப்பாடுகளை ஒழித்து வீட்டு, நம் பூர்வீக ஆண்மையையும் சக்தியையும் திரும்பப் பெற்று விளங்குமாறு, எல்லாம் வல்லீர்த் ஜகதீசன் அருள் புரிவானாக!



## 5. ஏட்டுச் சுரைக்காய்

—(.)—

ல புஸ்தகங்களைப் பாட முறை யாக வாசித்ததோடு அவன் தன் படிப்பை நிறுத்தவில்லை. ஆங்கில பாஷையிலுள்ள அரிய நூல்களை யெல்லாம் ஆவலுடன் வாசித்து, அவற்றிற் கூறும் நவீனக் கொள்கை களையே கைப்பற்றி ஏற்றுக் கொண்டான். ஜெ. எஸ். மில்புலவர் தான் அவன் குரு. அந்நூலாசிரியர், "தற் சுதந்தரத்" தைப் பற்றியும் "ஸ்திரீகள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமா?" என்பதைப் பற்றியும், எழுதின வியாசங்களி லிருந்து, அவன் பக்கம் பக்கமாக மனப் பாடமாய்ச் சொல்லுவான். பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்றும், அவர்களை மரியாதையாக நடத்த வேண்டுமென்றும் யாராவது காரணங்கள் கூறிப் பிரசங்கிப்பதைக் கேட்டால், அவனுக்குக் கோபம் வந்து விடும். ஸ்திரீ புருஷர்களைக் கடவுள் சமமாகவே சிருஷ்டித் திருப்பதால், ஸ்திரீகளை எவ்விதமாக நடத்துவது, அவர்களுக்கு எது கற்பிப்பது என்று திட்ட மிட்டு அதிகாரம் செய்யப், புருஷனுக்கு எச் சுதந்தரமும் கிடையாதென் பதும்; ஆதி காலந் தொட்டுப் புருஷர்கள் முரட்டுத்தனமாக அடாத அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டு வருவது தான், இப்பொழுது எல்லாத் தேசங்களிலும், ஸ்திரீ ஜாதி தாழ்ந்த நிலைமை யடைந்திருப்பதின் காரண மென்பதும், அவன் சித்தாந்தம். அவன் சொற்படி மட்டும் நடப்பதா யிருந்தால், அவன், முதலில், வாழ்க்கைத் துணை யென சிருஷ்டிக்கப் பட்ட மாதர்களுக்குத், தாங்கள் பூர்வீகம் தொட்டுச் செய்துவந் துள்ள அநியாயத்தையும் கொடுமையையும் அவர்கள் மன்னித் தருளும்படிப், புருஷர்களைப் பிரார்த்திக்கச் செய்து; பிறகு, ஸ்திரீகள் தங்கள் இஷ்டப்படி நடக்க சர்வ சுதந்திரங்களு முடையவர் களாக விட்டு விடும்படி உத்தர விடுவான்; அவ்வாறு "விடுவது" என்ற சொல் கூட ஸ்திரீகளுக்கு கௌரவக் குறை வென்று அவன் சொல்வதுண்டு. இவ்விதக் கொள்கைகளையும் எண்ணங்களையுமே நாளுக்கு நாள் விருத்தி செய்துகொண்டு, சுந்தரம், சென்னையில் வைத்தியப் பரீக்ஷைக்கு வாசித்துக் கொண்டிருந்தான். பரீக்ஷை தேறிப் பட்டம் பெற்றவுடன், அவன்,

ஸர்க்கார் வேலையிலமராது, சொந்தமாகவே மருந்துகள் வாங்கி வைத்துக்கொண்டு வைத்தியம்செய்யத் தீர்மானித்தான். சுந்தரம்வெகு புத்திசாலி. குணசீலன். கலாசாலையில் அவனுடன் வாசித்த மாதர்களிடம் அவன் அதி விநயம் பாராட்டி, அவர்களுக்கு வணங்காத் தோஷம் மரியாதை காட்டுவதைப் பற்றி, மற்ற இளைஞர்க ளெல்லாம் அவனை அடிக்கடி பரிகசிப்பதுண்டு. சுந்தரத்துக்குத் தாய் தகப்பன்மார் இருந்தார்கள். அவர்களுக்கு இங்கிலீஷ் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்த ஆசாரங்களை அனுஷ்டித்துக் கொண்டு, நல்லவர்க ளென்றே பேரெடுத் திருந்தார்கள். சுந்தரம் தன் சொந்த ஊராகிய திண்டூருக்கு வேலைக்கு வரவே, அவர்க ளெல்லோரும் அவனுடன் ஒரே வீட்டில் தான் இருந்தார்கள். அதாவது, அந்த வீடு அவர்களுக்குப் பூர்வீக மாகவே உள்ளது. அதில் சுந்தரமும் வந்து சேர்ந்தான். அந்த வீடு சின்னதா யிருந்ததால், மருந்துகள் வைக்கவும், நோயாளிகள் வந்து போகவும், இடம் இருக்கும்படி, சுந்தரம் பக்கத்து வீட்டையும் வாடகைக்கு வாங்கிக் கொண்டான். முதலில், அவன் தாய் தந்தையர் அதிகச் செலவென்று, அதற்கு இணங்க வில்லை. ஆனால் சுந்தரம் வாங்கின அலமோராக்கள் தங்கள் வீட்டு நிலை தாண்டி உள்ளே வர முடியாமற் போகவே, அவர்கள் கடைசியில் அடுத்த வீட்டையும் அமர்த்திக் கொள்ளச் சம்மதித்தார்கள். சுந்தரத்தின் தமயனும் அவர் மனைவியும், மூன்று குழந்தைகளும்; சுந்தரத்தின் தமக்கைகளி லொருத்தி புருஷனை இழந்தவளும், அவளுடைய நாலு குழந்தைகளும், எல்லாரும் ஒன்றாய்த் தான் குடி யிருந்தார்கள். சுந்தரம் திண்டூரில் வைத்தியஞ் செய்ய அமர்ந்த ஒரு மாதத்திற்குள், அவனுக்கு ருதுசாந்தி நடந்து, அவன் மனைவியும் வீட்டுக்கு வந்தாள். அவன் சிறு பையனாகவும், அவள் நாலைந்து வயதுக் குழந்தையாகவு மிருக்கும் பொழுதே, அவர்களுக்குக் கலியாண மாய்விட்டது. அவளுக்கு இப்பொழுது பன்னிரண்டு வயது; புருஷனுடன் குடித்தனஞ் செய்வதினும், சோகி, மரப் பாச்சிகள் வைத்துக் கொண்டு விளையாடுவ தற்கே ஏற்ற சிறுமியா யிருந்தாள். அவள் சம்சாரி; வீட்டுப் பெண்; அவள் தகப்பனார் ஏழையே; ஆயினும், அவளுக்குக் குறை வற்ற சீதனமான கல்விப் பயிற்சி இருந்தது. பி. எ. பாஸ் பண்ணி விட்டு, மேற் படிப்புக்கு விதியற்று, தாலூகா கச்சேரியில் மாதம் ரூபா 20-க்கு குமாஸ்தா வேலையி லிருந்த அவள் தமயன், அவள் புத்திக் கூர்

மையைக் கண்டு, அவளுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்திருந்தான். சுந்தரமும், தன் தாய் தகப்பன் மாரைக் கேளாமலும் அவர்கள் அறியாமலுமே, அவள் கல்வி விஷயமாகத் தன் மைத்துனனைத் தூண்டி யிருந்தான். ஆகவே, பங்கஜம், சிறு பெண்ணே யாயினும், அரிய கல்வித் தேர்ச்சி பெற்று, அதைப் பற்றித் தன் மனத்துள் மிகவும் மகிழ்ச்சி யடைந் திருந்தாள்.

ஒரு நாள், பங்கஜம், தன் தமையனுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்த பொழுது, அவள் மாமியார் பார்வதி யம்மாள், "சமைய லுள் கதவைத் திறந்து போட்டு விட்டு அங்கே என்ன பண்ணுகிறாய், பங்கஜம்?" என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தாள். "அவள் ஏதோ எழுதிக் கொண் டிருக்கிறாள். நமக் கெல்லாம் தெரியாமல் இங்கிலீஷில் எழுதுகிறாள்" என்று, பங்கஜத்தின் நாத்தி ருக்மிணி யம்மாள் பதிற் சொன்னாள். பார்வதி யம்மாள் தன் குழந்தைகளிடம் வெகு பிரிய முள்ளவள். அவர்களில் சுந்தரந்தான் அவள் செல்வப் பிள்ளை; ஆகவே, பங்கஜத்துக்கு இங்கிலீஷ் தெரியு மென்று தெரிந்த நாள் முதல், அவள் மனத்தில் பொறாமை குடி கொண்டது. பிற ரறியாத அந்தரங்க பாஷையில் அவனுடன் பேச வல்ல இச் சிறுமியின் மோக வலையிற் சிக்கி, சுந்தரம், வர வரத் தன்னை உபேக்ஷிக்கக் கூடு மென்று, அவள் பயப் பட்டாள். அன்பானது பய முற்றுப் பொறாமையாக மாறும் பொழுது, அதுவே தீராப் பகையாக முடியக் கூடும். பார்வதி யம்மாள், தன் இளைய நாட்டுப் பெண்ணைக் கண்டால் கரிக்கத் தலைப் பட்டாள். இப்பொழுது அவளுக்குத் தன் மூத்த நாட்டுப் பெண்ணிடம் பக்ஷம் அதிகரித்தது. அவளும் ருக்மிணி யம்மாளும், பார்வதி யம்மாளுடன் ஒத்துப் பாடி, பாவம்! பங்கஜத்தைப் பல விதமாக ஏசினார்கள். "வாரம் தப்பினாலும் கடிதம் தப்பாது, நம்மைப் பற்றிக் கோள் சொல்வதன்றி, அவள் அண்ணாவுக்கு என்ன எழுதப் போகிறாள்? அடக்க முள்ள ஒரு பெண் ஒரு புருஷனுக்கு எழுதக் கூடியது என்ன விருக்கும்?" என்று, பார்வதி யம்மாள் சொன்னாள். "அவள் அடக்க முள்ளவ ளென்று உனக்கு யார் சொன்னது, அம்மா? அவளுக்கு இங்கிலீஷ் தெரியும்; அவள் மெத்தப் படித்தவள்; அதுவே அவளுக்குப் பெருமையா யிருக்கிறது. பட்டப் பகலிலே, சுந்தரம் மட்டும் அங்கே தனியா யிருக்கும் பொழுது, இவள்

இன்று காலையில் அடுத்த வீட்டுக்குப் போய் விட்டு வந்தாளே! அடக்கமுள்ள பெண்ணு யிருந்தால் போவாளா? அடக்கமும் இங்கிலீஷ் படிப்பும், செக்கடியும் தம்பூருந் தான்" என்று, ருக்மிணி யம்மாள் சொன்னுள். பங்கஜத்தின் கண்களில் நீர் தளும்பிற்று; அவள் கையி லிருந்து நழுவிப் பென்ஸில் கீழே விழுந்து விட்டது. "நான் எடுத்துக்கொண்டு வந்திருந்த ஒரு புஸ்தகத்தைத் திருப்பி வைப்பதற் காக அங்கே போனேன். என் அக்காள் கமலம், புக்ககத்தில், உடம்பு சௌக்கிய மில்லாமல் கிடக்கிறுள். அதைப் பற்றிக் கேட்பதற் காகத் தான் என் அண்ணுவுக்கு எழுதுகிறேன்" என்று, பங்கஜம் பதிற் சொன்னுள்.

"அவள் துணிச்சலைப் பார்! கொஞ்சமாவது மாமியார் என்கிற மரியாதை யில்லாமல், முகத்துக்கு நேரே பதிற் சொல்வதைப் பார்! நல்ல வேலையாய் எனக்கு யாரும் இங்கிலீஷ் சொல்லித் தரவில்லை" என்று, அவள் ஓரகத்தி கூறினுள். "அதற்கு ஒரு கார்டு போதாதா? அதைத் தமிழில் எழுதலாமே? இனிமேல் நீ ஊருக்கு எழுதுவதா யிருந்தால், முதலில் என்னைக் கேட்டுக் கொண்டு, நீ என்ன எழுதப் போகிறு யென்று சொல்லி விட்டு, அப்புறம் எழுத வேண்டும். உனக்கு வரும் கடிதங்களையும் எங்களுக்கு வாசித்துக் காட்ட வேண்டும்." என்றுள் பார்வதி யம்மாள். இவ் வுத்திரவைக் கேட்டதும், பங்கஜத்துக்கு அடங்காக் கோபம் பொங்கிற்று. அவளால் என்ன செய்ய முடியும்? அவள் தமயனுக்கு எழுதுவது தான், அவள் விசனத்துக்கு ஆறுதலையா யிருந்தது; அவள் படும் கஷ்ட நிஷ்டூரங்களின் மத்தியில், அவன் அன்பாகவும் ஆறுதலாகவும் எழுதிவிடும் வார்த்தைகளே, சற்று ஊக்கத்தை அளித்தன. அவள் கணவனே, சாப்பாட்டு வேளை தவிர மற்றப் பொழுதெல்லாம் அடுத்த வீட்டிலேயே இருந்தான். பகலில், பெரியவர்க ளிருக்கும் பொழுது, அவனுடன் பேச முடியாது; அவனிருக்கிற வீட்டுப் பக்கம் போகிறது மில்லை. அன்று காலை ஒரு புஸ்தகத்தைக் கொண்டு போய் வைப்பதற் காக அங்கே போனது தான், இவ்வளவு அனர்த்தத்தில் கொண்டு வந்து விட்டு விட்டது; அவள் மாமியும் நாத்தியும், அன்று முழுதும் அதைப் பற்றி அவளைத் திட்டினது மன்றி, அதுவரையும், வேறு வீட்டு வேலையில்லாத பொழுது, ஒரு புஸ்தகத்தை எடுத்துப் படித்துச், சிறிது நேரம் தன்னை மறந்து,

சந்தோஷமாய்ப் பொழுது போக்கி வந்ததையும், கூடா தென்று தடுத்து விட்டார்கள். வீட்டு வேலை செய்வதும், பெரும் பாடாகவே இருந்தது. அவள் சோம்பலாக வா வது, வேலை செய்ய இஷ்ட மில்லாம லாவது இருக்க வில்லை. முடிந்த மட்டும், அவள் மெல்லிய சரீர திடனுக்கு மிஞ்சியு மே வேலை செய்த பொழுதுங் கூட, அவர்கள், அவள் செய்வ தொன்றையுமே ஏற்றுக் கொள்ளாது, எப்பொழு தும் குற்றங் கண்டு பிடித்துக் கொண்டே இருந்தார்கள். சுந்தரம் வீட்டி லிருக்கும் பொழுது தான், அவளை அவர் கள் அதிகமாகத் தூஷிப்பார்கள். "ருக்மிணி! துவை யலை நீயே அரைத்துக் கொண்டுவா. அவள் பாதியைக் கீழே சிந்தி, மிச்சத்தில் இத்தனை உப்பை வாரிப் போட்டு வைப்பாள்," "நீதேய்த் தலம்பு, அந்தப் பாத்திரத்தை, அம்மாளு! பங்கஜம் அதைக் கீழே போட்டு உடைத்து விடுவாள்." இவ்வித மொழிகளே, அவன் மனைவியைப் பற்றி, சுந்தரத்தின் காதில் எப்பொழுதும் விழுந்து கொண்டிருந்தன. அவன் வாடகை வீட்டில் தான் படுத்துக் கொள்வது வழக்கம்: பங்கஜத்தை அங்கே வாரத்துக்கு ஒரு முறைக்கு மேல் அனுப்புவ தில்லை. அப்பொழுதும், ஒரு வேளை திடீ ரென்று யாராவது வந்து, வைத்தியம் பார்க்கச் சுந்தரத்தை அழைத்துக்கொண்டு போய் விட் டால், அவள் இரவில் அங்கே தனியே இருக்க நேரிடு மாத லால், போய்ச் சிறிது நேரத்துக்குள் திரும்பி வரும்படி, அவள் மாமி உத்தரவிட் டிருந்தாள்.

ஸ்திரீகளின் சுதந்தரங்களைப் பற்றிச் சிறந்த உபந் நியாசங்கள் செய்து, மில் ஆசிரியரின் கொள்கை களையே வேத வாக்கிய மெனக் கொண்டாடி யவனுக்குத், தன் வீட்டில், தன் குழந்தை மனைவி பல விதமாய்க் கஷ்டப் படுவது, தெரியாமலே போய்விட வில்லை. அவள் பிறந்த கத்தில், அவளுக்குச் சற்று நேரமாவது நல்ல காற்றில் உலாவ இட மிருந்தது; அவள், தாராளமாய்ப் பக்கத்து வீடுகளுக்குப் போய் வருவ துண்டு. தவிரவும், அவள் தமயன், தாசில்தாருடன் வெளியூர்களுக்குப் போக நேரிடும் பொழு தெல்லாம், அவளைத்தான் தனக்குச் சமைத்துப் போட அழைத்துக் கொண்டு போவான். இச் சமயங்களில் தான் அநேகமாய் அவள் அவனிடம் கல்வி கற்றுக் கொண்டாள். அவள் புக்ககத்துக்கு வந்த பின்போ, மறுபடியும் வீட்டு வாசற்படி தாண்டி யறியாள். நல்ல காற்றும் வெளிச்சமும் சற்றேனும்

மேலே பட இடமில்லாமல், இருண்டு விசால மற்றுப் புறுக் கூடு போல் கட்டி யிருக்கும் அச்சிறு வீட்டில், அவள் நாள் முழுதும் அடைபட்டுக் கிடந்தாள். அவள் மாமியும், நாத்தியும், ஓரகத்தியும், வம்பு பேசுவதில் வெகு பிரிய முள்ளவர்கள். அவர்கள் அடிக்கடி அயல் வீடுகளுக் காவது, கடை வீதிக் காவது, கோவிலுக் காவது போய் விடுவார்கள். ஆனால், பங்கஜமோ, குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு, எப்பொழுதும் வீட்டுக்குள்ளே யிருக்க வேண்டியதா யிருந்தது. கிணறும் இரண்டாங் கட்டிலே யே இருந்து விட்ட படியால், தண்ணீர் கொண்டு வரக்கூட, அவள் வெளியே போகும்படி நேர வில்லை. பெரியவர்கள் அடிக்கடி வெளியே போய் விடுவதால், அவளுக்கு வாசிக்க அதிக சாவகாச மிருந்தது. ஆனால், நாம் முற் கூறிய நாள் காலை முதல், அவள் மாமி, அவள் கொணர்ந் திருந்த இரண்டொரு புஸ்தகங்களையும் வாங்கிப் பெட்டியில் பூட்டி வைத்து விட்டு, சுந்தரத்தின் புஸ்தகங்க ளொன்றையுமே தொடக் கூடா தென்றும் கட்டளை யிட்டு விட்டாள்.

சுந்தரத்துக்கு இதெல்லாம் தெரியாம லிருக்க வில்லை. அவனோ, டாக்டர். அந்தக் குகை போன்ற வீட்டுக்குள்ளேயே அடை பட்டுக் கிடப்பதால், தன் மனைவி நாளுக்கு நாள் வாடி மெலிந்து போவதை, அவன் கவனித்து வந்தான். வைத்தியனாக, தன் பிதி ரார்ச்சித வீடு மனிதர் வசிக்கத் தக்க இடமன்று என்றே, சுந்தரம், தடை யின்றி இகழ்ந் திருப்பான். ஆனால், அவ்வாறு தன் தாய் தகப்பன் மாரிடம் கூறி, அவர்கள் அப் பிரியத்தை யடைய, அவன் துணிய வில்லை. தன் தகப்பனா ரிடத்தில் அவன் குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசுவதே கிடையாது. அவன், தன் வரும்படியில் ஒரு பைசா கூட பாக்கி யில்லாமல், தன் தகப்பனார் கையில் கொடுத்து விடுவான். தன் மனைவி அந்த வீட்டில் நாளுக்கு நாள் அசௌக்கியப் பட்டு வருவது, அவனுக்குத் தெரியும். ஒரு நாளிரவு, சிறிது விளையாட்டாயும், விசனமாயும், "கஞ்சத்தின் அளவில் தோன்றும் கைதிகள் காணும் வானம்" கூட, அந்த வீட்டிலிருந்து பார்க்க முடியவில்லை யென்று அவள் சொன்ன பொழுது, அவன் மனம் திடுக் கிட்டது. உண்மை யாகவே, அவள் தன் வீட்டில் ஒரு சிறைச்சாலைக் கைதியினும் கேடாகத் தான் வாழ்வதாக அவனுக்குத் தோன்றிற்று. அன்றிரவு முழுவதும் அவ னுக்குத் தூக்கம் வரவில்லை. அவள் திரும்பிப் போன

பின் அவன் சஞ்சல மடைந்து, பல யோசனைகள் செய்து, விழித்துக் கொண்டு படுத்திருந்தான். ஸ்திரீகளின் சுதந் திரங்களைப் பற்றி அவன் எண்ணி யிருந்த எண்ணங்க ளென்ன, இப்பொழுது அவன் வீட்டிலேயே அவன் மனைவியே வாழும் வாழ் வென்ன? அவன் கண்ணாரக் கண்டதும், பங்கஜத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டது மாக, அவள் படும் நிர்ப்பந்தத்தை யெல்லாம் அவன் ஒரு வாறு அறிந் திருந்தான். அவனுக்கு இப்பொழுது மாதம் ரூபா 300 வந்து கொண்டிருந்தது. ஒரு தக்க பங்களா வுக்குக் குடிப் போய், வீட்டு ஸ்திரீகள் சற்று வெளியே போய்க் காற்று வாங்கி வருவதற்காக ஒரு வண்டி வைத் துக் கொண்டு, ஒரு சமயற்காரனையும் அமர்த்திக் கொண்டு குடித்தனம் செய்ய, அவனுக்கு இப்பொழுது கட்டிவரும். ஆனால், அவ்வித ஏற்பாடுகள் செய்வதற்கு வேண்டிய திட சித்தம் அவனுக் கில்லை.

"உங்காத்தில் நீ காரியமே கற்றுக் கொள்ள வில்லையா? நீ செய்வ தொன்றுமே சரியா யில்லை யென்று, ஏன் எங்கம்மா உன்னை அடிக்கடி கோபித்துக் கொள்கிறாள் ?" என்று, ஒரு நாளிரவு அவன் தன் மனைவியைக் கேட்டான்.

திடீரென்று, முன்பின் யோசியாமலே, "துருவாஸ முனி என் எப்பொழுதும் சாபமிட்டுக் கொண்டே யிருந் தார் ?" என்று, அவள் பதிற் சொன்னாள். அவன் முகம் சுண்டிப் போயிற்று; அவளிடம் அன்றிரவு அவன் சரியாய்ப் பேசவே யில்லை. தான் பரபரப்பாய்ப் பேசி விட்டதைப் பற்றி, அவள் அதிக வருத்த மடைந்தாள். தன் விஷயத்தில் எது சாக்கென்று எளிதில் கோபமுறும் தன் மாமியார் குணத்தை, அவள் அடிக்கடி தன் மனத் துள் துருவாஸ முனியின் குணத்துக்கு ஒப்பிட்டிருந்தாள்; அதைப்பற்றி நினைக்காமலே, அவ் வெண்ணத்தை வெளி யிட்டு விட்டாள். சுந்தரம், தன் தாயிடம் அதிக பக்ஷம் வைத் திருந்தான். அவள் துருவாஸ முனியைப் போல் நடந்து கொள்கிறாள் என்று நினைக்கவே, அவனுக்குப் பொறுக்க வில்லை. அவளை அவ்வாறு ஒப்பிடுவது ஒரு வகையில் நியாயந் தான் என்று, அவன் மனத்தில் பட்டு, அவனுக்கு அதிக வருத்தத்தை விளைவித்தது. அவனுக்கு இன்னும் தன் மனைவி யிடம் காதல் பிறக்க வில்லை. காதல் இன்ன தென்றே அவன் இன்னும் அறிய வில்லை. ஆனால், அவனுக்கு அவளிடம் பிடித்த மிருந்தது. அவள் அடைந் திருந்த கல்வித் தேர்ச்சியைப் பற்றி அவனுக்குச் சந்தோஷ

மாயும் பெருமையாயு மிருந்தது. அவள் குழந்தையே யாயினும், அவனை மிகவும் காதலித்துக் கொண்டாடுவது, அவனுக்குத் தெரிந் திருந்தது: அவள் கள்ளங் கபடறி யாது நிஷ்களங்கமா யிருந்ததால், அவள் அன்பு எளிதில் வெளிக் காட்டிற்று. அதுவே, அவள் மாமி, இவ்வளவு சீக்கிரம் அவள் மேற் பொறாமை கொண்டதற்குக் காரண மாம். "காதல் காதலைக் கவரும்." சுந்தரம் தன் மனைவி யை அடிக்கடி பாராவிடினும், அவனுக்கு அவளிடம் பிரியம் அதிகரித்தது. அவள் நிலைமையையும் சௌக் கியத்தையும் பற்றி, அவன் அதிக சஞ்சல மடைந்தான்.

"நான் ஏதாவது—ஏதாவது உனக்கு சௌகரியமாய் ஏற்பாடு செய்யும் வரை, நீ உன் தகப்பனார் வீட்டில் போயிருக்கிறாயா?" என்று, அவன் அவளைக் கேட்டான்.

"என் அம்மா அப்பாவையும், அண்ணாவையும் குழந்தைகளையும், பார்க்க வேண்டு மென்று ஆசையா யிருக்கிறது. ஆனால்—"

"ஆனால் என்ன?" என்று, சுந்தரம், அவள் கவிழ்ந்து கொண்டிருந்த முகத்தைத் தன் கையால் நிமிர்த்தி, "ஆனால் என்ன? சொல்லு, பங்கஜம்," என்று கேட்டான்.

அவள் கண்களில் காதல் விளங்கிற்று. புன்னகை புரிந்து, "இராமர் எங்கேயோ அதுவே சீதைக்கு அயோத்தி" என்று, அவள் மெதுவாய்க் கூறினாள். சுந்தரம் இளகிய நெஞ்சுள்ளவன். அவன் கண்ணில் நீர் ததும்பிற்று. அவன் உடனே அவளைத் தன் மார் புறத் தழுவிக் கொண்டு, இனியேனும், தான் அவளைத் தக்கபடி கொண்டாடுவதாகத் தன் மனத்துள் தீர்மானித்துக் கொண் டான். அன்றிரவும் அவன் தூங்கவே யில்லை. தன் தாய் தந்தையரிடமாவது தன் தமக்கை தமய னிடமாவது, தன் மனைவியை அவர்கள் சரியாய் நடத்த வில்லை யென்று சொல்லப் புகு முன்னே, அவர்கள், மேல் விழுந்து கலக மிட்டுச் சண்டைக்கு வருவார்க ளென்பது, அவனுக்குத் தெரியும். தானும் தன் மனைவியும் தனிக் குடித்தனம் செய்வதாகச் சொன்னாலும், அவ்விதச் சண்டையே நேரி டும். அவன் தகப்பனார் இவ்வித விஷயங்களை யெல்லாம் அதி கம் கவனிப்ப தில்லை; ஆனால், அவர் மகா லோபி. அதிகச் செலவுக்கு ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார். அவன் தாயாரிடம் தான் அவனுக்குப் பிரியம் அதிகம்; அவளைக் கோப மூட்ட அவன் பயந்தான். அவளே இந் நிர்ப்பந்

தங்களுக் கெல்லாம் மூலாதாரம். அவளிடம் என்ன சொல்வது? அவள் சொல்லை மீறி, அவள் மனம் நோக, எதைச் செய்வது? சுந்தரம் தன் வேலை விஷயத்தில் வெகு கண்டிப் புள்ளவன்; அந்தஸ்து, ஐசுவரியங்களைக் கவனியாமல், தன்னிடம் வரும் வியாதிஸ்தர்கள் முற்றி லும் தன் சொற்படி அடங்கி நடக்கச் செய்வதுதான், அவன் இவ்வளவு சீக்கிரம் பேரெடுத்ததற்குக் காரணம். ஆனால், தன் தாயி னிடத்திலோ, அவள் தன் மனைவியை அநியாயமாயும் கொடுமையாயும் நடத்துவதாக அவன் எண்ணின பொழுதுங் கூட, அவனால் ஒன்றும் செய்ய முடிய வில்லை. தன் தாயாருக்குச் செலுத்த வேண்டிய கடமை போலவே, சுகமோ, துக்கமோ, தான் காதலித் துப் பரிபாலிப்பதாக ஏற்றுக் கொண்ட தன் குழந்தை மனைவிக்கும் தான் செலுத்த வேண்டிய கடமை யொன் றுண்டென்பது, அவனுக்குத் தெரியும். "ஒருவன் தன் மாதாவையும் பிதாவையும் விட்டு விட்டுத், தன் மனைவி யைக் கைப் பிடிப்பானாக" என்னும், விவிலிய வேத வாக்கி யத்தின் நீதியையும் அவன் ஒப்புக் கொண்டான். இவ் விஷயத்தில், தன் தாயார் முற்றிலும் தவறாகவே நடப்பதாக வும், அவனுக்குத் தோன்றிற்று. அவன், தன் மனைவியைச் சுகப்படுத்தப் பல வழிகளை ஆலோசித்து, அநேக தீர் மானங்கள் செய்தான். மறுநாள் காலை, தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, அவள் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் சமயம் பார்த்து, சுந்தரம், தன் தாயா ரிடம் சென்று, ஏதோ வார்த்தைப் போக்கில், தன் சிநேகி தர்களி லொருவன் சமயற்காரனை நீக்கி விட்டதாகவும்; அவன் கெட்டிக்கார னையும், நம்பிக்கை யுள்ளவ னையும், அதிகச் சம்பளம் கேளாமலு மிருப்பதால், தான் அவனை அமர்த்தலாமா வென்று யோசிப்பதாகவும், சொன்னான்.

"ஓ! ஓ! உன் பெண்டாட்டி இங்கிலீஷ் கற்றுக் கொண்டு வந்திருக்கிறாள். இவள் துரைசானி யம்மாளைப் போல, எழுதிக் கொண்டாவது வாசித்துக் கொண்டாவது உட்கார்ந் திருக்க வேண்டு மென்று, நீ சமயற்காரனைத் தேடுகிறாயோ?" என்று பார்வதி யம்மாள் கோபமாய்க் கேட்டாள்,

சுந்தரம் சற்று வெட்க மடைந்து, "அதில்லை, அம்மா! இப்பொழுது நமக்கு, அந்தச் செலவு பாதக மில்லை. வீட் டில் வேலை யதிகமா யிருக்கிறதே யென்று சொன்னேன்" என்றான்.

பார்வதி யம்மாளுக்குக் கோபம் அதிகரித்தது. "நானாவது, உன் அக்காளாவது, மதினியாவது செய்து கொண்டிருந்த பொழுது வீட்டு வேலை குறைவா யிருந்தது; இப்பொழுது உன் பெண்டாட்டி வரவிட்டு, திடீரென்று ஆத்துக் காரியம் அதிகமாய் விட்டது; இல்லையா? ரொம்பக் காரியம் அவளுக்குத் தெரியும், செய்வளே! இனிமேல் நாங்கள் அவளை ஒரு கோவிலில் வைத்துக் கும்பிடுகிறோம். அவள் ஒரு வேலையும் செய்ய வேண்டாம். எங்களுக்கு சுவாமி கொடுத்த கையும் காலும் இன்றைக்குத் திடமா யிருக்கிறது; பண்டத்தைச் சிந்தி, பாத்திரங்களை யெல்லாம் ஒன்றொன்றாய் உடைத்து, வீட்டைப் பாழ் செய்யும் சமையற்கார னொருவனும் இங்கே வேண்டாம். நீ இல்லாத சமயத்தில் உன் துரைசானி யம்மாளை நான் வேலையிட்டு விடுவேனோ வென்று உனக்குப் பயமா யிருந்தால், அவளையும் உன் அறையில் அழைத்துக் கொண்டு போய் வைத்துக்கொள். உங்கள் இரண்டு பேருக்கும் தினம் மூன்று வேளை நாங்கள் சாதம் கொண்டு வந்து போடுகிறோம்."

சுந்தரம் பதிற் பேசாது அவ்விடம் நீங்கிச் சென்றான். அன்று முதல், தன் மனைவியைப் பார்க்கும் பொழுதெல்லாம், அவள் படும் கஷ்டமும், தான் அவளுக்கு உதவி புரிய முடியாம லிருப்பதும் அவன் நினைவுக்கு வரவே, அவனுக்கு அவளைப் பார்க்கவே பிடிக்கவில்லை. தன் வேண்டுகோளி னாலேயே அவள் கல்வி கற்பிக்கப் பட்டு, அதற்காகவே தன் தாயார் அவள் மேல் பொறாமை கொண்டிருந்ததால், அவள் படும் சிறுமைக்குத் தானே காரண மென்று எண்ணி, மனம் நொந்து கொண்டான். ஏக குடும்ப சம்பிரதாயத்தைத் தன் மனதாரச் சபித்தான்; அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவாவது, அதனால் வரும் கஷ்டத்தைச் சற்றுத் திருத்திக் கொண்டு போகவாவது, தன்னால் முடியவில்லையே யென்று விசனமடைந்தான். அவன் மனைவி நாளுக்கு நாள் அசௌக்கிய மடைந்து மெலிந்தாள்; இப்பொழுது அவனிடம் அவள் மாதத்திற்கு ஒரு முறை கூட அனுப்பப் படுவதில்லை. சில சமயங்களில், அவன் சாப்பிடப் போயிருந்து, வேறொருவரும் அவர்களைக் கவனியாத பொழுது, கண்ணீர் ததும்பும் கண்களில் காதல் விளங்க, அவனை அவள் உற்று நோக்குவாள். அப் பார்வை, அவன் மனத்தை ஊடுருவிப் பாய்ந்து, அவனை இரவும் பகலும் அல்லற்

படுத்தும். அப்பொழுது, சில நாட்களுக்கு, அவன் உற்சாக மற்று, விசனம் தேக்கிய முகத்துடன் உலாவி வருவான். அவன் தாயோ, அவன் மனைவியே அவன் விசனத்துக்குக் காரணம் என்று கூறி, அவளை முன்னிலும் அதிகமாக ஏசித் திட்டுவாள். இரவில் படுத்திருக்கையில், சில சமயங்களில், அவன் தன் கடமைகளை நினைந்து, தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, எப்படியும் தன் மனைவியை இந்த நிர்ப்பந்தத்தி லிருந்து விடுவிப்பதாகப் பல வழிகளை ஆலோசித்துத் தீர்மானம் செய்து கொள் வான். அந்தோ! பொழுது விடிந்து, பகல் வெளிச்சத் தையும் அவன் தாயார் முகத்தையும் பார்த்தவுடன், அவன் கொள்கைக ளெல்லாம் ஏட்டுச் சுரைக்காய் ஆகி விடும்.

துக்ககரமான இக் கதையை இனி நீட்டிக்க மனமொப்ப வில்லை. வாசிப்போர் தம்மிஷ்டப் படியே இதை முடித் துக் கொள்ளுமாறு, இங்கே விட்டு விடுகிறோம். நம்மில் அநேகருக்கு வெகுவாய்க் கையுதவக் கூடிய ஒரு சிறு பிரார்த்தனையுடன், இக் கதையை நிறுத்தி விடுவோம்:—

"அறிவு இன்று அருள்" என வேண்டிலேம், அறிவு உண்டுனது அருளால்;
இறைவா! எமது அறிவின்படி இயற்றும் மனவலியே குறையிற் பெருங் குறையாம்; மனக் கொள்கைப் படி எதுவும்
நிறை வெய்திட நிகழ்த்தும் வலி மிகுரும் செயல் அருளே!"

## 6. "என்னை மன்னித்து மறந்து விடு."




கோயம்புத்தூரை விட்டுப் புறப்படு முன் மாப்பிள்ளையைப் பார்த்தாயா? அவன் உடம்பு சௌக்கியமா யிருக் கிறதா?" என்று நாராயணையர், வண்டியை விட்டுத் தன் அத்தான் சங்கரையர் இறங்கினதும், கவலையுடன் கேட்டார்.

"ஆம், நான் அவன் வீட்டுக்குப் போனேன்; அவனுக்கு உடம்பு தாழ்வில்லை யென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். எவனோ ஒரு ஜோசியன், 'சாந்திஹோமம் பண்ணினால் எல்லாம் சௌஸ்தமாய் விடும்', என்று சொன்னானாம். அதற்குப் பிரயத்தனம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சம்மந்திப் பிராமணர், சீதையின் ஜாதகத்தில் செவ்வாய் தோஷ மிருக்கிற தென்றும், அதனால் தான் பிள்ளைக்குக் கலியாணமானது முதல் உடம்பைத் துன்பப் படுத்துகிற தென்றும் சொல்லுகிறார்."

"கலியாணத்திற்கு முன் ஜாதகத்தை ஆயிரம் ஜோசியர்களிடம் அவர் காட்டினாரே? அவருக்கே கொஞ்சம் ஜோசியம் தெரியுமே? அப்பொழுது செவ்வாய் தோஷம் இருக்கிற தென்று யாராவது சொன்னார்களா?" என்று, நாராயணையர் கோபத்துடன் கேட்டார்.

"அது எப்படி இருந்தாலும் சரி; அவர்கள் சொல்வதற்கு ஏற்றால் போல், அவனுக்கு உடம்பை இப்படித் துன்பப் படுத்துவானேன்? ராமையா இங்கே வந்திருந்த போது, தன் தாய் தகப்பன் மாரை வெறுக்க வேண்டுமென்று அவன் மாமியார் அவனுக்கு மருந்திட்டு விட்டாளென்றும்; அந்த மருத்தீட்டினால் தான் அவனுக்கு விடாத தலை நோவு வந்திருக்கிற தென்றும், அவன் தாயார் சொல்லுகிறாள்" என்றார் சங்கரையர்.

"அவள் லங்கையில் பிறந்தவள். அவள் கீழே நம்ம சீதைபோய் வாழவேண்டு மென்பதை நினைக்கவே எனக்கு நடுங்குகிறது. தன்னைப் போலவே எல்லாரும் ராக்ஷசிகளா யிருப்பார்களென்று நினைக்கிறாள். ஹோமமும், புகையும், இந்தத் தலைவலியைப் போக்காது. பாவம் சீதை! அவள் மாமனார் கார்டு வந்தது முதல், தன் ஆமுடையான் உடம்பு சௌக்கியமாக வேண்டு மென்று, அரசமரத்தைச் சுற்றாத வண்ணம் சுற்றுகிறாள். வியாதிக்குத் தக்க மருந்து அவர்கள் கொடுப்பதாகத் தோன்ற வில்லை. இவள் பிரார்த்தனையினாலாவது, அவனுக்கு சீக்கிரம் சௌஸ்த மாகட்டும்" என்று நாராயணையர் சொன்னார்.

சீதை, நாராயணையருடைய தம்பி மகள்; அவர் அவளைத் தன் சொந்தப் பெண் போலவே பாவித்து வந்தார். அவர் தம்பி இறந்துபோனபின், அவர் தான் அவளை வளர்த்து வந்தார். இப்பொழுது அவள் கணவன் உடம்பு சௌக்கிய மில்லாததைப் பற்றி அவருக்கு வெகு கவலையா

யிருந்தது. சீதை கணவன் ராமையா, பி. ஏ.க்கு வாசித்துக் கொண்டிருந்தான்: அவள் தமையன் துரைசாமியும் அவனும் சிநேகிதர்கள். ராமையாவின் தேகம் எப்பொழுதுமே துர்ப்பலம். பரீக்ஷைக்குக் கடினமாய் வாசித்ததனுல், பரீக்ஷை முடிந்த உடன் பட்டணத்து சுரம் பலமாய் வந்து விட்டது. ஆனுல் டாக்டர் சொன்ன மருந்தைக் கொடுத்து, கவலையுடன் துரைசாமி பார்த்து வந்ததில், சுரம் சொஸ்தமாய் விட்டது. அதுமுதல் அவர்கள் முன்னைவிட அந்நியோந்நிய சிநேகிதர்களாய்விட்டார்கள். ராமையா தன் தகப்பனுர் இருக்கும் ஊருக்குப் போகுமுன், ஒரு வாரம் தன் மைத்துனனுடன் மாசியூருக்கு வந்திருந்தான். துரதிர்ஷடத்தால், அவன் மாசி யூரிலிருக்கும் பொழுது, அவனுக்கு இடை விடாத தலைநோவும் சுரமும் வந்து விட்டது. ராமையாவுக்கு உடம்பு சரியாயில்லை என்று கேட்டவுடன், அவன் தாய் தந்தையர் கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்டு வந்தார்கள். அவன் தாயார் வந்தவுடன் ஒரு பாட்டம் அடித்துக் குதித்து அழுதுவிட்டு, டாக்டர் என்ன சொல்லியுங் கேட்காமல், உடனே அவனைக் கோயம்புத்தூருக்குக் கூட்டிக் கொண்டு போகவேண்டு மென்று முறண்டினுள். தன் மாமியாரின் பேச்சு நடவடிக்கைகளைக் கண்டு, சீதை நடுநடுங்கி விட்டாள். அவள் அகம்பாவத்தையும், கர்வத்தையும், வாயாடித் தனத்தையுங் கண்டு, அந்த ஊரில் எல்லோரும் பிரமித்து, பயந்து விட்டார்கள். அவள் புருஷனிடத்திற் சொல்லியாவது, ராமையாவுக்கு உடம்பு இப்படி இருக்கும் பொழுது கூட்டிக்கொண்டு போகக் கூடாதென்று தடுக்க முயன்ருர்கள். ஆனுல், அவரோ, தன் மனைவி வார்த்தையைத் தட்டவே மாட்டார். அவள்முன் கருடனைக் கண்ட பாம்பு போல் நடுங்குவார். ஆகவே, ராமையாவைக் கோயம்புத்தூருக்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டார்கள். அங்கே போன வுடன் மந்திரவாதிகளும் ஜோஸியர்களும் வைத்தியம் பண்ண ஆரம்பித்தார்கள். இந்த ஹோமம் தான் அவர்கள் கடைசியாய்ச் செய்த சிகிச்சை. நாராயணையர், மாப்பிள்ளையின் தேக சௌக்கியத்தைப் பற்றி விசாரித்து இரண்டு கடிதம் எழுதினுர். துரைசாமி தினமும் எழுதினுன். ஆனுல் யஜமானி உத்தரவு கொடாததால, சம்மந்தி பதிலே எழுத வில்லை. கடைசியில் சீதையை தினமும் அரசப் பிரதக்ஷணம் பண்ணச் சொல்லி ஒரு கார்டு வந்தது. துசைாமி, சில சமயங்களில், இப்படிப் பட்ட மாமியாரின் கீழ் சீதை

இருக்கவேண்டுமே, என்ன செய்யப்போகிறேனோவென்று, தன் தாயினிடம் சொல்லுவான். ஆனால், அவளோ, "மாப்பிள்ளைக்கு உடம்பு எப்படியாவது சரியாகட்டும்; அப்புறம் சீதை தன் மாமியாரின் கீழ் கொஞ்சம் கஷ்டப் பட்டாலும் பாதகமில்லை. நம்ம சீதை அப்பாவி; அவள் குணத்தைக் கண்டால் அவள் மாமியார் கூட அவளிடம் தயவாயிருப்பாள். அவனுக்கு உடம்பு சொஸ்தமாகட்டும், ஸ்வாமி! வேங்கடாசலபதி! என் குழந்தைபேரிலிரங்கி, இந்த ஒரு வரத்தை மட்டும் தாரும். நாங்கள் எல்லோரும் திருப்பதிக்கு வந்து அங்கப் பிரதக்ஷணம் பண்ணுகிறோம்" என்று பதில் சொல்லி விடுவாள்.

துரைசாமிக்கு, வேண்டுதல்கள் விரதங்கள் இவற்றில் நம்பிக்கை யில்லை. ஆனால் எவ்வளவு அக்ஞானத்தோடு கூடினதானாலும், மனப் பூர்வமான பிரார்த்தனைகளுக்குக் கடவுள் இரங்குவாரென்று நம்பினான்.

சீதை மிகவும் அழகான பெண்; கபட மற்றவள்; இனிமையான குண முள்ளவள்; அவள் மேல் எல்லாரும் பக்ஷம் பாராட்டி வந்தார்கள். அவள் மிகவும் புத்திசாலியான பெண்; அவளுக்குத் துணி மணிகள் மேலும் புஷ்பங்கள் மேலும் அதிகப் பிரியம். அவள் தமையன், ஆகாயத்தில் பல வர்ணங் கொண்டு விளங்கும் மேகங் களையும், தோப்புத் துரவுகளையும், மலைகளையும், இயற்கையில் அமைந்துள்ள மற்றும் அநேக அழகான காட்சிகளையும் கண்டு களிக்க, அவளுக்குக் கற்பித் திருந்தான். அவளுக்குப் புஸ்தகப்படிப்புத் தெரியாது; ஆனால் சுவபாவத்தில் சங்கீத ஞானமும், இனிமையான குரலும் அமைந்திருந்தமையால், அந்த ஊரில் அவள் தான் யாவரினும் நன்றாய்ப் பாடுவாள். அவள் மிகவும் குதூகலமும் வாஞ்சையும் உள்ளவள். குழந்தைத் தனமாய்த் தன் கணவனை நேசித்து வந்தாள். அவனுக்கு இப்பொழுது நேர்ந்துள்ள வியாதியின் அபாயத்தை அவள் அறியாவிட்டாலும், சீக்கிரம் அவனுக்கு உடம்பு சொஸ்த மாகும்படி சுவாமியை வேண்டிக் கொண்டு வந்தாள். அவள் மாமனார் கார்டு வந்தது முதல், ஆவலுடன் அரசமரத்தைப் பிரதக்ஷணம் பண்ணி வந்தாள். தான் பிரதக்ஷணம் பண்ணினால் தன் கணவனுக்குச் சீக்கிரம் உடம்பு சொஸ்தமாய் விடுமென்று அவள் நம்பினதால், கிரமமாயுள்ள 108-ப் பிரதக்ஷணங்களுக்கு மேலேயே தினமும் செய்து வந்தாள்.

காலையில் ஆற்றில் நீராடிவிட்டு, விறைக்க விறைக்க ஈரப் புடைவையை மேலே போர்த்துக் கொண்டு, முடிவில்லாததுபோல் தோன்றும் பிரதக்ஷணங்களை அரசமரத்தைச் சுற்றி அவள் பண்ணுவதைப் பார்த்தால், பக்தியே உருக்கொண்டு வந்தாற்போ லிருக்கும். அன்று காலை அவள் வழக்கம் போல் ஆற்றுக்குப் போயிருந்தாள். துரைசாமி, அவள் கணவனுக்கு உடம்பு கொஞ்சம் தாழ்வில்லை என்று சங்கரையர் சொன்ன சந்தோஷ சமாசாரத்தை அவளிடம் சொல்லும் பொருட்டு, ஆவலுடன் அவள் வரவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தான். அன்று 200 பிரதக்ஷணம் பண்ணுவதாக அவள் தீர்மானித் திருந்ததால் வீட்டுக்கு வருவதற்கு நேரமாயிற்று.

துரைசாமி கொஞ்ச நேரம் காத்திருந்து, பின்பு ஆற்றை நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது தபால்காரன் இரண்டு தந்திகளைக் கொண்டுவந்து அவன் கையிற் கொடுத்தான். துரைசாமி தந்திகளைக் கண்டவுடன் திடுக்கிட்டு, ஒரு தந்தியை அவசரமாய்ப் பிரித்து வாசித்தான். அதில், 'ராமையாவுக்கும் உனக்கும் இரண்டாம் வகுப்பில் பரீக்ஷை தேறிற்று' என்று எழுதியிருந்தது. மற்றத் தந்தியை மறந்துவிட்டுத், தன் தாயினிடம் இந்தச் சந்தோஷ சங்கதியைச் சொல்லும்படி வீட்டுள் விரைந்து சென்றான். அதைக் கேட்க அவன் தாயாருக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது. அவனை ஆசீர்வதித்து, தன் மாப்பிள்ளைக்குச் சீக்கிரம் குணமாக வேண்டு மென்று சுவாமியைப் பிரார்த்தித்து விட்டு, அவன் கையி லிருக்கும் மற்றத் தந்தி யென்னவென்று அவள் கேட்டாள். அவன் உடனே அதைத் திறந்து பார்க்க, "ராமையா இன்றிரவு எழு மணிக்கு இறந்து போனான்" என்ற மிகவும் துக்ககரமான செய்தி கண்டிருந்தது. அவன் அப்படியே சுவற்றிற் சாய்ந்துக் கொண்டு ஸ்தம் பித்துப்போய் விட்டான். அவன் தாய் ஓலமிட்டு அழுதாள்.

இருநூறு பிரதக்ஷணங்களையும் செய்து முடித்து விட்டு, அலுத்துச் சலித்து, சீதை அப்பொழுது தான் வீட்டுக்கு வந்தாள். அவளைக் கண்டவுடன் அவள் தாய்: "ஐயோ, பாவிப் பெண்ணே! உன் விதி இப்படியா இருந்தது!" என்று, அவள் கால் முன் வீழ்ந்தாள். அதற்குள் அடுக்களையி லிருந்த அவள் பெரிய தாயாரும், அழுது கொண்டு வெளியே வந்தாள். பிரமித்து நிற்கும் அந்தப் பெண்ணை அவள் கட்டிக் கொண்டாள். ஆனல், சீதை,

பாவம், குழந்தை, காலை நீட்டிக் கீழே உட்கார்ந்து கொண்டு, "ஐயோ அம்மா! என் காலெல்லாம் உளைகிறதே!" என்று, தன் கைகளால் கால்களைப் பிடித்துக் கொண்டு, தேம்பித் தேம்பி அழுதாள். அவள் வார்த்தை, அவள் தமயன் மனத்தை விஷமிட்ட அம்புபோல் ஊடுருவிப் பாய்ந்து வருத்தியது. அவன் அவளை வாரி அணைத்துக் கொண்டு, பக்கத்திலிருந்த அறைக்குட் கொண்டு போனான். அங்கே ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு அவர்கள் வெகு நேரம் வரை விசித்து விசித்து அழுதார்கள். பாவம்! ஒன்றும் அறியாத பெண், தன் விதியின் கொடூரத்தில் ஒரு சிறிதையும் அவள் அப்பொழுது உணரவில்லை. தான் அழுததனாலும், தன் தமயனது அன்பினாலும் சீக்கிரத்தில் ஆறுதலை யடைந்தாள்.

II

மேற்சொன்ன சமாசாரங்கள் நடந்து 5 வருஷங்களாய் விட்டன. அவர்கள் இப்பொழுது பெஜவாடாவிலிருந்தார்கள். துரைசாமிக்கு அங்கே ரெவினியூ இன்ஸ்பெக்டர் வேலை. அவன் மனைவி இன்னும் வீட்டுக்கு வரவில்லை. அவன் தாயாரும் தங்கையும் அவன் கூடவே இருந்தார்கள்.

சீதை இப்பொழுது அதி ரூபவதியான பெண்ணாகவிருந்தாள். அவள் தாய் தினம் தினம் மகாபாவம் என்று சொன்ன போதிலும், அவள் தமயன் கட்டாயத்தின் பேரில் அவள் கூந்தலை எடுக்கவில்லை; அதனால் அவள் சமைத்த தொன்றையும் அவள் தாய் சாப்பிட மாட்டாள். சமையல் வேலையில் அவள் உதவி புரியவும் கூடாது. இது சில சமங்களில் அவளுக்கு மன வருத்தமா யிருந்த போதிலும், அவள் தமயன் அவள் கணவன் இறந்த பிறகு, அவளுக்குப் படிப்புச் சொல்லுக் கொடுக்க ஆரம்பித்ததால், அவளுக்கு வாசிக்க அதிக அவகாசம் அகப்பட்டது. அவள் இப்பொழுது துரைசாமியிடம் தெலுங்கும் வாசித்துக் கொண்டிருந்தாள். அந்த பாஷையில் சிறு கதைகள் வாசிக்கு மளவு கற்றிருந்தாள்.

துரைசாமி, எப்பொழுதுமே, மேலான கொள்கைகளுடையவன். பெஜவாடாவுக்கு வந்தபின், ப்ரும்ம ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு இயற்றிய புஸ்தகங்களை வாசித்தான். ஆசாரச் சீர்திருத்த சங்கத்தைச் சேர்ந்தவர் சிலர் அவன் சிநேகிதர்க ளானார்கள். அதனால் சீதைக்குப் புனர்

விவாகம் செய்ய வேண்டுமென்று நினைக்கலானான். அவன் சிநேகிதருள் நாகநாத னென்ற வாலிப னொருவ னிருந்தான். அவன் மனைவி, தலைச்சன் குழந்தை பிறந்ததும், இறந்துபோய் விட்டாள். தன் கொள்கைப்படி ஒரு விதந்துவைக் கலியாணம் செய்துகொள்வதாக அவன் சொல்லிக் கொண்டிருந்தான். தான் மட்டும் சம்மதித்தால், அவன் தன் தங்கையைக் கலியாணம் பண்ணிக் கொள்வா னென்று துரைசாமிக்குத் தெரியும். அவனுக்கு ரெயிலில் வேலை. பார்வைக்கு லக்ஷணமா யிருப்பான்; நல்ல குணமுள்ளவன். அதனால் தன் தங்கையை அவனுக்குக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று துரைசாமி விரும்பினான். ஆனால் ஒரு பெருந் தடை யிருந்தது. அவன் தாய் அதற்கு ஒரு நாளும் சம்மதிக்க மாட்டா ளென்பது அவனுக்குத் தெரியும். சீதையும் அவ்வாறு விரும்பினாலுமே, தன் தாயாரை இன்னும் அதிகமாக வருத்தப்படுத்த அவளும் சம்மதிக்க மாட்டா ளென்பதும் அவனுக்குத் தெரியும். அவனுக்கும் அவன் தாய்க்கும் சீதை தலை மயிரை வைத்துக் கொண்டிருப்பதைப் பற்றியே அடிக்கடி சண்டைகள் நேரிடுவ துண்டு. அதனால் சீதை சில சமயங்களில், மனக் கசப்பினால், தன் தலை மயிரை எடுத்து விடுவதாக அவனிடம் சொல்வ துண்டு. தன் தாயாரின் கொள்கைகளையும் மன முறண்டையும் நன்கு அறிந்த துரைசாமியோ, தன் கருத்தை வெளியிட, தக்க சமயம் பார்த்துக்கொண் டிருந்தான்.

ஒரு நாளிரவு, சமாசாரப் பத்திரிகையை வாசித்துக் கொண் டிருக்கும் பொழுது, அவன், "அம்மா, இதைக் கேள்: 18-வயதான ஒரு பிராமண விதவைக்கு, போன வெள்ளிக் கிழமை, இராச மகேந்திர புரத்தில் புனர் விவாகம் நடந்ததாம். அநேக கனவான்களும் சில பிராமண ஸ்திரீகளும் கூட வந்திருந்து, தம்பதிகளை ஆசீர்வதித்தார்களாம்" என்று சொன்னான்.

"சிவ! சிவ! சிவ!" என்று, அவன் தாய் செவிகளைப் பொத்திக் கொண்டு, "கலி முற்றி விட்டது. பெண்ணுக்கு 18-வயதென்றால் அவளும் சம்மதித்துத்தானே இருப்பாள்?" என்று கேட்டாள்.

"ஆமாம், விதவைகளைப் புனர் விவாகம் செய்துகொள்ளச் சொல்லி ஒருவரும் கட்டாயப் படுத்த வில்லை. அவர்கள் கஷ்டப் படாமலும் கற்புநிலை தவறாமலும் வாழும்படி,

இஷ்ட முள்ளவர்கள் புனர் விவாகம் செய்து கொள்ளும் படித் தான் ஆசாரச் சீர் திருத்த ஸங்கத்தார் உதவி புரிகிறார்கள்,'' என்றான் துரைசாமி.

"கற்பென்ன வந்தது கற்பு! மானம் கெட்ட வேசைகளினும் தாழ்ந்தவரே இப்படிப் பட்டவர்கள்,'' என்றாள் அவன் தாய்.

"நம்ம சாஸ்திரங்களிற் கூட விதவா கலியாணம் செய்யலா மென்று சொல்லி யிருக்கிறதே? விதவா கலியாணம் முன் காலங்களில் நடந்து கொண்டு தானே இருந்தது?'' என்றான் துரைசாமி.

"நம் சாஸ்திரங்களைப் பற்றி உனக்கு அவ்வளவும் தெரியுமே! உனக்கு சந்தியா வந்தன மந்திரம் கூட மறந்து போயிருக்கும்'' என்று, அவள் பரிகசித்தாள்.

"அப்படியே இருக்கட்டும், அம்மா! ஆனால், தன் கலியாணத்திற்குப் பிறகு தன் கணவனை மறுபடியும் பார்க்கக் கூட இல்லாத விதந்து புனர் விவாகம் பண்ணிக் கொண்டால், அவள் கெட்டவள் என்று எப்படிச் சொல்லலாம்?'' என்று துரைசாமி கேட்டான்.

"என்ன என்னவோ உளறுதே. கற்புள்ள குல ஸ்திரீ எவளும் புனர் விவாகத்தைப் பற்றி நினைக்கவே மாட்டாள். சாந்தி ஆனாலும் சரி, ஆகா விட்டாலும் சரி, கழுத்தைத் தொட்டு ஒருவன் தாலி கட்டின நிமிஷமே, அவள் பிராண னுள்ள வரையும், நன்றானாலும் தீதானாலும், அவள் சரீரமும் ஆத்மாவும் அவனுடையதே. நீ எதற்காக இப்படி வாதாடுகிறாய்?'' என்றாள் அவன் தாய்.

துரைசாமி, பரப் பரப்புடன், "அம்மா! சீதை பச்சைக் குழந்தை! அவளுக்கு இந்த விதி நேர்ந்திருப்பதைப் பார்க்க என்னால் சகிக்க முடிய வில்லை. ஒருவரும் அறியாமல் தனியே போய் உட்கார்ந்து கொண்டு அவள் அழுவதை நான் பார்த் திருக்கிறேன். என் சிநேகிதன் நாக நாதனை உனக்குத் தெரியுமே, போன வருஷம் அவன் மனைவி இறந்து போய் விட்டாள். அவன் நல்லவ னென்று நீயே சொல்லி...''

"அவள் தலை மயிர் வைத்துக் கொண்டிருப்பது போதாதா? ஒரு அபாண்டமான பாவத்தைப் பண்ணி, நமக் கெல்லோர்க்கும் பழியையும் நரகத்தையும் தேடுகிறாயா? இப்படி நீ நினைப்பது தெய்வத்துக்கு அடுக்குமா?

அது அவள் தலை விதி; போன ஜென்மத்திற் பண்ணின பாவம், இந்த ஜன்மத்தில் இந்த விதி கிடைத் திருக்கிறது. அவள் கர்மம். துரைசாமி! நான் உயிரோ டிருக்கும் வரை இதற்கு ஒரு நாளும் சம்மதியேன். இதைப் பார்க்கிலும் நானே அவளை விஷமிட்டாயினும் கொன்று விடலாம்” என்று, அவன் தாய் சொன்னாள்.

பின்பு, அவள், தன் ஒரே மகன் துஷ் கர்மியாய் விட்டதைப் பற்றிப் பிரலாபித்து அழலானாள்.

மேற் சொன்ன சம்பாஷணை நடந்து ஏழு வருஷங்களாய் விட்டன. சீதை இப்பொழுதும் தன் தமயன் கூடவே இருந்தாள். துரைசாமிக்கு இப்பொழுது மூன்று குழந்தைக ளிருந்தன. அவன் வயோதிகத் தாய் இன்னும் உயிரோ டிருந்தாள்; ஆனால் அவள் கண்ணிருண்டு காதடைத்து, உயிர்ப் பிணம் போ லிருந்தாள். துரைசாமி மனைவி குஞ்சம்மாள், கர்வமும் அகங்காரமு முள்ளவள். தன் மாமியார் ஒன்றுக்கும் ஆகாத உயிர்ப் பொறை என்று பகிரங்கமாய் தூஷித்தாள். சீதையைப் பல விதத்திலும் கஷ்டப் படுத்தினாள்.

துரைசாமிக்கு தாசில் உத்தியோகம். அவனுக்குத் தன் மனைவி யுடனும், குழந்தைக ளுடனும் பேசக் கூட அவகாசம் கிடையாது. தன் தங்கையை அவன் கவனிப்பதே இல்லை. பாவம்! சீதை யின் அழகான கூந்தலை எடுத்து விட்டார்கள். அவள் மதினி, விதவைகளுக் குள்ள விரதங்களை யெல்லாம், அவள் அனுஷ்டிக்கும்படிக் கட்டாயப் படுத்தினாள். சீதை தான் வீட்டு வேலைக ளெல்லாம் செய்து வந்தாள். இடை விடாமல் வேலை செய்த போதிலும், அவள் மதினி அவளைத் திட்டிக் கொண்டே இருந்தாள். சீதை, மனம் கசந்து மற்றவர் சந்தோஷத்தைக் கண்டு பொறாமை கொள்ளத் தொடங்கினாள். அவளிடம் அன்பாய்ப் பேசுவார் யாருமே யில்லை. அவள் மதினி அதிகாரத்துக் குட்பட்டுக் கண்ணீரும் கம்பலையுமாய்த் தின்னும் சோறு, அவளுக்கு விஷம்போ லிருந்தது. அவள் தமயன் மட்டும் அவளிடத்தில் அன்பா யிருந் திருந்தால், இதினும் நூறு மடங்கு கஷ்டத்தையும் அவள் பொறுத்துக்கொண் டிருந்திருப்பாள். ஆனால் அவன் அவளைத் திரும்பிக்கூடப் பார்ப்ப தில்லை. குஞ்சம்மாள், தன் குழந்தைகளுக்கும் கூட, சீதையை தூஷிக்கக் கற்பித் திருந்தாள். துரைசாமி இப்

படித் தன்னிடத்தில் உபேக்ஷையா யிருப்பது, சீதை மனத்தை மிகவும் புண் படுத்தியது. தன் மதினி போதனையினுலேயே, தன் தமயன் தன்னைக் கவனிப்ப தில்லை என்பதை அறிந்து, அவளையும் அவள் குழந்தைகளையும் கூட வெறுக்க லானுள். அவள் அன்பை ஏற்றுக் கொள்பவர் யாரு மில்லை. அவள் முன்பு எவ்வளவு பக்ஷமுள்ள குணமுடையவளா யிருந்தாளோ, அவ்வளவு இப்பொழுது அவள் மனம் கசந்து வெறுப் புற்றது.

இவ்வாறு அவள் வருந்தி ஏங்கிக் கொண்டிருக்கும் நாளிலே, குஞ்சம்மாள் தம்பி அங்கே விருந்தாடியாக வந்தான். அவன் இரகசிய மாய்ச் சீதையுடன் பேசிப் பழக ஆரம்பித்தான். அவன் கண்ணுக்கு லக்ஷணமான ஒரு விடன். அவள் கஷ்டப் படுவதைக் கண்டு தான் மிகவும் இரங்குவதாயும், அவளைக்கண்டது முதல் அவள்மேல் தனக்குக் காதல் பிறந்து விட்டதாயும் சொல்லிப் பெருமூச்சுவிடுவான்; சாதுரியமான இனிமையான வார்த்தைகள் பேசத் தெரிந்தவன். ஒரு துணையும் கதியு மின்றி மனம் நொந்து கொண்டிருக்கும் சீதை, அவன் ஜாலத்தையெல்லாம் முற்றிலும் நம்பி, அவன் வஞ்சனைக் குட்பட்டாள். பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும். அவன் தமக்கை அவர்களுடைய காதலை ஒரு நிமிஷத்தில் யூகித் தறிந்து கொண்டு விட்டாள். சீதை தன் தம்பியை வசீகரித்துக் கெடுத்து விட்டதாக எண்ணி, அவளை முன்னைவிடப் பதின் மடங்கு வெறுத்துக் கஷ்டப் படுத்தினுள். ஆனுல் இதைத் தான் ருசுப்பிக்க முடியாததால், துரைசாமி யிடம் அவள் சில நாள் வரை ஒன்றும் சொல்ல வில்லை. அவள் எதிர்பார்த்திருந்த ருசு, அவளுக்குச் சீக்கிரம் கிடைத்தது. ஒரு நாளிரவு, துரைசாமி கச்சேரியி விருந்து வரும்பொழுது, தன் மனைவி கோபக் குரலுடன் தன் தங்கையைத் திட்டுவது அவன் காதில் விழுந்தது.''

"இது என்ன கலகம்?" என்று தன் மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

குஞ்சம் :—என்னவா? நானும் என் குழந்தைகளும் இனிமேல் ஒரு நிமிஷம் கூட இந்த வீட்டி லிருக்க முடியாது. நீங்கள் இப்பொழுதே எங்களை என் தாய் வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள்.

துரை :—ஏன், என்ன சங்கதி?

குஞ்சம் :—உங்கள் தங்கை கூட வேறொருத்தியும் குடியிருக்க மாட்டாளென்பது சுவாமிக்குத் தெரியும். எப்பொழுதுமே, இப்படி நமக்கொரு நாத்தனார் வாய்த்தாளே யென்று நான் மட்டும் மகிழ்ந்து கொண்டிருந்தேன். இனி இப்படி ஒரு கற்பரசி இருக்கிறாளே யென்று உலகமே கொண்டாடப் போகிறது.

துரை : —(கோபமாய்) அவள் கற்புக் கென்ன? அதைப் பற்றி யார் என்ன சொன்னது ?

குஞ்சம் :—ஒன்று மில்லை. இன்னும் நாலைந்து மாதத்தில் உங்களுக்குப் பலாப்பழம் போல் ஒரு மருமான் பிறக்கப் போகிறான். என் தம்பி அசடனென்று கண்டு கொண்டாள். தன் மாயத்தினா லவனை மயக்கி விட்டாள். அவர்க ளிருவரும் குலாவிக் கொண்டிருப்பதை இன்று சாயங்காலம் நானே கண்டேன்.

துரைசாமி யொன்றும் சொல்லாமல் மேடைக்குப் போய் விட்டான். அவன் மனைவி அடுக்களைக்குள் போனாள். தன் தமயனைக் கண்டவுடன் உள்ளே போன சீதை, அங்கே ஒரு மூலையி லுட்கார்ந்து அழுது கொண்டும், குஞ்சம்மாளுடைய கடைசிக் குழந்தையை மடிமேல் வைத்து ஆட்டிக்கொண்டு மிருந்தாள். குஞ்சம்மாள், அந்தக் குழந்தையை அவளிட மிருந்து பிடுங்கிக் கொண்டு, “உன் கொஞ்சுதலைக் கொஞ்சம் பாக்கி வைத்து வை. உன் குழந்தைக்கு வேண்டாமா? வெட்கம் கெட்ட வேசையைப் பார்! என் தம்பி பெண்டாட்டி பேரி லுனக்கு இரக்க மில்லையா? மூளையி லறுத்த மொட்டைச்சி, நீ மற்றவர் வாழ்க்கையையும் கெடுக்கப் பார்க்கிறாய்; இன்னொருத்தி யானால் இந்த அவமானத்துக் குட்படுவதைப் பார்க்கிலும் பிராணனை விட்டுவிடுவாள். உனக்கு வெட்கம் மானம் இருந்தால் தானே அந்தப்பாடு? உன் தமயன் உன்னையும் வைத்துக் கொண்டாடுகிறாரே! அந்த நன்றியாவது வேண்டாமா? அவரிடத்தில் நானிதைச் சொன்னதும், அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போ லாய்விட்டது.” என்றாள்.

சீதை, ஒன்றும் சொல்லாமல், கொல்லையை நோக்கிச் சென்றாள். துரைசாமி, அன்றிரவு 12 மணிக்குத் தான கீழே இறங்கி வந்தான். அவன் தன் மனைவியைப் பார்த்து, “அவள் எங்கே?” என்று, மனதிடிந்த குரலில் கேட்டான்.

“அவள் எங்கேயோ கொல்லைப் புறம் போனாள்” என்றாள், குஞ்சம்மாள். அவன் புழக்கடையை நோக்கிச் சென்றான். அவன் மனைவி ஒரு விளக்கை யெடுத்துக் கொண்டு அவன் பின் சென்றாள். சீதையைக் காணவில்லை; எங்கும் தேடினார்கள்; ஒன்றும் பயன் படவில்லை. மறுநாள் மாலையில் ஒரு கிணற்றில் அவள் பிரேத மகப் பட்டது. கிணற்றுச் சுவரின் மேல், ஒரு சிறு கல்லின் கீழ், சிறு துண்டுக் கடிதமும் அகப்பட்டது. அதில் “அண்ணா! என்னை மன்னித்து மறந்து விடு.” என்று மட்டும் எழுதி யிருந்தது. கண்ணீர்ப் பெருக்கினால் துரைசாமிக்கு அதை வாசிக்க முடிய வில்லை.

## 7. கோடங்கி ராமுடு




ல்ல வாக்குச் சொல்லடி மலையாள பகவதி! நல்ல வாக்குச் சொல்லடி சாமுண்டி!” என்று கூறித் தன் உடுக்கை அடித்துக் குறி சொல்லிக் கொண்டு, விடிய நாலு நாழிகைக்கு முன்னமே பேயூர்த் தெருக்களில் ஒரு நாட் போல் பல நாளாக உலாவி வந்தான் கோடங்கி ராமுடு. விடிந்த பின் வீட்டை விட்டு வெளி வருவோர் கண்ணில் அவன் தென்படுவ தில்லை. ராமுடுவின் உடுக் கொலியால் எழுப்பப் பட்ட பலர், புரண்டு படுத்துத் திரும்பவும் தூங்கினார்கள். சிலர் நித்திரையை விட்டெழுந்து, “ராமா! கிருஷ்ணா! கோவிந்தா!” என்று கூவிக் கொண்டு, தேவ நாமங்களை பஜிக்க லானார்கள். ஒருவன் மட்டும் திரும்பித் தூங்குவது மில்லை; தேவ பஜனஞ் செய்வது மில்லை. ராமுடுவின் உடுக் கொலிக்கு முன்பே அவன் சில நாட்களில் விழித்துக் கொள்வான்; அவன் நோயாளி யானதால் நன்றாய்த் தூங்குவ தில்லை. உள்ளூர் நாவித வைத்தியனுக்குத் தெரிந்த மருந்துகளை யெல்லாம் அவன் குடித்தாய் விட்டது. தன்னா லேன்ற மட்டும் ஊரி லுள்ள பேய் பிடாரிகளுக் கெல்லாம் பலி கொடுத்தாய் விட்டது. ஆனால் ஒன்றும் பயன்பட வில்லை. மனித சரீரத்துக் கேற்படக் கூடிய நோய்க ளனைத்தும் தன்னை வருத்துவ

தாக நம்பி, அவன் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். இப்பொழுது சில நாள்களாக அவனுக்கு ஒரு சந்தேகம்: தன் பெண்சாதியைக் கற்பழிக்கப் பார்த்தவனும், நீர்ப் பாய்ச்சல் விஷயமாக நடந்த சண்டையில் தனக்கு விரோத மாகப் பொய்ச் சாக்ஷி கூறினவனு மான நாயூர் மாணிக் கத்துக்கும் தனக்கும் தீராப் பகை யல்லவா? ஒரு வேளை தன் நோய்களெல்லாம், அவன் தன்னைப் பில்லி சூனியம் வைத்துக் கொல்லு மாறு செய்யும் ஏவல்களால் இருக்க லாம். அப்படிக்கின்றி, உண்மையில் வியாதியாக விருந் தால், சுப்புப் பண்டிதன் மருந்துகளுக்கும் வேம்படிச் சுடலை மாடன் சக்திக்கும் உட்படாத வியாதி யேது? வேம்படிச் சுடலை மாடனுக்கு ஓர் ஆடும் இரண்டு கோழி யும் ஒரு குப்பி சாராயமும் பலி கொடுத்த பின்பும், வியாதி யானுல் தீராமல் தன்னை வருத்துமா? ஆகவே, தன் கஷ்டங்களுக் கெல்லாம், நாயூர் மாணிக்கத்தின் ஏவுதல் தான் காரண மென்று, பேயூர் ஆறுமுகத்துக்குத் தெளி வாய் விளங்கி விட்டது. கோடங்கி ராமுடுவின் குறிகளை விடியற் காலம் கவனமாய்க் கேட்கக் கேட்க, அவனுக் கிருந்த அற்ப சொற்ப சந்தேகமும் நீங்கி விட்டது. ஆறு முகத்தின் வீட்டெதிரே வரும் பொழுதெல்லாம், கோ டங்கி: "ஐயோன்னு போகுது! ஐயோன்னு போகுது! அநியாயமாய்ப் போகுது! நோயில்லே! பேயில்லே! பொல் லாத பில்லி சூனிய மிது! அநியாயப் பில்லி சூனிய மிது! ஐயோன்னு ஒருயிர் போகுது!" என்று கூறுவது, ஆறு முகம் செவியில் விழுந்தது. இன்னும் என்ன சந்தேகம்!

"எந்தி கழுதை! எந்தி நாயே! என்ன உறக்கமிது? எந்தி கழுதை!" என்று, தன் இரு மக்களுடன் தூங்கிக் கொண்டிருந்த பெண்சாதி சுடலியை, ஆறுமுகம் அவசர மாய் எழுப்பினுன். இவ்விதப் பிரிய வசனங்களால், ஆறுமுகம், தன் மனைவியைத் திட்டியதாக ஒருவரும் கொள்ளலாகாது; புருஷனது சுதந்தரத்தைச் செலுத்து முறையே இது.

"என்ன? கூப்பிட்டீகளா?" என்று சொல்லிக் கொண்டே, சுடலி, காலை நீட்டிக் கொட்டாவி விட்டுக் கொண்டு, எழுந்தாள். "அன்னு கேளு கோடங்கி பேச்சை. நான் ஒரு மாசமாய்ச் சொல்லலேயா? அதைத் தான் அவ னும் சொல்லுகிறுன். அந்தப் படுபாவிப் பயல் மாணிக் கத்தின் ஏவுதல் தான் இது! இனியென்ன சந்தேகம்.?"

“நான் உறங்கிக் கொண்டிருந்தேன்; கோடங்கி பேச்சைக் கேட்க வில்லை; மாணிக்கந் தான் என்று அவன் பேரைச் சொன்னானா?” என்று சுடலி கேட்டாள்.

“அவன் பேரைச் சொல்ல வில்லை; ஆனால் வேறு யாரா யிருக்கும்? அந்தப் பயல் தான். கதவைத் திற; கோடங்கியை உள்ளே கூப்பிடு, கேட்போம்,” என்றான் ஆறுமுகம்.

சுடலி யெழுந்து வாயிற் கதவைத் திறந்து, தெரு வின் இருபுறமும் பார்த்தாள். கோடங்கி அதற்குள் போய் விட்டான். தெருவில் யாருமே யில்லை.

மறு நாளிரவு, ஆறுமுகம், தன் வீட்டுத் தெருத் திண்ணையில், கோடங்கிக் காகக் காத்திருந்தான். உடுக் கை யடித்துக் குறி சொல்லிக் கொண்டு கோடங்கி தன் வீட்டு முன்பு வந்த வுடன், ஆறுமுகம், அயல் வீட்டார் சந்தேகியாத படி, கையால் சாடை செய்து, அவனை வீட்டுள் அழைத்தான். கோடங்கியும், அதை எதிர் பார்த்தவன் போல், தெருவில் வேறெவரும் இல்லை யென்று பார்த்துக் கொண்டு, ஆறுமுகத்தின் வீட்டிற்குள் பாயவே, ஆறுமுகம் தெருக் கதவை யடைத்துத் தாளிட்டு விட்டு, அவனுடன் கூடத்தில் உட்கார்ந்தான்; சுவர்ப் புரையில் ஒரு மண் தகளி விளக்கு மங்கலா யெரிந்து கொண்டிருந் தது; சுடலி தூணைப் பிடித்துக் கொண்டு அருகே நின்றாள். கிசுகிசு வென்ற மெல்லிய குரலில், சம்பாஷணை நெடு நேரம் நடந்தது. ஆறுமுகமும் சுடலியும் அதிக திருப்தி யை யடைந்தார்கள்; கொல்லை வழியாய் வெளிப் போன கோடங்கியின் திருப்திக்கும் குறை வில்லை. ஆறுமுகத்தின் உடம்பு உடனே சௌக்கியப் படுவதுபோ லிருந்தது; கோடங்கி கொடுத்த ரக்ஷையை, ஆறுமுகம், தன் இடுப் பைச் சுற்றி வேஷ்டிக்குள் அணிந்து கொண்டிருந்தான்; அவன் கொடுத்த வேரின் கஷாயத்தையும் காலை மாலை குடித்து வந்தான். பின்பு நாலைந்து நாள்களுக்கு, கோடங்கி ராமுடு, பேயூர்ப் பக்கம் வர வில்லை. ஒரு தேவ தையின் சகாயத்தைத் தேடி, அவன் அயலூருக்குப் போ யிருப்பது ஆறுமுகத்துக்குத் தெரியும். கோடங்கி திரும்பி வந்த பொழுது, சுமுகமா யில்லை: எதிரி மும்மர மாய் வேலை செய்வதாயும், அவன் சூனியக்காரனை முந்திய செவ்வாய்க் கிழமை நள்ளிரவில் தான் சுடுகாட் டிற் சந்தித்ததாயும், தேவதை அதிகமான நேர்த்திக்

கடன்களை விரும்புவதாயும், அவன் சொல்லிக் கவலைப் பட்டான். ஆறுமுகத்துக்கு உடனே மன வேக்கம் பிறந்தது; முன்னிலும் அதிகமாகத் தேக மெங்கும் நோகத் தொடங்கிற்று. ஆயினும், உயிருள்ள மட்டும் தைர்யத்தைக் கைவிட லாகாது; பணமுள்ள மட்டும் கோடங்கியின் சகாயத்துக்கும் தாழ் வில்லை. ராமுடு அன்று திரும்பும்பொழுது, ஆறுமுகத்தின் புதிய வேஷ்டி யொன்றும், சுடலியின் சீலை யொன்றும் கொண்டு போனான்; மறுநாள், அவன் மனங் குளிர நாலு ரூபாவும் கிடைத்தது. இவ் விஷயத்தில் சுடலிக்கு அவ்வளவு திருப்தி யில்லை. அவள் நகையைச் செட்டியாரிடம் அடைமானம் வைத்தே ரூபா கடன் வாங்க வேண்டிய தாயிற்று. தன் புருஷன் சௌக்கியப்படும் விஷயத்தில், சுடலி தன் நகையைப் பெரிதாகப் பார்க்க வில்லை. ஆனால், கோடங்கி யிடத்தில் அவளுக்குள்ள நம்பிக்கை வரவரக் குறைந்தது; தன் புருஷன் அசூயையால் மாணிக்கத்தின் மேற் கொண்டுள்ள சந்தேகமும் வீணான படாப்பழி யென்று அவள் எண்ணினாள்.

ஆறுமுகத்தின் தேகம் நாளடைவில் சுகப்பட வில்லை; கோடங்கி விஷயத்தில் அவனும் தன் மனைவியைப் போல் சந்தேக முற்றான். ஆனால் ஒரு சங்கதி மட்டும் கோடங்கி யின் வல்லமையையும் மெய்ம்மையையும் துலக்கிற்று: ஆறுமுகத்தின் நோய்கள் தீரா விடினும், நாயூர் மாணிக்கம் புதிதாய் நோயுற்று, வரவரப் பல கஷ்டங்களுக் குள்ளாகி வருந்துவ தாக, அவன் கேள்விப் பட்டான். 'கெடுவான் கேடு நினைப்பான்!' அந்தப் பயலைச் சாணியும் மண்ணும் பிசைந்து தின்னும்படி யடிக்கா விட்டால் தன் பெயர் ராமுடு வில்லை என்று கோடங்கி விருது கூறினபடி செய்வது போல் தோன்றிற்று. தன் புருஷன் சுகப்பட்டாற் போதும், மற்றெவனையும் கெடுக்க வேண்டாம் என்பது சுடலியின் கொள்கை. ஆறுமுகமோ அப்படி நினைக்க வில்லை; ஆகவே, தன் எதிரி கஷ்டப் படுவது மெய்யோ பொய்யோ வென்று தெரிய விரும்பி, அவன், கோலூன்றித் தள்ளாடி நடந்து, தன் னூருக் கடுத்த நாயூர் சென்று விசாரித்ததில், முதலில் திடீ ரென்று மாணிக்கத்தின் பசு மாடு செத்துப் போனதாகவும், பின்பு அவன் குழந்தைக் குப் பெரியம்மை போட்டின தாகவும், அதன் பின் அவனுக்கே பலவித நோய்கள் கண்டு, அவனிப்பொழுது வருந்

திக் கொண்டிருப்ப தாகவும் தெரிய வந்தது. ஆறுமுகம் அளவற்ற சந்தோஷத்தை யடைந்து, மாணிக்கத்தின் கஷ்டங்கள் அதிகரிக்க அதிகரிக்கத் தனது நோய்க ளெல்லாம் குணப்பட்டு விடு மென்று மனப் பூர்வமாய் நம்பினான். அன்று நடு நிசியில், கோடங்கி திரும்பவும் ஆறுமுகத்தின் வீட்டுக்கு வந்து, ஆறுமுகம் சிறிது திருப்தியாகவும் சந்தோஷமாகவு மிருப்பதை அறிந்து கொண்டு, சொன்னதாவது:—"இந்தச் செவ்வாய்க் கிழமை இராத்திரிக், கடைசியாக, ஒரு முக்கிய சடங்கு சுடுகாட்டில் செய்ய வெண்டும். அதற்கு, பிறந்து மூன்று நாளுக்குள் இறந்து விட்ட ஒரு தலைப் பிள்ளையின் மண்டை யோடு வேண்டும். தற்காலத்தில் உள்ளூர்ச் சுடு காட்டில் அப்படிப்பட்ட மண்டை யோடில்லாத தால், என் தம்பியை வேறாருக்கு அனுப்பி யிருக்கிறேன். அன்றியும், வீரமா காளி யந்திரம் வரைய ஒரு தங்கத் தகடும், தோடிச் சுடலை முதலிய துஷ்ட தேவதைகளை யெல்லாம் சந்தோஷிப்பித்து அவர்கள் உதவியை யடைய ஒரு செம்மறி யாட்டுக் கடாவும், மூன்று சேவல்களும், பால் நிறம் போன்ற மாசு மறுவற்ற ஒரு வெள்ளாட்டுக் குட்டியும், இரண்டு குப்பி சாராயமும் வேண்டும். செவ்வாய்க் கிழமைச் சடங்கு நாலு வராகனுக்குக் குறை யாமல் பிடிக்கும். ஆனால் அது மட்டும் நன்றாய் நிறை வேறி விட்டால், பின்பு மூன்று நாளைக்குள், அப்பன் உடம்பு முற்றிலும் குணப் பட்டு, அப்பன் விரோதி வாயா லும் மூக்காலும் ரத்தங் கக்கிச் சாகா விட்டால், என் பேர் கோடங்கி ராமுடுவு மில்லை; நான் கும்பிடும் தெய்வம் சுடலைப் பட்டி உதிரமா காளித் தாயு மில்லை. பூங்கூர்க் கறுப்பன் வலது கால் கட்டை விரல் மேலாணை. நான் சொல்வது பொய்யானால் நான் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை உதவாமற் போகிறேன்."

இதைச் செவியுற்ற சுடலி, "அந்தச் சடங்கு நடக் கிறது என்ன நிச்சயம்? என் புருசன் பிழைச்சால் போதும்; வேறு யாரும் சாக வேண்டாம்; அப்படியா னால் அவ்வளவு பணம் பிடிக்குமா?" என்று கேட்டாள்.

கோடங்கி.—(சுடலியைப் பார்த்து) அது சரியில்லை, தாயே; அவன் பிழைச்சிருந்தால் இன்னும் ஏதாவது சேட்டை பண்ணிக் கிட்டே யிருப்பான். நானில்லாத சமயம் பார்த்து, ஒரு வேளை கொண்ணு போடுவான். அந்தப் படுபாவிப் பயல் ஒளிஞ்சால் தான் சேமம்.

அவனுக்கு இரங்காதே தாயே; உன் தாலியை அறுக்கப் பார்த்த பயலுக்கு இரங்காதே. சடங்கு நடக்குமோ இன்னு சந்தேகப்படு தாய்? சீ! சீ! அப்படிப் புளுகனு ராமுடு. என் அப்பன் தான் என் கூட இருப்பாரே.''

ஆறுமுகம். உன் கூட நடு நிசியிலே மயானத்துக்கு வரவா? ஆத்தாடி! நான் வரமாட்டேன்.

கோடங்கி.—சும்மா பயப்படாதே, அப்பனே! என் தாயி அப்பம் தான் நம்புவாக; இல்லாவிட்டால் கோடங்கி பணத்தை வாங்கிப் பொசுக்கெ்ன வாயில் போட்டுக் கிட்டானின்னு நினைப்பாக. சுடுகாடு—இன்னு, ஊருக்கு வெளியே, கிட்டத்தாலே இருக்குது. செவ்வாய்க் கிளமை ராத்திரி இரண்டாஞ்சாமக் கோளி கூவும்போது, அங்கே ஆலமாத்துக்கு வந்தாக்கா, அங்கே நானும் என் தம்பியுமிருப்பம். நாங்க பாத்துக் கிடுதம். பயமென்ன பயம், நானிருக்கச்சே? அப்பன் கூட இருந்தாத் தான் எல்லாம் சரியாகும். இட்ட மிருந்தால் என் தாய் கூட வரலாம். அப்பம் தெரியும், கோடங்கி புளுகும் மெய்யும்!''

முடிவில், கோடங்கி, ரொக்கம் கையிற் பத்து ரூபாவும்; எட்டாம் நாள் எல்லாம் நிறைவேறிய பின், இன்னும் நாலு ரூபாய் தருவதாக வாக்கும் பெற்றுக் கொண்டு, வெளியே போனான். குறித்த செவ்வாய்க் கிழமையும் வந்து சேர்ந்தது. ஆறுமுகம் இரவில் சுடுகாட்டுக்குப் போகிறதா இல்லையா வென்று ஆலோசித்துக் கொண்டிருந்தான். அவன் மனைவி சுடலி, கூட வரமாட்டேனென்று மறுத்து விட்டாள். தான் போகா விட்டால், அதனால் தான் சடங்கு கோளாறாகி விட்டதென்று கோடங்கி சாக்குச் சொல்லக் கூடுமென்று நினைத்து, கடைசியில் ஆறுமுகம் போகத் தீர்மானித்தான். இரவில் பதினொரு மணி சுமாருக்கு, இருட்டில் தன்னைப் பிறர்க்குத் தெரியாத வண்ணம் தன் பெண்டாட்டியின் கறுப்புச் சீலை ஒன்றால் மேலெங்கும் போர்த்துக் கொண்டு, வீட்டை விட்டு நழுவி, கையில் தடி யூன்றி, மெதுவாய்ச் சுடுகாட்டை நோக்கி ஆறுமுகம் சென்றான். சுடலி, தெய்வங்களை யெல்லாம் வேண்டிக் கொண்டு, வீட்டில் காத்திருந்தாள். கோடங்கி குறிப்பிட்ட சுடுகாட்டு ஆலமரம், பேயூரி லிருந்து நாயூருக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையின்மே லிருந்தது. நல்ல பாம்புப் புற்றுகளுக்குப் பேர்போன இடம் அது. ஆறுமுகம், அதன் கீழ்ச் செல்லப் பயந்து, பக்கத்தில்

நின்று நாற் புறமும் கவனமாய் நோக்கினான், வெளிச்ச மொன்றுங் காணோம்; மனித சஞ்சாரக் குறிகள் எதுவுமே தென்பட வில்லை. சுடுகாட்டி லிருந்த இரண்டொரு செடி புதர்களைக் கண்டு, கோடங்கியும் அவன் தம்பியுமோ வென்று கொண்ட சந்தேகமும் தெளிந்து விட்டது. ஒரு வேளை தான் சீக்கிரம் வந்து விட்டானோ என்று சந்தேகப் பட்டான். ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகம் போல் நீடித்துத் தோன்றிற்று. சுடுகாட்டுப் புறம் ஏதோ கோரமான நிழல்கள் அசைவதுபோ லிருந்தது; பயங்கரமான சப்தங்களும் கேட்பதாக நினைத்தான். ஆறுமுகம், சுத்த வீரனு மல்ல, சுத்தப் பயங்காளியு மல்ல; சாதாரண அஞ்ஞானங்களுக் குட்பட்ட நாட்டுப் புறத்துக்குக் கிராம வாசி. அவன் பயத்தினால் விறைக்கத் தொடங்கினான். தன் தெய்வங்களை யெல்லாம் நினைந்து பிரார்த்தித்தான்; திடீ ரென்று ஒரு சாமக் கோழி கூவவே, உடம் பெல்லாம் மயிர்க் கூர்ச் செறிந்து துணுக் குற்றான்; வேறு கோழிகளும் கூவினதைக் கேட்டுச் சிறிது பயந் தெளிந்தான். கோடங்கி தன்னை ஏமாற்றி விட்டா னென்ற சமுசயம் அவன் மனத்திற் பிறந்தது. அவனுக்கு இதனா லுண்டான மனக் கசப்பினாலும் கோபத்தினாலும் பயம் மாறி விட்டது. இனிக் காத்திருப்பதில் பயனில்லை யென்று தீர்மானித்து, வீட்டை நோக்கிப் புறப்படும் தறுவாயில், நாயூர்ப் பக்கத்தி லிருந்து, யாரோ ஒரு ஆள், தன்னை நோக்கி வருவதை அவன் கண்டான். வரும் ஆள் குட்டை; கோடங்கி யல்ல; ஆனால் ஒரு வேளை அவன் தம்பியா யிருக்கலாம். தான் கோடங்கியைப் பற்றிச் சந்தேகப் பட்டது வீணே. இரவோ கும்மிருட்டு; ஆயினும், தன்னைப் போலவே கறுப்புப் போர்வை போர்த் திருந்த அந்த ஆளும், பெண்பா லல்ல, ஆண் பிள்ளைதான் என்பது நிச்சயம். இருபது கஜ தூரத்துக்குள் வந்தவுடன், ஆள் நின்றது.

"யாரது?" என்று, ஆறுமுகம், உசாவினான்; பதிலில்லை.

"யாரது?" என்று, ஆறுமுகம் உரத்த குரலில் திரும்பவும் உசாவினான்.

"நீ யார்?" என்று, வந்த ஆள் பதிற் கேட்டான்.

ஆறுமுகம்:—நீ யார்? கோடங்கி தம்பியா?

வந்த ஆள் :—கோடங்கி இல்லையா அங்கே?

ஆறுமுகம் :—இல்லை; நீ அவன் தம்பி தானே?

வந்த ஆள் :—நீ யார்? பேயூர் ஆறுமுகமா அது?

ஆறுமுகம் :—ஆமாம்; நீ யார்?

வந்த ஆள் :—நானு, நாயூர் மாணிக்கம்.

ஆறுமுகம் :—இந்த நடு நிசியிலே நீ என்ன காரியமாக இங்கே வந்தாய்?

மாணிக்கம் :—எல்லாம் நீ வந்த காரியமாகத் தான். பார்த்தாயா! அந்தப் படுபயல் கோடங்கி நம்ம இரண்டு பேரையும் ஏமாற்றிப் போட்டானே!"

பின்பு மாணிக்கம் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினன்; ஆறுமுகமும் அவன் கூடச் சிரிக்கலானன். அந்தச் சிரிப்பு, அவர்களிருவர் அஞ்ஞானத்தையும் நீக்கி, மனோவியாதிகளை யொழிக்கும் அமுத சஞ்சீவியா யிருந்தது. ஒளிப்பு மறைப் பின்றி, இருவரும் நடந்த விஷயங்களை யெல்லாம் ஒருவருக் கொருவர் சொல்லிக் கொண்ட பின், அவர்களுக்குள் நெடு நாளாக வுள்ள பகையை யொழித்துச் சமாதானப் பட்டார்கள். பின்பு, அவ் விருவரும், அந்த மாய வேஷக் கோடங்கியைத் திரும்பிக் கண்ட பொழுது, அவனை நையப் புடைத்து அவனுக்குப் புத்தி வருத்துவதாகச் சபதம் செய்து கொண்டனர். சமயம் வாய்த்த பொழுது, அச் சபதத்தை அவர்கள் நிறைவேற்று தொழியா ரென்பது திண்ணம். ஆனல், இனி, கோடங்கி ராமுடு அவர்கள் கண்ணுக்குத் தென்படுவது எந்த யுகத்திலே? அவன் அப்படித் தென்பட்டு, அவர்களிட மிருந்து உதை வாங்கும் பொழுது, நாம் அந்த விசேஷத்தையும் விபரமாய்த் தெரிவிப்போம்.



# 8. பொய்யல்ல, மெய்யே

நான் ஒரு டாக்டர்; வைத்திய சாலையில் நான்கு வருஷம் படித்துப் பரீக்ஷை தேறிப் பட்டம் பெற்று, இப்பொழுது அஸிஸ்டண்டு ஸர்ஜன் வேலையி லிருக்கிறேன். இவ்வூரில் 'பிளேக்' வந்தவுடன் இங்கு மாற்றப் பட்டு வந்தேன். நான் கீழே கூறப் போவது கதை யல்ல; புராண மல்ல, கேவலம் சத்தியமே, எனக்குத் தெரியச் சமீபத்தில் நடந்த விஷயமே; ஆள் பெயர்களை மட்டும் மாற்றி யிருக்கிறேன்.

ஒருநாள் மாலையில், நாகநாதையர் என்றொருவர், தன் மனைவியோடும் மகளோடும் 'பிளேக்' கொட்டகைக்கு வந்து சேர்ந்தார். அவர் மகள் ரமணிக்குப் பன்னிரண்டு வய திருக்கலாம். சிவந்த மேனியும், மெல்லிய சரீரமும், கறுத்து நீண்ட கண்களு முடைய அழகிய பெண். அவளுக்குப் 'பிளேக்' என்று தான் அவர்கள் கொட்டகைக்கு வந்தனர். ஆனால் அவள் நோய் அம்மைக் கட்டே யன்றி, 'பிளேக்' இல்லை யென்று, மறுநாள் எனக்குத் தெரிந்து, நான் அவர்களை வீட்டுக்குப் போகச் சொன்னேன். நான் சற்றும் எதிர் பாராத படி, நாகநாதையர், தமக்கு வீட்டுக்குப் போக இஷ்ட மில்லை யென்றும், பத்து நாள் முடியும் வரை பிளேக் கொட்டகையிலே இருப்பதாயும் என்னைக் கெஞ்சி வேண்டிக் கொண்டார். எனக்கு அது ஆச்சரியமா யிருந்தது. உண்மையில், 'பிளேக்' கண்டவர்களையும் கூட கொட்டகையி லிருக்கச் செய்வது, கஷ்டமா யிருக்க, 'பிளேக்' இன்றியே அவ ராகவே இருக்க விரும்பியது புதுமையா யிருந்தது. அவரைத் தனித்துக் கூப்பிட்டு விசாரித்தேன். அப்பொழுது அவர் தன் சரித்திரத்தை உள்ளபடி சொன்னார். நான் முதலில் நம்ப முடிய வில்லை. வேறு வெளியே விசாரித்ததில் அவ்வளவும் கேவலம் மெய்யே என்று துலங்கிற்று. அவர் வாய்மொழி யாகவே அதைச் சுருக்கி எழுதுகிறேன்:

"நான் போலீஸ் டிபார்ட்மெண்டில் 30-வருஷம் வேலை பார்த்து, மாதம் 8-ரூபாய் பென்ஷனுடன், 55-வது

வயதில் வேலை நீங்கினேன். வேலை நீங்கும் பொழுது, அமராவதிக் கரையில் ஒரு வீடும், செட்டி கடையில் ஆறுயிரத்துச் சில்வானம் ரூபாயு முண்டு. அவ்வளவும் சுய சம்பாத்தியமே; இலஞ்சம் வாங்கின தாக மூன்று தடவை என்மேல் கேஸுகள் வந்து, நாலாயிர ரூபா வரை நஷ்டமாய் விட்டது; இல்லாவிட்டால் கையில் அதிக மிருந் திருக்கும். என் மூத்த சம்சாரத்துக்கு ஒரே பெண்; வேலை நீங்கும் பொழுது அந்தப் பெண்ணுக்குப் பதினொரு வயசு, கலியாண மாகவில்லை; இரண்டாம் சம்சாரத்துக்கும் நான்கு சிறு பெண் குழந்தைகளே. பிள்ளையே யில்லாததினால், இந்த ரமணியை ரமணு என்று அழைத்துப் பிள்ளையாகப் பாவித்து வந்தோம். 'பென்ஷன்' வாங்கின பின், மூத்த பெண்ணுக்கு வரன் தேடப் புறப்பட்டேன். 800-ரூபா வரசுல்கம் பேசி, ஒரு மாஜிஸ்திரேட்டின் பிள்ளையைத் திட்டம் செய்தேன். மொத்தம் 1800-ரூபாய் வரை அந்தக் கலியாணத்தில் வெளியாய் விட்டது; அப்படி யிருந்தும், சம்மந்தி யம்மாளுக்கும் திருப்தி யில்லை; மாப்பிள்ளைக்கும் திருப்தி யில்லை. தீபாவளி ஆறு மாதங்களுக்கு மாப்பிள்ளை வர வில்லை. நான் அனுப்பின சீர்கள் வந்து சேர்ந்ததாக எழுத்து மில்லை. ஒரு தரம் சம்மந்தி வீட்டுக்குப் போனேன். எனக்கு நடந்த மரியாதை எழேழு ஜன்மத்துக்கும் போதும். பெண் ருதுவான பின், ஐந்நூறு ரூபா வரை சீரும் நகையு மாகச் செலவிட்டுக் கொண்டு, சாந்திக் கலியாணத்துக்கு அவர்கள் வீட்டுக்குப் போனேன். படுக்கை யறையில், வாத்தியார் கர்ப்பாதான மந்திரம் செபிக்கும் பொழுது, சம்மந்தியம்மாள் வந்து, அங்கே யிருந்த சீர்களைப் பார்த்து விட்டு, என்னைப் பலவாறுக அவதூறு பேசி, "உனக்கு வேறு கலியாணம் பண்ணி வைக்கிறேன் வா" என்று, கட்டிலின் மேலிருந்த தன் பிள்ளையைக் கையைப் பிடித் திழுத்து உள்ளே கொண்டுபோய் விட்டாள். காலில் விழுந்து கெஞ்சியும் ஒன்றும் பலிக்க வில்லை. மாப்பிள்ளை 'பி.ஏ.பாஸ்' பண்ணி யிருக்கிறான், புத்தி சாலியா யிருப்பான் என்று, அவனையும் கெஞ்சினேன்; பதிலேயில்லை. சம்மந்திப் பிராமணரோ, 'அதெல்லாம் பெண் பெண்டாட்டிகள் விஷயம்,' என்று சொல்லிவிட்டார். என் வயிற் றெரிச்சல் பொறுக்க மாட்டாமல், தேவடி யாளிடம் போனாலும், அவள் கேட்ட பணம் கொடுத்து, அவ ளிஷ்டப்படி நடக்க வேண்டுமே; ஒரு பிராமண கந்நிகையை, இரண்டாயிர

ரூபா வரை நான் செலவழித்த பின்னும், இப்படி மானம் கெடுப்பது தர்மமா? இந்த அநியாயம் அடுக்குமா?” என்று முறை யிட்டேன். ஏனென்று கேட்பா ரில்லை. கடைசியில், செட்டிக்கு ‘நோட்’ எழுதிக் கொடுத்து, இரண்டு வட்டிக்கு 500 ரூபா கடன் வாங்கி, சம்மந்தியம்மாளுக்கு வாய்க் கரிசி போட்ட பின், சாந்திக் கலியாணம் மேல் நடந்தது. அடுத்த வருஷம், இளையாள் வயிற்றிற் பிறந்த மூத்த பெண்ணுக்கு விவாகம் நடத்த வேண்டியதாயிற்று. என் பெண்களெல்லாம்,—நானே சொல்லிக் கொள்ளக் கூடாது,—வெகு லக்ஷணமா யிருப்பார்கள். வேண்டுமானால் ரமணியைப் பாருங்கள். என் பென்ஷனோ, குடும்ப சம்ரக்ஷணைக்கே காணா வில்லை. அந்த வருத்தம் பிறருக் கென்ன? 950 ரூ. என்று ஒரு பையனைத் திட்டம் செய்தேன். அதற்குத் தாழ்ந்த சாதாரண வரன்கள் என் சம்சாரத்துக்குப் பிடிக்கவில்லை. என் பிள்ளையைப் போல தாங்கள்—தங்களிடத்தில் வெட்கமென்ன? அப்படி முடிப்பதற்குக்கூட, ‘கில்ட்டு’ நகைகள் வாங்கி யணிந்து, ஐசுவரியவனாக வேஷம்போட வேண்டியதாயிற்று; இல்லா விட்டால் சம்மதிக்கிற வழியா யில்லை. அடுத்த மூன்றாவது பெண்ணுக்கு ஏழே வயசு; ஆனாலும், கலியாணத்தைச் சேர்த்துப் பண்ணினால், செலவாவது லாபமாகு மென்று, என் மைத்துனனை யனுப்பி, அவளுக்கும் வரன் பார்க்கச் சொன்னேன். பாலக்காட்டில், 12 வயதில் ஒரு பையனை, 500 ரூ. என்று திட்டம் செய்தான். அவர்கள், மாப்பிள்ளை வேஷ்டியில் பட்டும், சரிகையும் கலந்து இவ்வளவு அகல மிருக்கவேண்டும்; நல்ல மேளக்காரன் வேண்டும்; இத்தனை அப்பம், இத்தனை தோசை, இவ்வளவு பெரிதாயிருக்க வேண்டும்; இத்தனை லட்டு இவ்வளவு கனத்துக்குக் குறையாம லிருக்க வேண்டும்; ஒரு நாளாவது சதிர் போட வேண்டும்என்றெல்லாம் நிபந்தனைகள் சொன்னார்கள். எல்லாம் ஒப்புக் கொண்டேன். அப்படி யிருந்தும், மூத்த பெண்ணுக்கு வரசுல்கம் 950 ரூ. என்று தெரியவே, பாலக்காட்டு சம்மந்தியும், சொல்வதற்கும் வெட்கக் கேடானபடி யெல்லாம் என்னை ஹிம்சைப் படுத்தி, ஜாகை காணாது, வண்டி நல்ல தில்லை, முந்தின ஸ்டேஷனுக்கே பக்ஷணம், காப்பி யொன்றும் வரவில்லை, என்றெல்லாம் தூற்றி, கடைசியில் 200 ரூபாய் கொடுத்தாலொழிய ஊருக்குத் திரும்பி விடுவதாகப் புறப்பட்டார். பேசின 500 ரூபாயோ கொடுத்தாய்

விட்டது ! ஆகவே, வேறு விதியின்றி, மேல் 200 ரூபாய் கொடுத்தேன். ஐந்தாங் கலியாணமாகி சம்மந்திமார் ஊர்போய்ச் சேரு முன், மொத்தம் 2500 ரூபாய் போய் விட்டது ; எனக்கும் மன வேக்கம் பிடித்து விட்டது."

"அப்படி யேன் செலவழித்தீர்? ஏழை வரன்களாகப் பார்க்கக் கூடாதா?" என்று, நான் கேட்டேன். அதற்கு நாகநாதையர் பதில் சொன்னதாவது:—"தாங்கள் பெண்களைப் பெறவில்லைபோ லிருக்கிறது? காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு, என்று கேட்டதில்லையா? நாமென்ன கஷ்டப்பட்டாலும் அவர்களாவது குடிக்கக் கஞ்சியும் உடுக்கத் துணியு முள்ள இடத்தைச் சேர்ந்து, கண்ணைக் கசக்கிக் கொண்டு கஷ்டப்படாம லிருக்க வேண்டு மென்ற அபிலாஷை தான், அப்படிச் செலவழித்தேன் ; என் சம்சாரமும் அப்படியே என்னைத் தூண்டினுள். அதற்குப் பின், தரித்திரம் பிடுங்கத் தொடங்கி விட்டது. மூத்த பெண் தலைப் பிரசவத்துக்கு வந்தாள். மற்றப் பெண்களும், கிரகப் பிரவேசம், ஆறுமாதம், தீவாளி, தலையாடி, கார்த்திகை, தைப்பொங்கல், வரலக்ஷ்மி விரதம், ஸ்தாலீபாகங்கள், பதினெட்டாம் பெருக்கு, ருது ஸ்நானம் என்று மாதம் தப்பினுலும் செலவு தப்பாமல், சீர்செய்ய வேண்டிய தாயிற்று. ஐயா! தாங்கள் படித்தவர்கள், மற்ற நாட்டாரையும் ஜாதியார்களையும் பற்றித் தெரிந்திருப்பீர்களே, வேறெந்த தேசத்திலாவது, எந்த ஜாதியிலாவது, பெண் பெற்றவர்களைப் பாப்பராக்கிக் கையில் ஓட்டைக் கொடுக்க இத்தனை வழிக ளுண்டோ?" [எனக்குண்டான துக்கத்தினுல் பதிற் சொல்ல முடியவில்லை.] "கைமுதல் சுருங்கிக் கடன் வாங்கத்தொடங்கினேன். 'பிரைவேட் வக்கீலா' யிருந்து ஏதாவது சம்பாதிக்கப் பார்த்தேன்; நோய்களினுல் முடிய வில்லை, இதற்குள் 800 ரூபாய் தான் கடையி லிருந்தது. 350 ரூபாய் சில்லரைக் கடனுய் விட்டது. கலியாணத்துக்கு இரண்டு பெண்களு மிருந்தார்கள். எங்கே யாவது ஊரைவிட்டுப் போய், 'கிளப்' வைத்துப் பிழைக்கலா மென்று, என் சம்சாரம் சொன்னுள். ஒரு பெண்ணை யாவது அதற்கு முன் கட்டிக் கொடுத்துவிட எண்ணி, இவளுக்கு மூத்தவளை, அவளுக்கு 13 வயதாய் விட்டது அப்பொழுது, அடுத்த வூர்ப் புரோகிதர் பிள்ளை, 'சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் குமஸ்தா" அவனுக்கு துவிதியமாகக் கொடுக்க உத்தேசித்தேன். அவனும் 600 ரூபாய் ரொக்கம் கேட்டான்.

'எப்படி யானாலும் நம்ம குழந்தை தானே அனுபவிப்பாள்' என்று நினைத்து, வீட்டை 600 ரூபாய் விலைக்குப் புரோகிதருக்கு எழுதிக் கொடுத்து, அந்தப் பெண்ணை அவர் பிள்ளைக்குக் கட்டிக் கொடுத்தேன். பிற்பாடு கடன்களைத் தீர்த்துவிட்டு, மிஞ்சின 200 ரூபாயை மட்டும் கையிலெடுத்துக் கொண்டு, 'கிளப்' போட்டு பிழைக்கலாமென்று, போன வருஷம் இந்த ஊருக்கு வந்தோம். முன் 'அட்வான்ஸ்' கொடுத்து, ஒரு வருஷத்துக்குப் பேசி, ஒரு வீடு திட்டஞ் செய்து, அவசியமான சில பாத்திரங்கள் வாங்கி முடிந்தவுடன், கையில் 50 ரூபாய் கூட மிச்சமில்லை. போட்ட 'கிளப்' பும் உருக் கூட வில்லை. என் துர் அதிர்ஷ்டமும் கூடவே வந்து, 'பிளேகு'ம் உண்டாயிற்று. எனக்கும், கடனும் 'சிக்கு'ம் அதிகரித்தன. ஐயா! நான் போலீஸ் இன்ஸ்பெக்டராகக் கூடக் கொஞ்ச நாள் உத்தியோகம் பண்ணினேன். இப்பொழுது சாப்பிடச் சாத மன்னியில், சவண்டி, நிமந்திரணம், சாப்பிட்டும், சர்வாணி வாங்கியும் கிடைத்ததை வைத்து, அரை வயிறு, கால் வயிறு வளர்க்கும்படி யாய் விட்டது. அது கூடப் பெரி தில்லை. இவளுக்கு வயதாய் விட்டது; கட்டிக் கொடுக்க வழி யில்லை, இதுவே ஏக்கம், இராப்பகல் நித்திரை யின்றி மனக் கவலை. உடம் பெல்லாம் வெண் குஷ்டம் பிடித்தவ னொருவன், பிள்ளையார் கோயில் வைத்துப் பிழைத்துக் கொண்டிருப்பவன், வயது நாற்பதுக்கு மேலாச்சுது, அவன் வந்து மூன்றாவது தாரமாக எங்கள் ரமணுவைக் கேட்டான். ஐயோ! அவன் கையில் பிடித்துக் கொடுப்பதிலும் கசத்தில் தள்ளி விடலாம் என்றெண்ணி மறுத்து விட்டேன். நானும் என் சம்சாரமும் குழந்தையும் வயிறு நிறையச் சாப்பிட்டு எத்தனையோ நாளாச்சுது. தங்கள் மனசிருந்தால், தாங்கள் தயவு பண்ணினால், இங்கே யாவது பத்து நாள் வயிறு நிறையச் சாப்பிடுவோம். பிளேக் வந்து செத்தால் நல்லதே.''

இதைக் கேட்டவுடன் எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது. ரயில் செலவுக்குக் கிடைத்தால், மதுரையோ, திருச்சிராப்பள்ளியோ, எங்கேயாவது 'பிளேக்' இல்லாத ஊரில் போய், எப்படி யாவது பிழைக்கலாம் என்று, அவர் மனைவி சொன்னாள். அப்படியே செய்யும்படி என் கையி லிருந்து பத்து ரூபாயைக் கொடுத்து, அவர்களை அனுப்பினேன். இது நடந்து இரண்டு மாதமாய் விட்டது; அவர்கள் ஊரைவிட்டுப் போய்விட்டார்கள் என்றே

நான் நினைத்திருந்தேன். சென்றவாரம் திடீரென்று அவர் மனைவி ஓடிவந்து, "'ரமணுவுக்கு நிஜமாகவே 'பிளேக்' வந்திருக்கிறது; வந்து பாருங்கள், என் குழந்தையை; உங்களுக்கு கோடிப்புண்ணிய முண்டு,'' என்று பதைபதைத் துச் சொன்னாள். "இன்னும் இங்கே தானா இருக்கிறீர் கள்? அவர் எங்கே?'' என்று கேட்டேன்.

"இங்கேயே இருக்கிறோம்; வேறாருக்கு வரமாட்டே னென்று சொல்லி விட்டார். தாங்கள் தயவு செய்து கொடுத்த ருபாயும் அப்பொழுதே செலவாகி விட்டது. 'இங்கே யிருந்தால் பிளேக் காவது வரும்' 'இங்கே யிருந் தால் பிளேக் காவது வரும்,' என்று சொல்லிக் கொண்டே யிருந்தார்; அப்படியே, முந்தா நாளே என் குழந்தைக்கு வந்து விட்டது. என்னாலான மட்டும் தங்களிடத்தில் வந்து சொல்லச் சொன்னேன்; தானும் போக மாட்டேன், நானும் போகக் கூடா தென்று தடுத்து விட்டார். அவருக்குத் தெரியாமல் நான் தப்பி யோடி வந்தேன். உங்களுக்குக் கோடிப் புண்ணிய முண்டு, வந்து பாருங்கள் என் குழந் தையை,'' என்று, கரைந்து அழுதுக்கொண்டு சொன் னாள். நானும் அவளுடன் உடனே போனேன். நாக நாதையர், வாசல் திண்ணையில் முக்காடிட்டு உட்கார்ந் திருந்தார். நான் கேட்டதற்கு, "யார் சொன்னது? என் பெண்ணுக்கு பிளேக் இல்லை,'' என்று சொன்னார். "நான் பார்க்கட்டும் உள்ளே வாரும்.'' என்று கூப்பிட் டேன். "நீங்கள் வேணுமானால் போய்ப் பாருங்கள்; நான் வர வில்லை,'' யென்று சொல்லிவிட்டார். இதற்குள் "அப்பா! அப்பா!'' என்று உள்ளிருந்து பரிதபித்துக் கூப் பிடுவது காது கேட்டது. அவர் அசைய வில்லை; முழங் கால்களைக் கைகளால் கட்டிக் கொண்டு, முகத்தை மறைத் துக் கொண்டு விட்டார். நான் உள்ளே போனேன். டாக்டராக நானும் எத்தனையோ பயங்கரமும் உருக் கமு மான காட்சிகள் பார்த் திருக்கிறேன். ஆனால், அவர் வீட்டில் அன்று கண்டதை மட்டும் ஒரு நாளும் நான் மறக்க முடியாது. அந்தப் பெண், அடுக்களையில், தரை யிற் கிடந்து, மரண வேதனையிற் புரண்டு கொண்டிருந் தாள்; இரண்டு செத்த எலிகள் பக்கத்தில் நாறிக் கொண்டு கிடந்தன. தாக சாந்திக்காக அவளா லிழுக்கப்பட்ட குட மொன்று கவிழ்ந்து, எங்கும் ஜலமா யிருந்தது; அவளும் அந்தச் சேற்றிலேயே கிடந்தாள். இரண்டு மூன்று தடவை நாகநாதையரைக் கூப்பிட்டேன்; அவர் வரவு

மில்லை, பதிலு மில்லை; அந்தப் பெண்ணுக்கு வேறொரு காய்ந்த துணி யுடுத்தி, ஈரத்தைத் துடைத்து, தள்ளிக் கிடத்தும்படி அவர் மனைவிக்குச் சொல்லிவிட்டு, நான் வெளியே வந்து, 'பிளேக் கொட்டகைக்குக் கொண்டு போக, அவர் அனுமதிகேட்டேன்; நாகநாதையர், "கூடவே கூடாது; தெய்வ சங்கல்பம் போ லாகிறது," என்று சொல்லி விட்டார்.

நான்:—பாவிப் பிராமணா! அநியாயமாய் உம்முடைய பெண்ணையே கொலை செய்கிறீரே! மூன்று நாள் பிளேக் கண்டதை இது வரையும் சொல்லா திருந்து விட்டீரே! இனிப் பிழைப்பா ளென்று நம்பிக்கை யில்லை; ஆனாலும் அங்கே கொண்டுபோய் என்னா லான மட்டும் பார்க்கிறேன். நீரும் உம்முடைய சம்சாரமும் கூடவே வாருங்கள்; உங்களுக்கும் நல்ல சாப்பாடு போட்டு, உம்முடைய சிக்குக்கும் மருந்து தருகிறேன்.

நாகநா:—அங்கே போனால் ஒரு வேளை ரமணீ பிழைப்பாளோ?

நான்:—பிழைக்கலாம்; என்னா லான மட்டும் பார்க்கிறேன்.

நாகநா:—அங்கே கொண்டு போகக் கூடாது: நான் சம்மதிக்கவே மாட்டேன்.

நான்:—ஏனிப்படிச் சொல்கிறீர்? அவள் பிழைக்க வேண்டா மென்றிருக்கா உமக்கு?

நாகநா:—அதெல்லாம் நீங்க ளேன் கேட்கிறீர்கள்? தெய்வ சங்கல்பம் போ லாகிறது.

இதற்குள் அவர் மனைவி உள்ளே யிருந்து கூக்குரலிட் டழுதாள். உள்ளே போய்ப் பார்த்தேன். ரமணி, அவள் தாயின் மடியில் இறந்து கிடந்தாள். நான் வெளியே வந்து, "உம்முடைய இஷ்டம் போலாச்சுது. ரமணி இறந்து போய் விட்டாள்; ஆனால் இந்தக் கொலை பாதகம் உம்மை விடாது," என்று, மனக் கசப்பாய்ச் சொன்னேன்.

"எல்லாம் தெய்வ சங்கல்பம்; தெய்வம் அகதிக்கு இரங்காமற் போகுமா? நான் கொலை பாதக னில்லை. என்னை இக்கோலங் கண்டவர்களையே அந்தப் பாபஞ் சேரும். தெய்வத்துக்குக் கண்ணில்லையா?" என்றார் நாகநாதையர்.

Printed and Published by A. Madhaviah
at The Authors' Press and Publishing-House, Mylapore, Madras

# Mr. A. MADHAVIAH'S ENGLISH WORKS

| | | |
|---|---|---|
| 1. | *Thillai Govindan*—With an Introduction by Frederic Harrison—English edn. by Fisher Unwin. | 1—0—0 |
| 2. | *T. G's Miscellany*—only a few copies left— | 0—8—0 |
| 3. | *Satyananda*—a fascinating novel — | 1—0—0 |
| 4. | *Clarinda*—a Historical Novel — | 1—8—0 |
| | Do.,—Do.,—Cloth—gilt — | 2—0—0 |
| 5. | *Poems*—with Introduction by Dr. Russell— | 1—0—0 |
| 6. | *Dox* vs. *Dox*—out of stock—will be reprinted shortly. | |
| 7. | *Muthumeenakshi*—the Autobiography of a Brahmin girl—Translated from the Tamil original by the Author's daughter — With an Introdution by Sir C. Sankaran Nair— | 0—10—0 |
| 8. | *The Story of the Ramayana**—(Macmillan & Co.,) Illustrated—superior feather weight paper— Cloth gilt. With an Introduction by Sir P. S. Sivaswamy Iyer | 1—8—0 |
| 9. | *The Ballad of the Penniless Bride*—superior feather weight paper— | 0—4—0 |
| 10. | *Manimekalai** — (Tamil Classics for English Readers Series) — — | 0—12—0 |
| 11. | *Nanda** — Illustrated — The Pariah who overcame Caste | 0—9—0 |
| 12. | *Markandeya**—Illustrated—The youth who conquered fate | 0—5—0 |
| 13. | *Kusika's Short Stories*—I & II Series | revised edition |
| 14. | *Lieut Panju*—a Modern Indian | in the press. |

*These books have been approved by the Education Dept. for use in schools.

**NOTE.**—Other Books are also sold by us :—

## The Authors' Press & Publishing-House

**Printers, Publishers, Booksellers, Stationers & Commission Agents,**

MYLAPORE-MADRAS.

ஸ்ரீமான்

## அ. மாதவையர், பி. ஏ.,

இயற்றிய தமிழ்ப் புஸ்தகங்கள்

| | | |
|---|---|---|
| | | ரூ—அ—பை |
| 1. | பத்மாவதி சரித்திரம்—இரண்டு பாகங்களும் கூடியது. சித்திரப்படங்களுடன்—5—ம்பதிப்பு | 2—0—0 |
| 2. | விஜயமார்த்தாண்டம்—காதற்பத்து - கற்புப் பத்து – 2ம் - பதிப்பு—நவரஸம்கொழிக்கும் நாவல். | 1—4—0 |
| 3. | முத்துமீனாக்ஷி-கையில் இருப்பில்லை-சீக்கிரம் வெளிவரும்— | |
| 4. | உதயலன்—ஷேக்ஸ்பியர்கவீந்திரரின் மிகச் சிறந்த ஒதெல்லோ நாடகத்தை அமைத்தெழுதியது—2-ம் பதிப்பு— | 0—12—0 |
| 5. | திருமலை சேதுபதி—தீவிரதேசபக்தியை உண்டாக்கும் அருமையான நாடகம்— | 0—8—0 |
| 6. | சித்தார்த்தன்—கௌதம புத்த பிரானது திவ்யசரித்திரத்தைத் தனித்தமிழ் வசனநடையில் அழகாய்க் கூறுவது—புத்த சரிதை என்னும் காவிய அநுபந்தத்துடன் கூடியது— | 0—12—0 |
| 7. | பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய் நவரசங்கொழிக்கக்கூறுவது— | 0—12—0 |
| 8. | பாலவிநோதக்கதைகள்—சிறுவர் சிறுமிகளுக்கேற்ற அருமைக் கதைகள்—சித்திரப்படங்களுடன்— | 0—4—0 |
| 9. | பொதுதர்மசத்கீதமஞ்சரி—மிகச்சிறந்த தேசிய கீதங்கள் முதலியன— | 0—4—0 |
| | ஷை—ஷை—கில்டு பைண்டிங்— | 0—12—0 |
| 10. | இந்தியக்கும்மி—மட்டும்— | 0—0—6 |
| 11. | புதுமாதிரிக் கல்யாணப் பாட்டு—யாவரும் கட்டாயம் வாசிக்கவேண்டியது— | 0—2—0 |
| 12. | ஆசாரச் சீர்திருத்தம்— | 0—2—0 |
| 13. | பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம்— | 0—6—0 |

குறிப்பு:—இவை தவிர வேறு புஸ்தகங்கள் பலவும் நம்மால் விற்கப்படும்.

## ஆசிரியர் அச்சுப்பிரசுராலயம்--

## புஸ்தகசாலை

எட்வர்டு எலியட்ரோடு, மயிலாப்பூர்—சென்னை.

ஆசிரியர்
அச்சுப்பிரசுராலயம்–புஸ்தகசாலை
மயிலாப்பூர்–சென்னை

குறிப்பு:—மற்றப் பாகங்கள் விரைவில் வெளிவரும்.